# உதயன்

விலை ரூ.20

பக்கம் 28

சுடர் 30 | கதிர் 080 | வள்ளுவர் ஆண்டு 2046 | மாசி 2 சனிக்கிழமை | 14-02-2015


## மைத்திரிபால காலடிட தவமிருக்கிறது பாரதம்!



கொழும்பு, பெப்.14
ஜனாதிபதி மைத்திரிபால இந்தியாவில் எப்போது காலடி வைப்பார் என்று பாரத தேசம் முழுவதுமே காத்திருக்கின்றது என்று தெரிவித்துள்ளார் அந்நாட்டுப் பிரதமர் நரேந்திர மோடி.ஜனாதிபதி மைத்திரியுடன் தொலைபேசியில் உரையாடும்போதே மோடி இப்படிக் கூறியுள்ளார். ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு இந்தத் தகவலைத் தெரிவித்தது.

பக்.24

## கோத்தாவின் வீடு சென்று பொலிஸார் விசாரணை



கொழும்பு, பெப்.14
பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளனர். 'அவன்ட் காட்' மற்றும் 'ரக்ன லங்கா' தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான ஆயுதக் களஞ்சியசாலை குறித்தே அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

பக்.24

# திட்டத்தில் மாற்றம்

## எதிர்ப்பை அடுத்து வளலாய் மாதிரி கிராம திட்டத்தை மீளாய்வு செய்கிறது அரசு



யாழ்ப்பாணம், பெப்ரவரி 14
வளலாயில் மாதிரிக் கிராமம் அமைக்கப்பட்டு அதில் மீள்குடியேற்றத்தை மேற்கொள்ளும் அரசின் திட்டத்துக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து அந்தத் திட்டம் மீளாய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளது.
விடுவிக்கப்படவுள்ள ஆயிரம் ஏக்கர் காணிகளும் யார் யாருக்குச் சொந்தமான வையோ அவர்களுக்கே வழங்கப்படும். அவ்வாறு திட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதுகுறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் பேசப்பட்டுள்ளது.
இவ்வாறு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

பக்கம் 24

## பாதுகாப்பின் பெயரில் படைகளின் உல்லாசம்!

யாழ்ப்பாணம், பெப்.14
பாதுகாப்பைக் காரணம் காட்டி தமிழ் மக்களின் காணிகளைக் கையகப்படுத்தியுள்ள இலங்கை இராணுவத் தரப்பு, அங்கு உல்லாச வாழ்க்கை வாழ்கின்றனர்.
மக்களுக்கு தெரியப்படுத்தப்படாது காங்கேசன்துறையில் துறைமுக அதிகார சபைக்குக் காணிகள் கையகப்படுத்தப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டும் உள்ளன.



மஹிந்த ஆட்சியில் அமைக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகை காங்கேசன் துறைமுகத்தில் நின்று பார்க்கும்போது.





பக்கம் 24

## போர் வெற்றிக் கொண்டாட்டம் பெயர் மாற்றத்தோடு தொடரும்

### அமைச்சரவையின் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டார் மைத்திரி

கொழும்பு, பெப்.14
முன்னைய மஹிந்த அரசால் கொண்டாடப்பட்ட புலிகளுக்கு - தமிழ் மக்களுக்கு - எதிராக நடத்திய போர் வெற்றிக் கொண்டாட்டங்களை தற்போதைய மைத்திரி அரசு தொடர்ந்து கொண்டாடவுள்ளது.

பக்கம் 24

## சர்வதேச தரத்தோடு இலங்கை பொறுப்புக் கூறினால் போதும்

### அதைக் கண்காணிப்போம் என்கிறது ஐ.நா.

கொழும்பு, பெப்.14
போர்க் குற்றம் தொடர்பில் இலங்கை பொறுப்புக் கூற வேண்டும். அதில் மாற்றமில்லை. அது சர்வதேச தரத்துக்குரியதாக இருக்க வேண்டும். ஐ.நா. சபை அதைத் தொடர்ந்து கண்காணிக்கும்.
இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான் கீ - மூன் தெரிவித்தார்.



பக்கம் 24

## ஐ.நா. அறிக்கையின் கதி பற்றி எதிர்வரும் திங்கள் முடிவாம்!

### 'ரொய்ட்டர்ஸ்' கூறுகின்றது

கொழும்பு, பெப்.14
இலங்கை தொடர்பான போர்க் குற்ற விசாரணை அறிக்கையை அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. அமர்வில் எடுத்துக் கொள்வதா? இல்லையா? என்பது தொடர்பில் நாளை மறுதினம் திங்கட்கிழமையே முடிவு செய்யப்படவுள்ளது. ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை இந்தத் தகவலை தெரிவித்துள்ளது.

பக்கம் 24

## அடி சறுக்கிய மோடி

பக்கம் 16

## விசாரணை முடிந்துவிட்டது தீர்மானம் என்ன செய்யும்?

### வெளிவிவகார பிரதி அமைச்சர் கேட்கின்றார்

கொழும்பு, பெப்.14
ஐ.நா.விசாரணை முடிந்துவிட்டது. வடக்கு மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றினால் என்ன?. நிறைவேற்றா விட்டால் என்ன?. ஐ.நா.விசாரணையில் வடக்கு மாகாண சபையின் பிரேரணை எந்தத் தாக்கத்தையும் செலுத்தாது.
இவ்வாறு வெளிவிவகார பிரதிஅமைச்சர் அஜித்பெரேரா கூறினார்.

பக்கம் 24

## டிமிக்கி விட்டு தப்பினார் சந்தேகநபர்

யாழ்ப்பாணம் பெப்.14
பொலிஸ் பாதுகாப்பில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் பொலிஸாருக்கு டிமிக்கி கொடுத்து விட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளார்

பக்கம் 26

## ஐ.நா. அறிக்கை உடன் வேண்டும்

### வலியுறுத்தி வெள்ளியன்று யாழ்ப்பாணத்தில் பேரணி

யாழ்ப்பாணம், பெப்.14
இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்த விசாரணை அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என்று கோரி யாழ்ப்பாணத்தில் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள இந்தப் பேரணி யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பக்கம் 24

## நீதியான தேசம் உருவாக்கப்பட வேண்டும்

பக். 17

## "தினமும் துடித்து அழிகின்றோம் உறவுகளை மீட்டுத் தாருங்கள்"

### 1998 ஆம் ஆண்டு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் உருக்கமான வேண்டுகோள்

யாழ்ப்பாணம், பெப்.14
தற்போது நாட்டில் நல்லாட்சி பற்றிய முணுமுணுப்புகள் கேட்கின்றன. 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் பற்றி எண்ணித் தினம் தினம் துடித்து அழிகின்றோம். அவர்களை மீட்டுத் தாருங்கள்.
இவ்வாறு உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளது 1998ஆம் ஆண்டு காணாமல் போனோர் பாதுகாவ லர் சங்கம்.

பக்கம் 24

## வடக்கு இளைஞர்களுக்கு துறைமுக வேலைவாய்ப்பு

### அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கூறுகிறார்

யாழ்ப்பாணம், பெப். 14
காங்கேசன்துறை முகத்தை வர்த்தகத் துறைமுகமாக அபிவிருத்தி செய்வது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். அதனூடாக வடபகுதி இளைஞர் – யுவதி களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும்.
இவ்வாறு கப்பல் மற்றும் துறைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

பக்கம் 24

## இந்தியப் படகுகளை மீட்க வருகிறது குழு

யாழ்ப்பாணம்.பெப்.14

இலங்கை அரசால் விடுவிக்கப்பட்டுள்ள படகுகளை மீட்டுக் கொண்டு செல்வதற்கு 150 பேர் கொண்ட மீட்புக் குழுவினர் அடுத்த வாரமளவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

நல்லிணக்க அடிப்படையில் இந்திய மீனவர்களின் படகுகள் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விடுவிக்கப்பட்டுள்ளன. எனினும் விடுவிக்கப்பட்ட படகுகளை பொறுப்பேற்க இந்திய மீன்வளத்துறை அதிகாரிகள் படகுகளின் ஆவணங்களுடன் வருகை தரவேண்டும் என நீதிமன்றால் தெரிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து, மீன்வளத்துறை அதிகாரி உட்பட 5 பேர் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்தக் குழுவினர் தமிழகம் திரும்பிய பின்னர் படகுகளைக் கொண்டு செல்ல 150 மீனவர்கள் மீட்புக் குழுக்களாக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

மீட்புக் குழுவினரை விமானம் மூலமாகவோ அல்லது கடல் வழியாகவோ அனுப்பி வைப்பதற்கான சகல ஒழுங்குகளையும் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.

விடுவிக்கப்பட்டுள்ள படகுகள் பழுதடைந்த நிலையில் இருப்பதால் அவற்றைத் திருத்தம் செய்தே கொண்டு செல்ல முடியும். இலங்கைக் கடற்படை, இந்தியக் காவல் படையினரின் ஒத்துழைப்புடன் படகுகளை தனுஷ்கோடி கரைக்கு கொண்டு சேர்ப்பதற்கான ஏற்பாடுகளையும் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.

மீட்புக் குழுவில் படகு உரிமையாளர் உட்பட உதவியாளர் ஒருவரும் இலங்கைக்கு வருகை தருவர். இதற்கான ஒழுங்குகளை ஏற்கனவே படகு உரிமையாளர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இலங்கைக்கு செல்வதற்கான அனுமதியை தமிழக அரசு தரவேண்டி இருப்பதால் அதற்காக மீனவர்கள் காத்திருப்பதாக படகு உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார். (த-14)

## கழிவு ஒயிலினால் பாதிப்பு; புதிய செயலணி ஆரம்பம்

வலி. வடக்கு, பெப். 14

சுன்னாகம் மின்சார நிலையத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட கழிவு ஒயிலினால் பாதிக்கப்பட்ட வலிகாமம் பகுதி மக்கள் உட்பட்ட அனைவரையும் உள்ளடக்கி புதிய செயலணி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவில் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இதுவரை சுன்னாகம் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களைக் கொண்ட செயலணியால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தவேண்டிய தேவையும், அவசியமும் ஏற்பட்டுள்ளமையால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கழிவு ஒயில் பிரச்சினை இப்போது வலி.தெற்கைக் கடந்து வலி.வடக்கு, வலி. கிழக்கு பிரதேசங்களுக்கும் பரவியுள்ள நிலையில் அந்தப் பகுதி மக்களையும் இணைத்து பிரச்சினைகளுக்கான தீர்வை முன்னெடுக்கும் வகையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. (த-86)

# பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக உடனடி நடவடிக்கை

### இராமநாதன்– தம்பிராசா வழக்கில் யாழ்.நீதிமன்றம் நேற்று உத்தரவு

யாழ்ப்பாணம், பெப். 14

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கஜனின் தந்தையான இராமநாதன் சட்டத்தரணிகள் ஊடாக யாழ்.நீதிமன்றில் சரணடைந்தார். வழக்கில் உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்கிய யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி யாழ்.நகர மின்சார நிலைய வீதியில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் பரப்புரையின்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் இடையே மோதல் இடம்பெற்றது. இதன்போது கூட்டமைப்பு வேட்பாளர் தம்பிராசாவின் வாகனம் சேதமாக்கப்பட்டதோடு அவரும் காயமடைந்திருந்தார்.

அது தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் அன்றைய தினமே முறைப்பாடு செய்யப்பட்டதுடன் அவரது வாக்குமூலத்தில், தன்னைத் தாக்கிய குழுவில் இருந்தவர்களில் இராமநாதன், அன்பழகன் ஆகியோரை அடையாளம் கண்டதாகத் தம்பிராசா தெரிவித்திருந்தார்.

ஆனால் 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 22 ஆம் திகதி அது தொடர்பில் யாழ்.நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்த பொலிஸார் சந்தேகநபர்களின் பெயர்களைக் குறிப்பிடாது மேலதிக அறிக்கைகளைத் தாக்கல் செய்ததுடன், இராமநாதன் வெள்ளவத்தையில் வசித்து வருவதனால் அவரைக் கைது செய்ய முடியவில்லை என்றும் தெரிவித்திருந்தனர். கடந்த 27 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு வந்த போது சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துமாறு நீதிவான் கட்டளை பிறப்பித்திருந்தார்.

இதனையடுத்து இராமநாதன், ஜனாதிபதி சட்டத்தரணி சானக்க ரணசிங்க மற்றும் கணாதீபன் ஆகியோர் மூலமாக நீதிமன்றில் நேற்றுச் சரணடைந்தார். அவரைக் கடுமையாக எச்சரித்த நீதிமன்று, தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணைகளில் விடுவித்தது. அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், பொலிஸார் இந்த வழக்கில் திட்டமிட்டுத் தவறான தகவல்களை நீதிமன்றுக்கு வழங்கி திசை திருப்பியுள்ளனர். இராமநாதன் அடிக்கடி யாழ்ப்பாணத்துக்கு வந்து செல்வதாகவும், யாழ்.பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் அவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் அவர் மாதாந்தம் இறுதி வெள்ளிக்கிழமைகளில் கையெழுத்திடுவதாகவும், கடந்த தவணை யாழ்.நீதி மன்றில் வழக்கு எடுக்கப்பட்ட அதே தினம் அவர் சாவகச்சேரி நீதிமன்றில் யாழ்.பொலிஸாரின் வழக்குக்கு வந்திருந்தார் என்றும் தெரிவித்தனர்.

இதனையடுத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமாறு உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. இந்தச் சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக சமன் சிகேரா பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-4-103)

# நயினாதீவு பாடசாலைகளின் தேவைகள் நேரில் ஆராய்ந்தனர் கூட்டமைப்பினர்



யாழ்ப்பாணம், பெப். 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நயினாதீவுக்கு பயணம் மேற்கொண்டனர்.

முதலில் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட ருத்திராபிசேக வழிபாடுகளில் இவர்கள் கலந்துகொண்டனர். அதன் பின்னர் நயினாதீவில் உள்ள மூன்று பாடசாலைகளுக்கும் நேரில் சென்ற அவர்கள் பாடசாலைகளின் தேவைகள் குறித்து ஆராய்ந்தனர்.

நயினாதீவு மகா வித்தியாலயம், நயினாதீவு கணேசா கனிஷ்ட மகா வித்தியாலயம், நயினாதீவு நகாபூஷணி வித்தியாலயம் ஆகியவற்றுக்குச் சென்ற இந்தக் குழுவினர் பாடசாலை சமூகத்தினரைச் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது மூன்று பாடசாலைகளுக்கும் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்ட நிதியிலிருந்து தலா 50 ஆயிரம் ரூபாவை வழங்குவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பாடசாலை அதிபர்களிடம் உறுதியளித்தார். அதேவேளை, நயினாதீவு கணேசா கனிஷ்ட மகா வித்தியாலயத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாவையும், அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் 50 ஆயிரம் ரூபாவையும் வழங்குவதாக உறுதியளித்தனர்.

பாடசாலைகளின் தேவை மதிப்பீடுகள் குறித்து விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிபர்களிடம் கேட்டுக்கொண்டனர்.

அத்துடன் நயினாதீவு 2 ஆம், 3 ஆம் குறுக்கு வீதிகளுக்கும் நேரில் சென்ற இந்தக் குழுவினர் அங்குள்ள மக்களின் குறைநிறைகள் குறித்து கேட்டறிந்தனர், வீதித் திருத்தம், துறைமுக அபிவிருத்தி உட்பட அங்குள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து தேவை மதிப்பீட்டு விவரங்களை தம்மிடம் சமர்ப்பிக்குமாறும், அது குறித்து உரிய அதிகாரிகளுடன் பேசி நடவடிக்கை எடுப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களிடம் கூறினர்.

இதில் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களான எவ்.எக்ஸ். குலநாயகம், பொ.கனகசபாபதி ஆகியோரும் பங்கேற்றனர். (த)

## கழிவு ஒயில் வழக்கின் உண்மை பிரதி தருக

### நொதேர்ன் பவர் மேன்முறையீடு அடுத்த வாரத்துக்கு ஒத்திவைப்பு

“ மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் உட்பட நான்கு சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர். அவர்கள், நொதேர்ன் பவர் மின் நிலையத்தைத் திறக்க அனுமதி கோரினர். அதனைப் பராமரிக்க வேண்டும் என்றும், பராமரிக்காவிட்டால் அது பழுதடைந்து விடும் என்றும் மேல் நீதிமன்றில் அவர்கள் கோரியிருந்தனர்.

யாழ்ப்பாணம், பெப். 14

கழிவு ஒயில் வழக்கில் நொதேர்ன் பவர் நிறுவனத்தை தற்காலிகமாக மூடுமாறு நீதிமன்று உத்தரவிட்டதை அடுத்து அதற்கு எதிராக மேன் முறையீடு செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வழக்கு ஆவணத்தின் உண்மைப் பிரதியைச் சமர்ப்பிக்குமாறு மல்லாகம் நீதிமன்றுக்கு யாழ்.மேல் நீதிமன்று பணித்துள்ளது.

சுன்னாகம் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள கிணறுகளில், கழிவு ஒயில் கலப்பது தொடர்பான வழக்கில் நொதேர்ன் பவர் மின் உற்பத்தி நிலையத்தைத் தற்காலிகமாக மூடிவிடுமாறு மல்லாகம் நீதிமன்று கடந்த மாதம் உத்தரவிட்டிருந்தது. இதனையடுத்து அந்த உற்பத்தி நிலையம் சீல் வைத்து மூடப்பட்டது.

அவ்வாறு மல்லாகம் நீதிமன்று விதித்த உத்தரவை நிராகரிக்குமாறு கோரி நொதேர்ன் பவர் சார்பில் அவர்களது சட்டதரணிகளால் யாழ்.மேல் நீதிமன்றில் கடந்த மாதம் மேன்முறையீடு செய்யப்பட்டது. அதனை ஏற்றுக்கொண்ட மேல்நீதி மன்று, வழக்கின் எதிர் மனுதாரரும் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தொடுநருமான 11 பேர் கொண்ட குழுவினருக்கு அறிவித்தல் அனுப்பியிருந்தது.

நேற்று இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் உட்பட நான்கு சட்டத் தரணிகள் முன்னிலையாகியிருந்தனர். அவர்கள், நொதேர்ன் பவர் மின் நிலையத்தைத் திறக்க அனுமதி கோரினர். அதனைப் பராமரிக்க வேண்டும் என்றும், பராமரிக்காவிட்டால் அது பழுதடைந்து விடும் என்றும் மேல் நீதிமன்றில் அவர்கள் கோரியிருந்தனர். ஆனால் எதிர்மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வி.மணிவண்ணன், அதனைத் திறக்க அனுமதி வழங்கக்கூடாது என்றும், விஞ்ஞான ரீதியான ஆய்வு நடத்துவதாக இருந்தால் நீதிமன்றின் அனுசரணையுடன் அதனைத் திறந்து ஆய்வு செய்வதில் ஆட்சேபனை இல்லை என்றும் மன்றில் கூறியிருந்தார்.

இதனையடுத்து மல்லாகம் நீதிமன்றில் உள்ள வழக்கின் உண்மைப் பிரதியைச் சமர்ப்பிக்குமாறு மேல்நீதி மன்று பணித்தது. வழக்கின் எதிர் மனுதாரர்களில் நான்கு பேர் நேற்று மேல்நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். (த-4)

# கிண்ணத்தை மீண்டும் கொண்டுவருவார்கள்

## ரணதுங்க நம்பிக்கை



இலங்கை அணி வீரர்கள் உலகக் கிண்ணத்தை மீண்டும் நாட்டுக் கொண்டு வருவார்கள் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ள, இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் ரணதுங்க, அதற்காகப் பிரார்த்திப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். காங்கேசன்துறை துறைமுகத்துக்கு நேற்று மதியம் வருகை தந்த துறைமுக அமைச்சரும், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவரு மான ரணதுங்க அங்கு ஊடகவியலாளர்களுடன் சந்தித்துப் பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று உலகக் கிண்ண ஆட்டத்தில் இலங்கை – நியூஸிலாந்தை எதிர் கொள்கின்றது. இந்த உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி வெற்றி கொள்ளுமா என்று கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த அர்ஜுன ரணதுங்க, இலங்கை அணி நாட்டுக்கு நிச்சயம் மீண்டும் கிண்ணத்தைக் கொண்டு வருவார்கள். எனக்கு அந்த நம்பிக்கை இருக்கின்றது. அதற்காகப் பிரார்த்திக்கின்றேன். ஒவ்வொருவரும் அதற்காகப் பிரார்த்தியுங்கள்.



இலங்கை – ஆசிய – மைதானங்களுக்கும், ஆஸ்திரேலிய – நியூஸிலாந்து மைதானங்களுக்கும் இடையில் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. அந்த மைதானங்களில் ஆடும் போது, மிகுந்த சவாலான – கடினமான – ஆட்டமாகவே இருக்கும்.

இலங்கை அணியைப் பொறுத்த வரையில் சிரேஷ்ட வீரர்கள் மஹேல – சங்கா இருவரும் இந்த உலகக் கிண்ணத் தொடருடன் ஓய்வுபெறவுள்ளனர். அவர்களுக்காக கிண்ணத்தை வெல்ல வேண்டிய கடப்பாடு இலங்கை அணி வீரர்களுக்கு உண்டு. அதற்காக மாத்திரம் அல்லாமல், இலங்கை அணி வீரர்கள் நாட்டுக்கு கிண்ணத்தை மீண்டும் கொண்டு வருவதற்காக விளையாட வேண்டும்.

இலங்கை அணி வீரர்கள் குழுவாக, அதற்கு அப்பால் ஓர் குடும்பமாக விளையாட வேண்டும். அவர்கள் கடந்த ஒன்றரை மாதங்களாகவே அவ்வாறுதான் ஆடுகின்றார்கள். ஒரு குடும்பமாக விளையாடி நாட்டுக்கு மீண்டும் கிண்ணத்தை வெற்றி பெற்றுக் கொண்டு வருவார்கள் என்று அவர் குறிப்பிட்டார். (5)

# வெற்றிக்கு காத்திருக்கிறோம்



நியூஸிலாந்து மண்ணில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தாலும் நாளைய (இன்றைய) ஆட்டதில் எமது முதல் வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்காக காத்திருக்கின்றோம். நாங்கள் நியூஸிலாந்து எதிராக ஆக்ரோஷமாக விளையாடுவோம் என்று இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரின், இலங்கை – நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டம் இன்று அதிகாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இந்த ஆட்டம் தொடர்பில் நேற்று நடந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மத்தியூஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நியூஸிலாந்தில் கடந்த சில ஆட்டங்களில் மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்தோம். அதிலிருந்து நாம் மீண்டெழுந்துள்ளோம். நாளைய (இன்றைய) ஆட்டத்துக்கு முழுவதுமாக தயாராகியுள்ளோம். முன்னணி வீரர்கள் சிறப்பாக செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

உலகக் கிண்ணங்களில் விளையாடிய அனுபவமான வீரர்கள் எமது அணியில் 6 பேர் வரையில் இருக்கின்றனர். அவர்களது அனுபவங்கள் எமக்கு இந்தத் தொடரில் கைகொடுக்கும். நாளைய (இன்றைய) ஆட்டத்தில் கடந்த தொடரில் விட்ட தவறுகளைத் திருத்திக் கொண்டு அணியாக விளையாடுவோம்.

மலிங்கவைப் பற்றி யாருக்கும் சந்தேகம் தேவையில்லை. அவர் பூரண உடற்தகுதியை வெளிப்படுத்தியுள்ளார். எமது பதினொருவர் அணியில் அவர் இடம்பெறுவார். எங்களது பந்து வீச்சு, நியூஸிலாந்து மண்ணில் மோசமாக இருந்ததை நான் அறிவேன். குறிப்பாக சுழற் பந்து வீச்சாளர்களால் சிறப்பாக செயற்பட முடியவில்லை. இங்கு தொடர்ந்து ஆடியதன் ஊடாக, நியூஸிலாந்து மைதானங்களின் தன்மைக்கு ஏற்ப எவ்வாறு பந்து வீச வேண்டும் என்று அவர்கள் கற்றுள்ளனர். இதனால் நியூஸியுடனான ஆட்டத்தில், அந்த அணிக்கு சவால் விடுக்கும் வகையில் எங்கள் பந்து வீச்சு அமையும்.

நாளைய (இன்றைய) ஆட்டம் இடம் பெறும் மைதானம் பந்து வீச்சுக்கு சாதகமானது. ஆனால் வானிலை தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கின்றது. நாளை (இன்று) நல்ல வானிலையாக இருக்கும் என்று எதிர்பார்கின்றோம். நாங்கள் முதலில் துடுப் பெடுத்தாடுவதைத் தான் விரும்புகின்றோம். இந்தத் தொடரில் அதனையே செய்வோம் – என்றார். (5)

# துளித்துளியாக உலகக் கிண்ணம்

⇧ உலகக் கிண்ணத்துக்கு முன்பாக சர்வதேச ஒருநாள் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டது. இதில், அணிகள் தரவரிசையில் ஆஸ்திரேலியா முதலி டத்தையும், இந்தியா இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளன. மூன்றாவது இடத்தை தென்னாபிரிக்காவும், நான்காவது இடத்தை இலங்கையும் பெற்றுள்ளன.

⇧ உலகக் கிண்ணத் தொடரில் இன்று இடம்பெறும் இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் விளையாட மாட்டார் என்று அந்த அணியின் பயிற்சியாளர் லீமேன் தெரிவித்துள்ளார். காயத்தினால் பாதிக்கப்பட்டிருந்த அவர் பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் விளையாடுவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

⇧ நண்பர்களுடன் இரவு விருந்துக்கு சென்று விட்டு, 45 நிமிடம் தாம தமாக வந்ததற்காக பாகிஸ்தான் அணி யின் முன் னாள் அணித் தலைவர் அப்ரிடி உட்பட 8 வீரர்களுக்கு அந்த அணியின் மேலாளர் நவீத் சீமா தலா 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார். இனியும் தாமதமாக வந்தால் உடனடியாக நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று அணி நிர்வாகம் எச்சரித்துள்ளது.

⇧ உலகக் கிண்ணத் தொடரை முன்னிட்டு, தனது இணையத் தள பக்கத்தை மேம்படுத்தப்பட்ட வகையில் வடிவமைத்துள்ளது ஐ.சி.சி. இணையத்தள தொடர்புடன் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அதிவிரைவாக 'ஸ்கோர்களை' நேரடியாகப் பெற முடியும். மேலும் பல்வேறு புள்ளி விவரங்களையும் அந்தந்த நொடிகளிலேயே பெறவும், பழைய தகவல்களைப் பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது. (5)

உதயன் கிரிக்கெட் கொண்டாட்டம்



# வெடிக்கின்றது போர்

கிரிக்கெட் ரசிகர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த உலகக் கிண்ணப் போர் இன்று காலை தொடங்குகின்றது. இலங்கை – நியூஸிலாந்து அணிகளுக்கிடையில், இன்று அதிகாலை 3.30 மணிக்கு பதினொராவது உலகக் கிண்ணத்தின் முதலாவது ஆட்டம் இடம்பெறவுள்ளது.

நான்கு வருடங்களுக்கு ஒரு முறை ரசிகர்களின் தூக்கத்தை கெடுக்கும் உலகக் கிண்ணத் திருவிழா, இந்த முறை நியூஸிலாந்து – ஆஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ளது. சும்மாவே கிரிக்கெட் ஆட்டங்கள் என்றாலே, ரசிகர்கள் நித்திரை முழித்திருந்து ஆட்டத்தைப் பார்ப்பார்கள். ஆனால் இந்த முறை நிலைமை கொஞ்சம் வேறு மாதிரி. நேரத்துடன் படுத்து, அதிகாலை எழும்பியிருந்து ஆட்டத்தைப் பார்க்க வேண்டியுள்ளது.

கிரிக்கெட் ரசிகர்களுக்கு, அதிகாலையோ – இரவோ, ஆட்டத்தை நேரடியாகப் பார்ப்பதிலும், அதிலும் நண்பர்களுடன் கூட இருந்து ரசிப்பதிலும் உள்ள ரசனையோ தனிதான். தம்மைக் களத்தில் விட்டால், வெட்டி வீழ்த்துவோம் என்ற கணக்கில் அரட்டை வேறு அடிப்பார்கள். உலகக்கிண்ணச் காய்ச்சலால் பெரும்பாலான வீடுகள் ரணகளமாகியிருக்கும். ஆனாலும், இந்த முறை அதிகாலை ஆட்டம் என்பதால், சின்னத்திரைப் பிரியர்களான–பெண்களுக்கும், கிரிக்கெட் பிரியர்களுக்கும் மோதல் வராமல் தப்பித்துக் கொண்டது. சூடான உலகக்கிண்ண மோதல் இன்னும் இரண்டு மாதத்துக்கு கொண்டாட்டம் தான்.... (5)





# வெற்றிடத்தை நிரப்பவே முடியாது

இலங்கையின் சரித்திர – நட்சத்திர நாயகர்களின் – வெற்றிடத்தை யாராலுமே நிரப்ப முடியாது. அவர்கள் மிகப்பெரிய துளையை – இடைவெளியை – இலங்கை அணிக்கு ஏற்படுத்தியுள்ளனர் என்று இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நடப்பு உலகக்கிண்ணத்துடன், இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர்களான சங்ககார – மஹேல ஜெயவர்தன இருவரும் ஓய்வு பெறவுள்ளனர். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே முரளிதரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மஹேல – சங்கா இருவருமே கடுமையாக உழைத்தனர். ஆனால் அவர்களின் விளையாட்டு அணுகு முறைகள் வேறு மாதிரியானதாக இருந்தது. இருவரும் விளையாட்டை வெவ்வேறு விதமாகவே அணுகினார்கள். அவர்கள் தமது பாதைகளைத் தனித் தனியாக அமைத்துக் கொண்டார்கள். அதனூடாகவே தம்மை முன்னேற் றிக் கொண்டார்கள்.

அவர்கள் இருவருமே இலங்கை அணியின் துடுப்பாட்ட நட்சத் திர பட்டியலில் இரட்டையர்களாக இருக்கின்றனர். அவர்கள் இந்த உலகக் கிண்ணத்துடன் தமது ஓய்வை அறிவித்து வெளியேறுவதானது, இலங்கை அணிக்கு மிகப் பெரிய இழப்பாகும் – என்றார். (5)

# என்ன சொல்கின்றார்கள் ?



உலகக் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்காவின் ஏ.பி. டிவில்லியர்ஸ், ஆஸ்திரேலியாவின் கிளென் மக்ஸ்வெல், டேவிட் வோர்ணர் ஆகியோர் ஆதிக்கம் செலுத்துவர். இந்த மூன்று வீரர்களும் நிகழ்த்தும் வாண வேடிக்கை பார்வையாளர்களுக்கு பரவசத்தை ஏற்படுத்தும். எந்தவொரு பந்துவீச்சாளரும் இந்த மூவரைப் பார்த்து நடுங்குவர். இவர்களை ஓட்டங்கள் எடுக்காமல் கட்டுப்படுத்துவதைவிட, ஆட்டமிழக்கச் செய்வதே சிறந்தது. ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா அணிகளுக்கு கிண்ணம் வெல்ல நல்ல வாய்ப்பு உள்ளது.

**வாசிம் அக்ரம்– பாக். முன்னாள் அணித் தலைவர்**



முடிவுகளை மறுபரிசீலனை செய்யும் டி.ஆர்.எஸ். முறையின் ஒரு பகுதியாக ஹொட் ஸ்பொட் முறை பின்பற்றப் படமாட்டாது. இந்த முடிவில் மாற்றமில்லை. இந்த முறையைப் பயன்படுத்தும் போது சில நேரங்களில் குழப்பம் ஏற்படுகிறது. ஸ்னிக்கோ (ஆர்டிஎஸ்) முறையே பின்பற்றப்படும்.

**டேவ் ரிச்சர்ட்ஸன் ஐ.சி.சி.**



பங்களாதேஷ், இங்கிலாந்துக்கு எதிரான இரு பயிற்சி ஆட்டங்களிலும் பாகிஸ்தான் வென்றுள்ளது. அதை வைத்து ஒரு முடிவுக்கு வர முடியாது. இருப்பினும், அந்த ஆட்டத்தில் பெற்ற வெற்றி மனோநிலையிலிருந்து அணியினர் விலகிச் சென்றுவிடக்கூடாது. அந்த ஆட்டங்களில் பந்துவீச்சு, களத்தடுப்பு ஆகியவற்றில் சிறப்பாகச் செயற்பட்டதை சாதகமாக எடுத்துக் கொண்டு முன்னேற வேண்டும். (5)

**வக்கார் யூனிஸ்– பாக். முன்னாள் அணித் தலைவர்**

# மோடி அசத்தல் வாழ்த்து



உலகக் கிண்ணத்தில் பங்கேற்ற இந்திய அணிக்கு அந்த நாட்டுப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். தமது டுவிட்டர் வலைத்தளத்தில் இந்த வாழ்த்தைப் பகிர்ந்துள்ளார். இந்திய அணியின் ஒவ்வொரு வீரரையும் அவர் வாழ்த்தியுள்ளார். அவர்களது சாதனைகளையும், அவர்களிடமிருந்து ரசிகர்கள் என்ன எதிர்பார்க்கின்றனர் என்பதையும் குறிப்பிட்டு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

✶ 'கூல் கப்டன்' டோனிக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள். அதிரடியாக ஆடுங்கள், அணியை நன்கு வழிநடத்துங்கள், இந்தியாவை பெருமைப்படுத்துங்கள். நீங்கள் நிச்சயம் செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

✶ துணைத்தலைவர் கோஹ்லி, உங்கள் மீது ஒட்டு மொத்த நாட்டு மக்களும் நம்பிக்கை வைத்துள்ளனர்.

✶ தவான், நீங்கள் நல்ல தொடக்கத்தைத் தாருங்கள், ஓட்டங்களை விளாசுங்கள். உங்களை உற்சாகப்படுத்த இங்கு நாங்கள் இருக்கிறோம்.

✶ இரட்டைச் சதம் அடித்த ஒரே வீரரான ரோஹித் சர்மா, மீண்டும் ஒருமுறை எங்களை பெருமைப்படுத்துங்கள்.

✶ எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கும் ரெய்னா, உங்கள் அதிரடியான ஆட்டத்தால் 'பவுன்சர்' உட்பட அனைத்து விதமான பந்துகளையும் மைதானத்துக்கு வெளியில் போகுமாறு விளாசுங்கள்.

மேலும், ரஹானே, ராயுடு, அஷ்வின், அக்சர் பட்டேல், மோகித் சர்மா, முகமது சமி, உமேஷ், ஜடேஜா, பின்னி, புவனேஸ்வர் ஆகிய வீரர்களுக்கும் தமது வாழ்த்துக்களைக் கூறியுள்ளார். (5)



# இந்தியா தீவிர பயிற்சி

உலகக் கிண்ணத் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை, பாகிஸ்தானை இந்தியா எதிர்கொள்கின்றது. இந்த ஆட்டத்துக்காக இந்திய அணி வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியா சென்ற இந்திய அணி டெஸ்ட் (02), முத்தரப்பு ஒரு நாள் தொடரில் தோற்றது. உலகக் கிண்ண பயிற்சியில் முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவிடம் வீழ்ந்த இந்திய அணி, ஆப்கானிஸ்தானை வீழ்த்தி, அங்கு முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

பாகிஸ்தான் அணியுடனான ஆட்டத்துக்கு, தயாராகும் வகை யில், டோனி உள்ளிட்ட அனைத்து வீரர்களும், அங்குள்ள பாடசாலை மைதானத்தில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.

கோஹ்லி வழக்கமான பயிற்சி சீருடையில் இல்லாமல், கறுப்பு நிற உடையில் வந்தது வியப்பாக இருந்தது. அங்கிருந்து 3 அல்லது 4 நிமிட நடை பயணத்தில், அடிலெய்ட்ஓவல் மைதானம் சென்று, உள்ளரங்கில் வலைப்பயிற்சி, உடற் பயிற்சியில் ஈடுபட்டார். (5)





உலகக் கிண்ணத்தின் பங்கேற்கும் 10 அணித் தலைவர்கள்
(எஞ்சிய 4 அணித் தலைவர்களும் நியூஸிலாந்தில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் பங்கெடுத்ததால் இந்தக் குழு ஒளிப்படத்தில் இடம்பெறவில்லை)









# உலகக் கிண்ணக் கொண்டாட்டம்

11 ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட்டின் ஆரம்ப விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை, ஆஸ்திரேலியா- நியூஸிலாந்தில் இடம்பெற்றது. அதன் வண்ணமயமான பதிவுகள்




# 2015 உலக கிண்ணமும் இந்திய அணியும்

ஏ.விநோதன்

நடைபெறவிருக்கும் கிரிக்கெட் உலகக் கிண்ணத்தொடர் பல அணிகளுக்கு மற்றும் பல வீரர்களுக்கு முக்கியமானது. நாளை (பெப்.14) அன்று ஆரம்பமாகும் இந்தக் கிரிக்கெட் திருவிழாவைக் கொண்டாட உலகமே காத்துக் கொண்டிருக்கிறது. இந்தத் தொடரில் பங்குபற்றும் அணிகளில் குறிப்பாக உலக ரசிகர்களினால் பெரிதும் எதிர்பார்க்கப்படும் அணிகளாக ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா, இந்தியா போன்றவை காணப்படுகின்றன. இங்கு ரசிகர்களால் முன்வைக்கப்படும் கேள்விகள், சொந்த மண்ணில் கிண்ணத்தைக் கைப்பற்றுமா ஆஸ்திரேலியா? கிண்ணத்தைத் தக்கவைக்குமா நடப்பு சம்பியன் இந்தியா? முதன் முறையாக கிண்ணத்தைக் கைப்பற்றுமா தென்னாபிரிக்கா?

உலகக் கிண்ணத் துக்கான இந்திய அணி பற்றி அவதானிக்கின்றபோது மொத்த அணிகளில் இளம் வீரர்களைக் கொண்ட அணியாக விளங்குகின்றது. கடந்த தொடரில் விளையாடிய முன்னணி அனுபவமிக்க வீரர்களாகிய ஷேவாக், கம்பீர், சச்சின், ஹர்பஜன்சிங், சகீர்கான் போன்றோர் அற்று காணப்படும் அணி. இந்தத் தொடருக்கான அணி தெரிவே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மேலும் கடந்த தொடரில் ஜொலித்த வெற்றிக்கு காரணமான யுவராஜ் கழற்றி விடப்பட்டமை ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்த அணியில் தெரிவு செய்யப்பட்டவர்களில் அணித் தலைவர் டோனியைத் தவிர ஏனைய வீரர்களின் சராசரி வயது 26 மாத்திரமே ஆகும். நடப்பு சம்பியன் இந்திய அணியைப் பொறுத்தவரையில் இளம் வீரர்கள் கொண்டு காணப்படுவது ஏனைய அணிகளிலும் பார்க்க இந்திய அணிக்கு பலமா? பலவீனமா? என்ற கேள்விக்கு விடை பலமே.

காரணம் புதிய விதிகளுடனான இந்தத் தொடரில் பவர்பிளே முக்கியமானது. இளம் வீரர்கள் தமது சுறுசுறுப்பான களத்தடுப்பு மூலம் இந்தியாவில் உலகக்கிண்ணத்தை தக்கவைக்க முடியும். மேலும் அணித் தலைவர் மகேந்திர சிங்க டோனி ஏனைய அணிகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைவார் என்பதில் ஐயமில்லை. காரணம் இவரது வியக்கவைக் கும் அணித் தலைமைப் பொறுப்பு இவரது எதிர்பாராத தீர்மானங்கள் மற்றும் முடிவுகள் ஆட்டத்தை மாற்றும் திறமை வாய்ந்த ஒன்றாகும்.

2011 ஆம் ஆண்டு தொடரில் இவரது அணித்தலைமை மற்றும் இறுதியாட்டத்தில் இவரது அதிரடியாட்டம் போன்றவை மறக்கமுடியாதவை. இவரது ஆட்டத்தினை பார்த்தால் இவரது வயது 33 எனக் கூறுவது கடினம். அதுமாத் திரமன்றி டோனிக்கு ஒற்றை இலக்க ஆண்டில் கொள்ளைப்பிரியம். 2007 ஐசிசி. ரி–20 உலகக்கிண்ணம் 2009 – ஐசிசி. டெஸ்ட் சம்பியன்ஷிப் 2011 – ஐ.சி.சி. உலகக் கிண்ணம் 2013 – ஐ.சி.சி சம்பியன் கிண்ணம் என்பன எடுத்துக்காட்டுகிறது. ஐ.சி.சியின் மூன்று வகை கிண்ணத்தையும் கைப்பற்றிய ஒரே அணித் தலைவர் என்பது வியக்க வைக்கிறது.

தற்போது நடைபெற்ற முத்தரப்பு தொடரில் இந்திய அணியினது செயற்பாடு ரசிகர்களுக்கு மகிழ்ச்சியளிக்க வில்லை. இருந்தாலும் அந்த அணியை சாதாரணமாக எடுத்துவிட முடியாது. இந்திய அணியின் பலம் சிறந்த ஆரம்பம். ரோகித், தவான் நேரடியாகப் பரிமாற்றங்களைச் சரியாக பாவித்தல். ஹோக்லி, ரஹானே, ஆட்டத்தை முடிக்கும் திறன். ரெய்னா, டோனி போன்றவர்களின் அதிரடிகள் காணப்படுகின்றன.

இந்திய அணியின் தற்போதைய பலவீனங்கள் என்று கூறுவது அவர்களது ஆரம்பம். அணிக்கு ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக தற்போது 3 வீரர்கள் தவான், ரோகித், ரஹானே போன்றோர் உள்ளனர். ஆனால் ரோகித் சர்மா இறுதியாக ஆஸிக்கு எதிரான ஆட்டத்தில் சதம் விளாசினாலும் காயம் காரணமாக ஏனைய ஆட்டங்களில் விளையாடவில்லை. தற்போதும் அவரது உடற்தகுதி கேள்விக்குரியதாகவே உள்ளது. இது இந்திய அணிக்கு துரதிஷ்டம். அடுத்த வீரராகிய ரஹானே தொடர் முழுவதும் சிறப்பாகவே செயற்பட்டார். இவர் மத்தியவரிசையிலும் சிறப்பாக ஆடிய வீரர் என்பது குறிப்பிட வேண்டிய விடயம். எனவே இம்முறை 3 வீரர்கள் ஆரம்ப துடுப்பாட்டத்துக்கு உள்ளனர். இருந்தாலும் ஸ்ருவட் பின்னியையும் ஆரம்பத்திற்கு இறக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அடுத்தது 3 ஆவது நிலை வீரர் என்பது ஹோக்லிக்கு கொடுக்கப்பட்டாலும் அண்மைக்காலமாக அவரை 4 ஆவது நிலைக்கு பின்தள்ளி ராயுடுவை 3ஆவது நிலையில் இறக்கினர். இதற்கு அணித்தலைவர் டோனி 'மிடில் ஓவர்களை' நன்கு பயன்படுத்துவதற்காகவே இதனை கையாள்வதாக கூறினார். இது தற்போதும் உறுதியாகவில்லை. ஆரம்ப துடுப்பாட்டம் சிறந்த முறையில் அமைந்தால் விராட் 3 ஆவது வீரராக விளையாடுவார் என எதிர்பார்க்கலாம்.

இந்திய அணியின் துடுப்பாட்டத்தில் பெரிதும் எதிர்பார்க்கப் படும் வீரராக விராட் காணப்படுகின்றார். அடுத்து ரெய்னா, டோனி ஆகியோர் இறுதியில் தாக்குதல் பாணி மூலம் இறுதி 15 பந்து பரிமாற்றங்களை பயன்படுத்துவர். பல சர்ச்சைக்கு மத்தியில் தெரிவு செய்யப்பட்ட பின்னி சகலதுறையிலும் கலக்குகின்றார். மேலும் அஸ்வின், ஜடேஜா, பட்டேல் போன்ற சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சவால் காத்திருக்கின்றது. காரணம் நியூசிலாந்து மைதானங்களில் பெரிதும் பந்துகள் திசை திரும்பும் மற்றும் ஆஸியில் பந்துகள் மிக வேகமாக எகிறும். இவை இந்திய பந்து வீச்சாளர்களுக்கு பெரும் சவாலாக அமையும்.


Tilko Jaffna City Hotel



TILKO JAFFNA CITY HOTEL
LUXURY ROOMS / BANQUET HALL / SWIMING POOL / SAUNA & GYM / RESTAURANT / CONFERANCE HALL / STEAM BATH
70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
Tel: 021 222 5969 Fax: 021 222 7291
e-mail: info@cityhoteljaffna.com Web: www.cityhoteljaffna.com


## போட்டி விதிகள்

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.

## தினம் ஒரு பரிசுப் போட்டி 2

அயர்லாந்து – மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கு இடையில் நாளைமறுதினம் (16.02.2015) அன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

..............................

பெயர்: ..............................

தே.அ.இல. : ..............................

முகவரி: ..............................

தொலைபேசி இல.: ..............................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (15.02.2015) பிற்பகல் 6 மணிக்கு முன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கலாம்.



நீங்கள் தயாரா?

லட்சங்களில் பரிசுகளை வெல்லுங்கள்!!!

## அரையிறுதி பரிசுப் போட்டி

அரையிறுதிக்கு தகுதி பெறும் அணிகள் எவை?

1).................... 2)....................

3).................... 4)....................

பெயர்: ....................

தே.அ.அ.இல. ....................

முகவரி ....................

தொலைபேசி ....................

போட்டி முடிவுத் திகதி 17.03.2015

**லக்கி பான்சி கவுஸ்** இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடேர்ன்** பஸ்நிலையம் வீதி, நெல்லியடி.
**கவிதா** 350ஏ பிரதான வீதி, பருத்தித்துறை.
**கன்ன் போட்டோ** 165 பிரதான வீதி, பருத்தித்துறை
**சூரியா பாமசி** புதிய சந்தை, அச்சுவேலி
**நகுலன்** 85 பருத்தித்துறை வீதி நல்லூர்.
**தாட்சாயினி ஸ்ரோர்ஸ்** 3ஆம் சந்தி கெருடாவில்
**தர்மலிங்கம்** கோவில் ஒழுங்கை உடுப்பிட்டி
**கலைச்சோலை** இல 3 நவீன சந்தை வல்வெட்டித்துறை
**அஞ்சலோ புக் சொப்** ஆஸ்பத்திரி வீதி ஊர்காவற்துறை
**மாவடி ஸ்ரீ முருகன்** மூளாய் வீதி வட்டுக்கோட்டை
**தயாளன் ஸ்ரோர்ஸ்** பலாலி வீதி, கோண்டாவில
**சிவசக்தி ஸ்ரோர்ஸ்** உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி,
**சிவன் ஸ்ரோர்ஸ்** பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.
**தாஸ் ஸ்ரோர்ஸ்** திருநெல்வேலி
**ஓம் கணேசா** இல1, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு
**பேரின்பநாதன்** 103, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை** 41, வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணம்
**திருநீலகண்டன்** ஸ்ரோர்ஸ் 14, விதானையார் வீதி கண்டுக்குளி
**சுரேஸ் ஸ்ரோர்ஸ்** இல. 376 பிரதான வீதி யாழ்ப்பாணம்
**அன்ரனீஸ் ஸ்ரோர்ஸ்** 19 புதுமை மாதா கோவில் கிழக்கு
**சிவனந்தா கபே** செட்டி தெரு நல்லூர்
**ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்** சித்தங்கேணி வீதி பண்டத்தரிப்பு
**புஸ்பநாதன்** பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்** சித்தங்கேணிச்சந்தி சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்** பிரதான வீதி சுழிபுரம்
**குலம் ஸ்ரோர்ஸ்** சந்தையடி மானிப்பாய்
**துர்க்கா புத்தகசாலை** பஸ் நிலையம் சுன்னாகம்
**கிருபா போட்டோ** கே.கே.எஸ் வீதி மல்லாகம்
**பாக்கியா** கொக்குவில்
**சிறிராம்** கைதடி சந்தி
**பரம்ஸ்** நவீன சந்தை சாவகச்சேரி
**மணியம்** ஏ 9 வீதி சாவகச்சேரி
**அருள்நாயகி** ஏ 9 வீதி கொடிகாமம்
**சுஜனன்** அல்லாரை வீதி மீசாலை சந்தி
**அன்பரசன் புத்தகசாலை** வித்தியாபுரம் ஒட்டிசுட்டான்
**உயர்ச்சி புத்தகசாலை** மல்லாவி
**கோமதி நெற்கபே** வெற்றிலைக்கேணி
**கே.பி.கே. புத்தகசாலை** 24, பஸ் நிலையம் வவுனியா.
**வன்னி பேபி நீட்ஸ்** 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா
**சோமசுந்தரம்** ஏ 9 வீதி மாங்குளம்
**மோகன்** பளை
**நகுலேந்திரன்** 31 ஆம் கட்டை முழங்காவில்
**ஜோதி புக்சொப்** பெரிய கடை மன்னார்
**சிவசாந்தி உணவகம்** தாழ்வுபாடு வீதி மன்னார்
**நிரஞ்சனா** தலைமன்னார்
**பூநகரி(எம்.பி.சி.எஸ்)** பூநகரி
**டிலசிகா** 124 கடச்சன் வீதி வட்டக்கச்சி
**மகிழன் களஞ்சியம்** தர்மபுரம்
**பொதிகை புக்சொப்** 2ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு
**தாயன்பு** உடையார் கட்டு
**சஜி புக் சொப்** விசுவமடு
**வரணா புக்சொப்** 755 கனகராச வீதி திருநகர் கிளிநொச்சி
**வவிசனா புக்சொப்** குமரபுரம் பரந்தன்
**ராஜாதேனீரகம்** உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை** பிரதான வீதி முல்லைத்தீவு

பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பலவகையிலும் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். எதிர்பாராத துன்பமும், தொல்லையும் உண்டாகும். வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை. புத்தி சாதுரியம் அதிகரிக்கும்.

**இடபம்:** தொழில் வியாபாரத்தில் உயர்வுகள் உண்டாகும். பணியாளர்கள் மூலம் காரிய அனுகூலம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எளிதாக பணிகளைச் செய்து முடிப்பார்கள்.

**மிதுனம்:** குடும்பத்தில் இருப்பவர்கள் ஏதாவது குறை சொல்லியபடி இருப்பார்கள். குடும்பத்தில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நன்மையைத் தரும்.

**கடகம்:** புத்திசாதுரியம் அதிகரிக்கும். பயணங்களின் போது கவனம் தேவை. திறமை வெளிப்படும். மற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதில் தயங்க மாட்டீர்கள். எதிலும் ஆதாயம் கிடைக்கும்.

**சிங்கம்:** எதிர்பாலினத்தவரிடம் பழகும்போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் வீண் அலைச்சல் குறையும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**கன்னி:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் வேலைப்பளு இருக்கும். குடும்பத்தில் அமைதி இருக்கும். உறவினர்கள் வருகை இருக்கும்.

**துலாம்:** பேச்சு திறமையால் காரியங்களைச் சாதகமாக செய்து முடிப்பீர்கள். அலைச்சல் குறையும். எதிலும் கூடுதல் கவனம் தேவை. காரிய அனுகூலம் உண்டாகும். எல்லாவித வசதிகளும் உண்டாகும்.

**விருச்சிகம்:** நெருக்கமானவர்களுடன் இனிமையாகப் பேசி பொழுதைக் கழிப்பீர்கள். மதிப்புக்கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டுப் பெறுவார்கள்.

**தனுசு:** குடும்பத்தில் நிம்மதியும் சந்தோஷமும் அதிகரிக்கும். பெண்கள் நீண்ட நாள்களாகச் செய்ய நினைத்த ஒரு காரியத்தைச் செய்து முடிப்பீர்கள். மதிப்பும், மரியாதையும் கிடைக்கும்.

**மகரம்:** தொழில் வியாபாரம் எதிர்பார்த்தபடி நடக்காமல் சற்று மந்தமாக காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உழைப்பு அதிகமாகும். குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் தொல்லைகள் ஏற்படலாம்.

**கும்பம்:** உறவினர்களிடம் வீண் மனஸ்தாபம் உண்டாகலாம் காரியங்களில் தடை தாமதம், வீண் செலவு ஏற்படலாம். மாணவர்களுக்கு கல்வியில் மந்தமான நிலை மாற கூடுதல் கவனத்துடன் பாடங்களை படிப்பது நன்மை தரும்.

**மீனம்:** வாக்கு வன்மையால் காரியம் கைகூடும். ஆன்மிக எண்ணம் உண்டாகும். தேவையான நிதியுதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள்.




சேலைகட்டிய வெள்ளைக்கார பெண்களை நாம பெருமையா பார்ப்பதுபோல எந்த வெளிநாட்டுக்காரனும் நம்ம மாடர்ன் ட்ரெஸ் மகாலட்சுமிகளை பெருமையா பார்ப்பதில்லை!







## நித்தியானந்தா ஆதரவாளர்கள் ரகளை



கன்னடம், தெலுங்கில் 'யாரிவசை' என்ற படம் தயாரானது. போலி சாமியார்கள் – ஆபாச வக்கிரம செயலை மையப்படுத்தி இந்த படத்தை இயக்கியிருந்தனர். படத்துக்கு நித்தியானந்தா ஆதரவாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். படத்தை வெளியிடக்கூடாது என்றும் எதிர்த்தனர்.

ஆனாலும் கர்நாடகாவிலும், ஆந்திராவிலும் தமிழிலும், தெலுங்கிலும் இந்தப் படம் வெளியானது. தற்போது யாரிவசை படத்தைத் தமிழில் சொர்க்கம் என் கையில் என்ற பெயரில் மொழிமாற்றம் செய்துள்ளனர். தமிழகம் முழுவதும் 100 இற்கும் மேற்பட்ட தியேட்டர்களில் இதை வெளியிட ஏற்பாடுகள் நடக்கின்றன.

தமிழகத்தில் படத்தை வெளியிடுவதற்கும் எதிர்ப்பு கிளம்பி இருக்கிறது. தமிழ் நாட்டில் படத்தை ரிலீஸ் செய்யக்கூடாது என்று நித்தியானந்தாவின் ஆதரவாளர்கள் தன்னை மிரட்டுவதாகப் படத்தின் இயக்குநரும் தயாரிப்பாளருமான மதன் பட்டேல் கூறியுள்ளார்.

நித்தியானந்தாவைச் சித்திரித்து இந்த படம் எடுக்கவில்லை என்றும் 5 போலிச் சாமியார்களை படத்தில் சொல்லி உள்ளேன் என்றும், யாரையும் புண்படுத்தும் நோக்கில் படத்தை எடுக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

## காணாமற் போனார் சாப்ளின்



திரையுலகுக்கு நகைச்சுவைக் கதாபாத்திரத்தை அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர் சார்லி சாப்ளின். இவரை திரையில் பார்க்கும் போதே துன்பங்கள் நீங்கி, உள்ளங்கள் சிரிக்குமளவுக்கு தன் நகைச் சுவையால் அனைவரையும் கவர்வார்.

இவருக்கு நடிகர், இயக்குநர், இசையமைப்பாளர், திரைக்கதை எழுத்தாளர், திரைப்படத் தொகுப்பாளர், திரைப்படத் தயாரிப்பாளர் என்று பல முகங்கள் உள்ளன.

இவ்வாறு புகழப்படும் சார்லி சாப்ளினுக்கு சுவிற்ஸர்லாந்தில், அவர் மறைந்தாலும், அவரது உடைமைகளைப் பாதுகாப்பதற்கான சங்கம் ஒன்று உள்ளது.

அந்தச் சங்கத்தில் சார்லி சாப்ளினின் கௌரவ ஒஸ்கார் சிலையும் இருந் தது.

தற்போது அந்தச் சிலை காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதி உயர்ந்த பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த போதும் அந்தச் சிலை காணாமற் போயுள்ளமை எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.

## ரோபோ நாய்

இணையத்தை கடந்த சில நாட்களாகக் கலக்கிக் கொண்டிருக்கிறது கூகுள் ரோபோ நாய். இணையதளம் முதல் கைபேசி வரை பல தொழில்நுட்பங்களில் முன்னணியில் திகழும் கூகுள் நிறுவனம், ரோபோடிக்ஸ் துறையிலும் காலடி பதித்துள்ளது. கூகுள் நிறுவனங்களுள் ஒன்றாகிய, போஸ்டன் டைனமிக்சின் படைப்புகளில் ஒன்று தான் ரோபோ நாய்.

நான்கு கால்களில் மேடுபள்ளங்கள் நிறைந்த கடினமான பகுதிகளில் கூட நடந்து செல்லக் கூடிய திறன் படைத்ததாக இந்த ரோபோ நாய் உருவாக்கப்பட்டுள்ளது.

வீரர்களின் ஆயுதங்களை தூக்கிச்செல்வது, மற்றும் கனமான பொருள்களைச் சுமந்து செல்வது ஆகிய பணிகளை இதனால் செய்ய முடியும். போர்க்களம் மற்றும் மீட்பு பணிகளுக்கான இடங்களில் இந்த ரோபோ நாய் அச்சமின்றி நடந்து சென்று சொன்ன வேலையைச் செய்யும். மேலும் கீழே விழுந்தாலும் தானாக சமாளித்து நிற்கும் தன்மை கொண்டது.








## கொஞ்சம் சிரியுங்க பாஸ்...

திருமணத்திற்கு முன்னால் ஒரு பெண்ணின் கையைப் பிடிப்பது, காதலினால் என்று சொல்கிறார்கள், எனக்குத் தெரியாது.


ஆனால், திருமணத்திற்குப் பிறகு அவள் கையைப் பிடிப்பது தற்காப்பிற்காகத்தான்!

# பீதியை கிளப்புகிறார் முதலமைச்சர் விக்கி!

## இறுதிப்போரில் மனிதப் படுகொலைகள் நடக்கவில்லை என்று சாதிக்கிறார் பொன்சேகா

யாழ்ப்பாணம், பெப்.14

இறுதிப் போரில் மனிதப் படுகொலைகள் எவையும் இடம்பெறவில்லை. வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் மக்கள் மனதில் பீதியை ஏற்படுத்தி – இனவாதத்தை ஏற்படுத்தி அரசியல் செய்கின்றார். – இவ்வாறு குற்றஞ்சாட்டுகின்றார் இராணுவ முன்னாள் தளபதி சரத் பொன்சேகா.



வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள இன அழிப்புத் தொடர்பான தீர்மானம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கடுமையாகச் சாடியுள்ளார்.

"தரைவழிப் போரை நானே வடிவமைத்துத் திட்டமிட்டேன். படையணிகளுக்கு நானே உத்தரவு பிறப்பித்தேன். கீழ்மட்ட உறுப்பினர்களுக்கு நானே ஆணை வழங்கினேன். அந்தப் போரை நன்றாகக் கண்காணித்தேன். மனிதப் படுகொலைகள் எவையும் நடைபெறவில்லை என்பது எனக்குத் தெரியும்"– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"மக்களைப் பாதுகாக்க நாம் முன்னின்று செயற்பட்டோம். 2 லட்சத்து 75 ஆயிரம் மக்களைப் பயங்கரவாதிகளிடம் இருந்து மீட்டு எடுத்தோம்"– என்றும் அவர் கூறினார்.

"சிவில் போர்களில் பொதுமக்களுக்குப் பாதிப்புகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. ஆனாலும் அனைத்துக் காரணிகளையும் கருத்தில் கொண்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் போரிட்டோம்."– என்றும் அவர் தெரிவித்தார்.

"வடக்கு மாகாண சபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீண்டும் இனவாதத்தைத் தூண்ட முயற்சித்தால் அதையிட்டு வருந்துகின்றேன். வடக்கு மக்களின் நலனின் விக்னேஸ்வரன் கரிசனை கொண்டிருந்தால் தெற்கு மக்களின் மனதில் சந்தேகம் எழக் கூடிய வகையில் செயற்படக் கூடாது"– என்றும் அவர் தெரிவித்தார். (ற-5)

### டெங்கால் மாணவன் உயிரிழப்பு

மட்டக்களப்பு, வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவின் பிறைந்துறைச்சேனைப்பகுதியைச் சேர்ந்த மாணவர் ஒருவர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளார். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில்கடந்த ஒருமாதகாலமாக அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அந்தமாணவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் பன்சலை குறுக்கு வீதியில் வசிக்கும் ஹயாத்து முஹம்மது றிஸ்பாத் (வயது–11) என்பவர் (வ–10)

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதி, பழைய காளி கோயில் என வழங்கும்



**திருவருள்மிகு ஸ்ரீ சிவ மஹாகாளி அம்பாள் தேவஸ்தான மகோற்சவம்-2015**

அம்பிகை அடியார்களே!

எமது ஆலயத்தில் 18.02.2015 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாள்கள் மஹோற்சவம் நடைபெற அம்பிகை அருள் பாலித்துள்ளாள்.

**மஹோற்சவ விவரம்**

18.02.2015 புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கொடியேற்றம்
03.03.2015 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு தேர்த்திருவிழா
04.03.2015 புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு தீர்த்தத்திருவிழா

முக்கியகுறிப்பு:

17.02.2015 செவ்வாய்க்கிழமை சிவராத்திரி அன்று இரவு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்திலிருந்து அடியார்கள் நான்கு சாமமும் தீர்த்தக்காவடி எடுத்து வந்து இங்கு வீற்றிருக்கும் காசி ஈஸ்வரலிங்கத்திற்கு தங்கள் கைகளினால் அபிஷேகம் செய்யலாம். (பால் காவடியும் எடுக்கலாம்) என்பதையும் அறியத் தருகின்றோம்.

(86811)(4.3.7) அறங்காவலர்.

**முல்லைத்தீவு கிழக்கு, பனை தென்னை வள அ.கூ.சங்கம் (வ-து)**

பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

பதவி: பொது முகாமையாளர்
பதவிக்குறியீடு:101/08
சம்பள அளவுத்திட்டம்:11200-140X10-150X10-14100.00

தகைமை:

01.கூட்டுறவு ஊழியர் 9 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திற்கான பதவியில் ஆகக்குறைந்தது 03 ஆண்டுகால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை .அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக்குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

02.அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்குச் சமமான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

03.கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 04 வருடகால அனுபவம்/க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 06 வருடகால சேவையாற்றிய அனுபவம்.

மேற்படி 2015.02.28 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர் முல்லை கிழக்கு ப.தெ.வள அ.கூ.சங்கம், கரைச்சிக்குடியிருப்பு, முல்லைத்தீவு என முகவரியிட்டு நேரடியாகவோ, பதிவுத் தபால் மூலமோ விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தலைவர்,
கரைச்சிக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

(86737)(4.3.7)

### நிலத்தடி நீர் மாசடைவை தடுக்கக்கோரி விசேட பாராயணம்

வடபிராந்திய சத்திய சேவா நிலையங்களின் இணைப்புக்குழு நடத்தும் நிலத்தடி நீர் மாசடைவதைத் தடுக்கக்கோரி விசேட ஸ்ரீ ருத்ர பாராயண சாதனை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரைஸ்ரீ சத்தியசாயி பஜனை நிலையத்தில் நடைபெறவுள்ளது. (வ–10)

UNIVERSITY OF CAMBRIDGE **CAMBRIDGE ENGLISH**

GET A CERTIFICATE THAT IS ACCEPTED GLOBALLY

The Cambridge English exams listed below are approved by the U.K Home Office for Spouses and Civil Partner visa Applications to the U.K

**Cambridge - Prelimnary English Test (PET)**

- ★ இது ஓர் Intermediate B1, Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன.
- ★ நீங்கள் UK இல் திருமணம் செய்வீர்களானால் UK Border Agency அங்கீகரிக்கும் A1 பரீட்சைக்குப் பதிலாக PET Certificate இனை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஒப்படைக்கமுடியும் PET=B1
- ★ நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாட நெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்

**Cambridge First Certificate in English (FCE)**

FCE is an upper intermediate level Exam. It tests the ability to deal confidently with a range of written and spoken communication. FCE is the most widely taken of the general English exams, with over 250,000 candidates every year. This exam is at CEFR Level B2.

UK இல் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் IELTS இற்குப் பதிலாக FCE யினை ஏற்றுக் கொள்கின்றன

**Cambridge Certificate in Advanced English (CAE)**

CAE is an advanced exam. CAE tests the ability to communicate with confidence in English for work or study purposes. This exam is at CEFR Level C1

Subjects: Reading, Writing, Listening, Speaking, Use of English

நீங்கள் ஆங்கிலத்தில் வாழ்நாள் முழுவதும் எழுத, வாசிக்க, பேச இந்த சர்வதேச தரம் வாய்ந்த பாட நெறி உதவும்.

**புதிய வகுப்புக்கள் 16-02-2015ஆரம்பம்**

Course Schedule

| Mon, Tues, Wed, Thur | Saturday & Sunday |
|---|---|
| Duration 10 Week | |
| Time 10.00-12.00 | 03.00-05.00 |
| 03.00-05.00 | Exam: May & June |

**BRITISH COLLEGE OF ENGLISH**

No. 192, NAVALAR ROAD, JAFFNA. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 , 077 880 3887

(தி/19581)(4.3.7)

**தமிழ் மக்களின் சிந்தனைக்கு....!**

தமிழரின் தாயகம் மற்றும் தனித்துவத்தைக் காப்பதற்காக பற்றுறுதியோடும் திடசங்கற்பத்தோடும் தம்மையே அர்ப்பணிக்க முன்வந்தோரும், ஆதரவாளர்களும்,
தமிழர்களின் ஐக்கியஅரசியல் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்படாத புறக்கணிப்பு வேண்டுமென்றே நீடிக்கப்படுவதால்......

அவர்கள் அனைவரையும் அரசியல் ரீதியாக ஒரு புதிய ஜனநாயகக் கட்டமைப்புக்குள் ஒன்றிணைத்து, அதன் மூலம் தமிழர் தம் ஐக்கியத்தையும் ஜனநாயக அரசியல் எழுச்சியையும் வலுப்படுத்தும் ஓர் அவசர, அவசிய தேவை எழுந்திருப்பதாகக் கருதுகிறோம்.

இத்தகைய கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பில் தமிழ் மக்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றோம்.

தங்களின் கருத்துக்களையும் அதில் இணைவது தொடர்பான தங்களின் நிலையையும் பின்வரும் முகவரிக்கு அனுப்பி உதவுக.

சாதாரண அஞ்சல் : 20, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : n.vithyatharan@gmail.com
தொலைபேசி : 0716248248 / 0772984514 / 021-221 9440

ஏற்பாட்டுக் குழுவின் சார்பில்,
ந.வித்தியாதரன்
(மூத்த ஊடகவியலாளர்)

## 24ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**புவனேஸ்வரி அரியராஜா**
(BA)



கற்றிட்ட தாயே நின்
காதற் கணவரையும்
பெற்றிட்ட மைந்தனையும் பிரிந்து
நீ சென்றாலும் பற்றுடனே
கற்றவுந்தன் பள்ளிச்
சிறுவரெலாம் பெற்றிட்ட
பெருமையுமோ பேசற் கரிதம்மா.

அரியராசா (கணவர்)
ஜெயந்தன் (மகன்)

தாவடி தெற்கு,
கொக்குவில்.

மலர்வு 30.09.1941 உதிர்வு 14.02.1991

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**திருமதி தங்கரத்தினம் (பேபி) தவராசா**

தோற்றம் 20.08.1947 மறைவு 16.01.2015

கடந்த 16.01.2015 சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு திருமதி தங்கரத்தினம் தவராசா அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நாளை (15.02.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் ஆனைக்கோட்டை இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(56738)(4.6.3)

மானிப்பாய் வீதி,
குருசுமதவடி, ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

# விபத்தில் காயப்பட்டவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

யாழ்ப்பாணம், பெப். 14

கிளிநொச்சியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞன் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

கிளிநொச்சி தொண்டமான் நகரில் கடந்த 9 ஆம் திகதி இரவு 9 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. யாழ். கல்லுண்டாய் வீதி, ஆனைக் கோட்டையைச்சேர்ந்த கந்தசாமி ஏர்ச் செல்வன் (வயது –29) என்பவரே உயிரிழந்தார். அங்கு வாகனம் திருத்தும் இடம் ஒன்றில் பணிபுரியும் அவர் உணவு நிலையத்துக்குச் சென்று திரும்பும்போது மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டார். அவரும் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவரும் அதில் காயமடைந்தனர். ஏர்ச் செல்வன் மறுநாள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது கடந்த புதன்கிழமை உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ–4)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் போல்மைக்கல் எட்வேட்**
(ஓய்வுதியர்-வைத்தியர்)

திதி: 14.02.2015

மலர்வு 09.01.1927 உதிர்வு 14.02.2005

எங்களை விட்டுப் பிரிந்து 10 ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும் மனதில்
நீங்காது நிலைத்திடவும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

என்றென்றும் நீங்கா நினைவுகளுடன்
மனைவி திருமதிS.எட்வேட்
பிள்ளைகள்.
மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

திருமதி S. எட்வேட்
தபாற்கந்தோர்.குடத்தனை கிழக்கு.
குடத்தனை.
(சி19649)(3.7.8)

## அனுமதிப்பத்திரம்இன்றி மோ.சைக்கிள் செலுத்தியவருக்கு அபராதம்

புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிளை அனுமதிப் பத்திரம் இன்றி வீட்டுக்குச் செலுத்திச் சென்றவர் போக்குவரத்து பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார். இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

வாகன பதிவுச் சான்றிதழ் மற்றும் காப்புறுதிப் பத்திரம் ஆகியவை இன்றி வாகனத்தைச் செலுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டு அந்த நபருக்கு எதிராக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழங்குத் தாக்கல் செய்தனர்.

நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 8 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இதே வேளை தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய மற்றொரு நபருக்கு 3ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ–9)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு–
advt@uthayan.com
0215671111

## இலவச மருத்துவ முகாம் நாளை

தென்மராட்சி, பெப். 14

கொழும்பு டேடன்ஸ் மருத்துவமனையின் இலவச மருத்துவமுகாம் நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது. நாளை காலை 7 மணி தொடக்கம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மருத்துவ முகாம் இடம்பெறும்.

குருதியில் குளுக்கோஸின்அளவு மற்றும் கொழுப்பின் அளவு, இதய மின்துடிப்பு பதிவு (இசி.ஜி.) ஆகியவை மேற் கொள்ளப்படவுள்ளன. மருத்துவ முகாமில் பொது மருத்துவ நிபுணர்கள் மற்றும் இருதய நோய் தொடர்பாக மருத்துவ நிபுணர்களும் கலந்து கொள்ளவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ–9)

## வவுனியாவில் கஞ்சாவுடன் இருவர் கைது

வவுனியா, பெப்.14

வவுனியா நகரப் பகுதியில் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி பி.ரகுநாதன் தெரிவித்தார்.

வவுனியா நகரப் பகுதியில் கஞ்சாவுடன் இருவர் நிற்பதாக பூனாவ கடற்படை முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் தெரிவித்ததை அடுத்து மேற்கொண்ட திடீர் சோதனையின் போதே இருவரும்கைதுசெய்யப்பட்டனர்.

ஒருவரிடம் இருந்து 917 கிராம் கேரளா கஞ்சாவும் மற்றைய நபரிடம் இருந்து 837 கிராம் கேரளா கஞ்சாவும் மீட்கப்பட்டன. கைது செய்யப்பட்ட வவுனியா மற்றும் மட்டக்களப்பு பகுதிகளைச் சேர்ந்த இருவரும் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தி விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் யாழ்ப்பாணத்தில் இருந்தே கஞ்சாவைக் கொண்டு வந்துள்ளதாக தெரிய வருகிறது. (வ–402)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

தோற்றம் 30.11.1957 மறைவு 15.01.2015



**அமரர் கந்தசாமி இதயகுமார்**

15.01.2015 சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் கந்தசாமி இதயகுமார் அவர்களின் வீட்டுக்கிரியைகள் இன்று (14.02.2015) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வுகளிலும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்வுகளிலும் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


அன்னாரின் பிரிவின் போது பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப்பாக்கள், பதாகைகள், மலர் வளையங்கள் வெளியிட்ட அன்பு உள்ளங்களுக்கும் தொலைபேசி வாயிலாக அனுதாபம் தெரிவித்த வெளிநாட்டு, உள்நாட்டு உறவுகளுக்கும், இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

"இதயபவனம்,"
உடுவில், சுன்னாகம்.

தாயார்- குணவதி கந்தசாமி,
கிரிஜா கந்தசாமி.

(56891)(4.3.6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 15.01.2015
வியாழக்கிழமை
சிவபதமடைந்த
எமது
அன்புத் தெய்வம்
அமரர்
**வல்லிபுரம் வேலுப்பிள்ளை**

தோற்றம் 03.10.1929
மறைவு 15.01.2015

அன்னாரின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (14.02.2015) சனிக்கிழமை காலை 6 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நாளை (15.02.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அன்னாரின் பிரிவுத்துயர் செய்தி கேட்டு உடன் வந்து உதவி புரிந்தவர்களுக்கும், தொலைபேசிமூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், முகப்புத்தகம் மூலம் துயர்பகிர்ந்த தூரதேச உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

146, தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை.
(சி/19718)(4.3.7)

குடும்பத்தினர்.

## ஹன்டர் மோதி வயோதிபர் சாவு

தென்மராட்சி,பெப்.14

ஏ–9 வீதியில் சைக்கிளில் வந்த குடும்பஸ்தரை அதே திசையில் வேகமான வந்த ஹன்டர் வாகனம் மோதியதில் சைக்கிளில் வந்தவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சாவகச்சேரி மடத்தடிச் சந்திக்கு அருகில் இடம்பெற்றது.

டிராக்டர் சாரதியான அவர் வயலுக்குச் சென்றுவிட்டு மீசாலையில் டிராக்டரை நிறுத்தி விட்டு வீடு திரும்பிய வேளையில் விபத்து இடம்பெற்றது.

மீசாலைஅல்லாரையைச்சேர்ந்த குமாரவேலு சிவனேசன் (வயது –61) என்பவரே உயிரிழந்தவராவார். சாவகச்சேரி பொலிஸார்சம்பவ இடத்துக்குச்சென்று சடலத்தை மீட்டு சாவகச்சேரி மருத்துவமனை சவச்சாலையில் ஒப்படைத்தனர். நீதிவானின் பணிப்புக்கு அமைய பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இறப்பு விசாரணைகளை நடத்தினார்.

வாகனச் சாரதி கைது செய்யப்பட்டு புதன்கிழமை நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டார்.(வ–9)

## கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.14

ஆலங்கட்டை மயான பராம ரிப்புச் சபையின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு நெல்லியடி, நெல்லை முருகன் திருமண மண்ட பத்துக்கு அருகிலுள்ள முன்பள்ளி யில் ஐ.உமாபதி கயிலாயநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர் களாக வடமாகாண மீன்பிடி விவ சாய அமைச்சின் செயலாளர் இ.வர தீஸ்வரன், வடமராட்சி தென் மேற்கு பிரதேச செயலர் ச.சிவசிறி, வடம ராட்சி தென்மேற்கு பிரதேச சபை யின் தவிசாளர் பொ.வியாகேசு ஆகியோர் கலந்து கொள்ளவுள் ளனர். (வ–35)

## குருநகர் புனித கார்மேல் அன்னை ஆலயம் இன்று திறப்பு

குருநகர், பெப்.14

குருநகர் மக்களால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள புனித கார்மேல் அன்னை ஆலயம் இன்று சனிக் கிழமை மாலை 5 மணிக்கு மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் திறந்து வைக்கப்படவுள்ளது.

குருநகர்ப் பகுதியில் ஆரம்பத்தில் சிறிய கோயிலாக இருந்த இவ்வால யம் பெரிதாகக் கட்டப்பட்டு 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதி அக்காலப் பகுதியில் யாழ். ஆயராக இருந்த அதி வணக்கத்துக் குரிய தியோகுப்பிள்ளை ஆண்ட கையினால் அபிஷேகம் செய்யப்பட் டுத் திறந்து வைக்கப்பட்டது. கடந்த கால போரினால் சேதமடைந்த இவ்வாலயம் 2013 மே 13 ஆம் திகதி மின்னல் தாக்கியதில் பலத்த சேத மடைந்தது.

2013 ஜூலையில் ஆலய புனர மைப்பு வேலைகள் ஆரம்பிக்கப் பட்டு தற்போது பூரணமான நிலை யில் இன்று ஆலயம் திறந்து வைக் கப்பட்டு திருப்பலி இடம்பெறவுள் ளது. (ஒ–51)

## கச்சதீவு திருவிழாவுக்குச் செல்லும் இந்தியர்களுக்கு கடும் நிபந்தனை

இராமேஸ்வரம்.பெப்.14

இந்தியாவில் இருந்து கச்சதீவு திருவிழாவுக்கு வருகை தரும் யாத்திரிகர்களுக்கு கடும் நிபந்தனைகள் விதிக் கப்பட்டுள்ளன. இந்தநிலையில் ஆலயத்துக்குச் செல்வதற் காக இதுவரை 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் முற் பதிவுகளையும் மேற்கொண் டுள்ளனர்.

எதிர்வரும் 28 ஆம் திகதி கச் சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நடைபெறவுள்ளது. தொடர்ந்து இருதினங்கள் நடைபெறும் திருவிழாவில் இலங்கை மற்றும் இந்திய யாத்திரிகர்கள் இலட்சக் கணக் கில் பங்குபற்றி வருகின்றனர்.

வருடத்தில் திருவிழாவுக்கு மட்டும் செல்வதற்கு யாத்திரி கர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதால் அதிகளவான யாத்திரிகர்கள் கச்சதீவுக்கு செல்வதில் ஆர்வம் காட்டி வரு கின்றனர்.

இதனடிப்படையில் இலங்கை யில் இருந்து யாத்திரிகர்கள் கச்சதீவுக்கு செல்வதற்கு பெரிய ளவிலான நிபந்தனைகள் விதிக்கப்படுவதில்லை. எனினும் இந்திய யாத்திரிகர்கள் கச்சதீவுக்கு வருகை தர முற்கூட்டியே விண்ணப்பிப்ப துடன், அதிகளவான பணம் மற்றும் நகை விற்பனைப் பொருள்க ளைக் கொண்டு செல்வதற்கும் தடை விதிக்கப் பட்டுள்ளது. அத்துடன் இந்தியாவில் தங்கி யுள்ள ஈழ அக திகள் கச்சதீவுக்கு செல்வதற்கும் அனுமதி மறுக்கப் பட்டுள்ளது. (வ–14)

## நுகர்வோர் விவகார பேரவை தலைவராக நூர்தீன்

கொழும்பு, பெப்.14

நுகர்வோர் விவகார பேர வையின் தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி எம்.நூர்தீன் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் நேற்று கைத் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாட் பதியுதீ னால் வழங்கப் பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட பள்ளி வாசல்கள் சம்மேளனத்தின் பொதுச் செயலாளரான அவர் கொழும்பு மஹாநாம கல்லூரி, இலங்கை சட்டக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாண வராவார். (வ–10)

## எழுதுமட்டுவாழ் தெற்கு பகுதியில் சுவிஸ் நிறுவனப் பணிகள் பூர்த்தி

தென்மராட்சி, பெப்.14

எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. புதிய முன்பள்ளிக் கட்டடம் விரைவில் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவ தாகத் தெரிவிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு அந்தப் பகுதியில் மக்கள் மீளக் குடிய மர்த்தப்பட்ட பின்னர் தற்காலிக கொட்டில் ஒன்றில் கடந்த 2012 ஆம் ஆண்டு தொடக்கம் முன்பள்ளி இயங்கி வருவதாகவும் சுவிஸ் நிறுவனத்தின ரால் முன்பள்ளிக் கான நிரந்தரக் கட்ட டம் அமைக்கும் பணி கள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் பூர்த்தி யடைந்துள்ளதாக வும் தெரிவிக் கப்பட்டது.

இதேவேளை சுவிஸ் நிறுவ னத்தினரால் 27 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப் பட்டு வரும் எழுதுமட்டு வாழ் கணேசா வித்தியாலயத் துக்கானமாடிக் கட்டட வகுப் பறைத் தொகு தியின் வேலை கள் இறுதிக்கட் டத்தை அடைந் துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது. (வ–9)

செல்லா சினிமா யாழ்ப்பாணம்
40அடி அகலம் LED திரையில்
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
அஜீத் நடிக்கும்
என்னை அறிந்தால்



காட்சி: 10.30, 2.30, 6.30, 9.30
முற்றிலும் குளிரூட்டப்பட்டது

வீடு விற்பனைக்கு
சாவகச்சேரி கற்குளி வீதி, சாவகச்சேரி பாலாதியேட்டர் அருகில் சகல வசதி களுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 076 706 5299

புறொயிலர் விற்பனைக்கு
புறொயிலர், கல்பேட்ஸ் மிகவும் மலிவான விலையில் நம்பிக்கையாகப் பெற்றுக்கொள்ள ...
குமரன் பாம்
தட்டாதெருச் சந்தி மற்றும் ஸ்டேசன் சந்தி.
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 618 0675
(56717)(3.5.8)

தென்னந்தோட்டம் விற்பனைக்கு
பளைக்கும் தர்மக்கேணிக்கும் இடையில் உள்ள 35 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 729 9031, 072 525 4133
(58735) (4.3.7)

மணமகள்கள் தேவை
♦81 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 16 ¾ பாவமுடைய வங்கி முகாமையாளருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
♦82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 21 பாவ முடைய டாக்டர் மணமகனுக்கு டாக்டர் மணமகள் தேவை.
♦85 இல் பிறந்த 9இல் சூரியனும் செவ்வாயும் 11 பாவமுடைய பட்டதாரி மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
♦81 இல் பிறந்த 12 இல் சூரியன் செவ்வாய் 43 ½ பாவமுடைய வங்கியில் பணிபுரியும் BBA பட்டதாரி மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
♦88 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 72 பாவமுடைய பிரான்ஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
♦80இல் பிறந்த 8 இல் சூரியனும் செவ்வாயும் 56⅓ பாவமுடைய சுவிஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
♦80 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 29 ½ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
♦81 இல் பிறந்த 4இல் சூரியனும் 24 ½ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
தொடர்பு:- கமலக்கண்ணன் திருமணசேவை
இல 62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலைபட, முடமாவடி,
TP:- 077 607 0862

2015 Chemistry Personal Classes
Basic, Inorganic, Organic, Physical, கடந்தகால வினாக்கள் ஆசிரியரால் B.Sc (cey) M.Sc (cey) Chemistry கற்பிக்கப்படும்.
(56604)(3.7) தொடர்பு: 077 6038913

கார் விற்பனைக்கு
NP JF - xxxx மொடல் -Hyundal - Sanata கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :- 077 541 2017

துன்பம் தீர அருள்வாக்கு



குழந்தைப்பேறு இல்லாதவர்கள், திருமணத்தடை தோஷம் உள்ளவர்கள், குடும்பப் பிரச்சினைகள், வெளிநாடு செல்லத்தடை, தொழிலில் முன்னேற்ற மின்மை, கல்வியில் முன்னேற்றமின்மை, தீராத நோய் தீர அருள் வாக்குக் கூறப்படும். வெள்ளவத்தை பேர்ணாந்து வீதியிலுள்ள துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வமான ஞானேஸ்வரி அம்மன் அவர்கள் 14,15, 16.02.2015 வரை யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூற வுள்ளார்.
தொடர்புகளுக்கு: ஞானவைரவர் ஆலயம்
கலாசாலை வீதி, 2ஆவது ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
பூசை நேரம்:
முற்பகல் 10.30 மணி, மாலை 4 மணி
★ கலாசார உடையுடன் வருகைதரவும்.
T.P: 021 221 9127 (56812)(3.7.8)

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☏ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை, சுன்னாகம்
வருடாந்த இல்ல
மெய் வல்லுநர் போட்டி-2015-
தலைவர்
இ. ஈஸ்வரதாசன்
அதிபர்
பிரதம விருந்தினர்
ஆ. இராஜேந்திரன்
மாகாணக்கல்விப் பணிப்பாளர் வடமாகாணம்
சிறப்பு விருந்தினர்
சண்முககுலகுமாரன்
-கோட்டக்கல்விப் பணிப்பாளர்
தெல்லிப்பளை கோட்டம்
கௌரவ விருந்தினர்
சி. துளசிராம்
ஸ்கந்தவரோதயன்
காலம் - 14.02.2015(சனிக்கிழமை)
நேரம் - பி.ப 1.31 மணி
இடம் - பாடசாலை மைதானம்



அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்
பாடசாலை சமூகம்
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
(#19727)(3.7.8)

கடை வாடகைக்கு
யாழ். கஸ்தூரியார் வீதியில் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அகலமான மாபிள்பதித்த 875 சதுர அடி கடை, தரிப்பிடவசதியுடன்.
தொடர்பு: 077 737 4726
(58815) (4.3.7)

யாழ். நகர் மத்தியில் நவீன வசதிகளுடன் கூடிய
அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர்
கலாசார திருமண மண்டபம்
ASR Cultural Wedding Hall
• முற்றிலும் குளிரூட்டப்பட்ட மண்டபம்.
• 700 பேர் இருக்கைகளில் அமர்ந்திருந்து திருமணத்தைப் பார்க்கும் வசதி.
• கீழ் மண்டபத்தில் 350 பேர் அமர்ந்திருந்து நிகழ்வினைப் பார்க்கக் கூடிய வசதி.
• ஒரே நேரத்தில் 200 பேர் உணவருந்தும் வசதி.
• Lift வசதி, விசாலமான வாகன தரிப்பிட வசதி.
• அனைவரும் திருமணத்தைப் பார்க்கும் தொலைக்காட்சி வசதி.
• உணவுகளை தாங்களே பரிமாறிக் கொள்ளும் வசதி.
மற்றும் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ற முறையில் அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.





காதலர் தினத்தைக் கொண்டாடும் அனைத்து காதலர்களுக்கும் எமது நல்வாழ்த்துக்கள். தங்களது திருமணம் மற்றும் வைபவங்களை எமது மண்டபத்தில் சிறப்புற நடத்திக் கொள்வதில் மகிழ்ச்சியும் திருப்தியுமடைகின்றோம்.
ASR Enterprises (PVT) Ltd
இல.542, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 373 4116, 021 222 1355, 021 222 1356.
மின்னஞ்சல்: asrhall@hotmail.com
Find us on: Facebook.com/jaffnaasrenterprises
(#1728)(3.7.8)

# இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம் பெப்.14

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி வி.சண்முகரத்தினம் தலைமையில் இடம் பெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் போதனா சிரியை ராதை அருளம்பலம் கலந்து கொள்ளவுள்ளார். (வ-23)

★ ★ ★

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.31 மணிக்கு பாட சாலை மைதானத்தில் நடை பெறும்.

அதிபர் இ.ஈஸ்வரதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுலகுமாரன், கௌரவ விருந்தினராக ஸ்கந்தவரோதயன் சி.துளசிராம் ஆகி யோர் கலந்துகொள்வர். (வ)

★ ★ ★

அச்சுவேலி புனித தெ ரேசாள் மகளிர் கல்லூரி ஆரம்ப பிரிவு மாணவர் களுக்கான சிறுவர் விளையாட்டு போட்டி இன்று சனிக்கிழமை இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி விளை யாட்டு மைதானத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் அருட் சகோதரி மரிய றொசாறியோ தலைமையில் நடை பெறும் போட்டிகளில் பிரதி மகளிர் விவகார அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கின்றார். (வ-11)

★ ★ ★

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய வரு டாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தி யாலய விளையாட்டு மைதா னத்தில் அதிபர் திருமதி த.வாசுகி தலைமையில் நடைபெற உள்ளது.

பிரதம விருந்தினராக மேலதிக மாகா ணக் கல்விப்பணிப்பாளர் எம்.ராதா கிருஷ்ணன், சிறப்பு விருந்தினராக தீவக வலயக் கணக்காளர் திருமதி கவிதா சிவஸ்ரீசாந்திநாயகமும்,கௌரவ விருந் தினராக மருத்துவர் வேலாயுதம் ஐங்கரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-250)

★ ★ ★

யாழ்ப்பாணம் பெப்.14

யாழ்.இந்து மகளிர் கல் லூரியின் வரு டாந்த மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி எம்.விமலநாதன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக வட மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பா ளர் திருமதி செல்வின் இரேணியஸ் கலந்து கொள்வார். (வ)

★ ★ ★

காரைநகர், பெப்.14

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதா னத்தில் அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் நடை பெற உள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக வட மாகாணக் காணி ஆணையாளர் பொ.தயானந்தாவும் சிறப்பு விருந்தி னர்களாக தீவக வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.ஜெனால்ட் அன்ரனி, காரைநகர் கோட்டக் கல்விப் பணிப் பாளர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் ஆகி யோரும் கௌரவ விருந்தினர்களாக இலங்கை வங்கி காரைநகர் கிளை முகாமையாளர் வி.விஜயகுமார், வர்த் தகர் க.அருள்நேசன் ஆகியோரும் கலந்துகொள்ள உள்ளனர். (வ-250)

★ ★ ★

தென்மராட்சி,பெப்.14

வரணி வடக்கு அ.த.க. பாடசால்ல இல்லமெய்வன்மைப்போட்டிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலைமைதானத்தில் நடைபெறும்.

அதிபர் ந.வசந்தரூபன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய அழகியல்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.கைலாசநாதனும் கலந்து கொள்வர். (வ-9-122)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப்.14

சிறுவர் கழகங்கள் மற்றும் யாழ்.சமூக செயற்பாட்டு மையம் இணைந்து நடத் தும் விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வேலணை மத்திய கல்லூரி மைதானத் தில் மண்டைதீவு ரோஜாவனம் சிறுவர் கழகத்தைச் சேர்ந்த செல்வி சத்திய சீலன் விதுசனா தலைமையில் நடை பெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக தீவகம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக வேலணை சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி மாதங்கி மயூரன், வேலணை மத்திய கல்லூரி அதிபர் சி.கிருபாகரன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக யாழ்.சமூக செயற்பாட்டு இணைப் பாளர் ந.சுகிர்தராஜும் கலந்து கொள் வர். (வ)

## மரண அறிவித்தல்கள்



### வீரசிங்கம் சகாதேவசங்கரி

(ஓய்வுபெற்ற பதில் முகாமையாளர் மக்கள் வங்கி - கன்னாதிட்டி 2 ஆவது கிளை - யாழ்ப்பாணம்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி சிவன்கோயில் தெற்கு வீதியையும், சில காலங்கள் லண்டனையும், வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் சகா தேவசங்கரி 10.02.2015 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீர சிங்கம் - இரத்தினம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கமலாம்பிகை தம்பதியரின் மருமகனும், கமலநேத்திராவின் (யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஓய்வுநிலை ஆசிரியை - சங்கரி மிஸ்) பாசமிகு கணவரும், கஜதேவசங்கரி (லண்டன்), யாதவசங்கரி (கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையும்,Dr. காவேரி (லண்டன்), தர்சினிமா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், பிரஹஷ்மி, வித்தியாஷ்மி, சஹானா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர் களான தருமசங்கரி, கணேசசங்கரி, ராஜசங்கரி, மங்கையர்க்கரசி, ஞானசங் கரி, துருவசங்கரி மற்றும் ஆனந்தசங்கரி, மதியாபரணம், பரதசங்கரி, லோக நாயகி, திருநல்நாயகி ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ் சென்றவர்களான கனகநாயகி, மங்களேஸ்வரி, ஞானசம்பந்தன், ஜெயசீலன் மற்றும் வசந்தா, சற்குணவதி, ரூபவதி, இந்திராபூபதி, தம்பித்துரை, கதிர்காம சோதி, லோக ராணி, விமலஇந்திரா, நிமலசோபிதா, அம்பிகதாஸ்,விப்ரதாஸ், சிவகலா, சிவபிரேமா, சுசீலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (15.02.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கமலநேத்திரா (மனைவி),
ச.கஜதேவசங்கரி (மகன்),
ச.யாதவசங்கரி (மகன்).

சிவன்கோயில் தெற்கு வீதி,
திருநெல்வேலி,
தொ.பே. 021 222 2289 (56713) (45.3.7)

### திருமதி பத்மாவதி மகாதேவா



கொக்குவில் மேற்கைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மாவதி மகாதேவா 10.02.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின் னத்துரை மகாதேவாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர் களான முத்துத்தம்பி- மனோன் மணி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர் களான சின்னத்துரை - திரவியம் தம்பதியினரின் அன்பு மருமகளும் மு.வேலாயுதபிள்ளை (ஓய்வு நிலை பிரதி அதிபர்- கொக்குவில் இந்துக் கல்லூரி,நிரு கல்வி நிலைய இயக்குனர்), யோகேஸ்வரி, செல்வராணி, செல்வகுமார் (லண்டன்) காலஞ்சென்ற பால சுப்பிரமணியம் (சுவிஸ்), றேணுகா, ஞானச்சந்திரன் (கருணால யம்), கௌரிதேவி (சுவிஸ்), இராஜசிங்கம் (கஜன் நகைமாடம், வவுனியா), சுஜாத்தா (லண்டன்), அன்னலிங்கம், நாகரட்ணம், பூமணி, பகவதி, காலஞ்சென்றவர்களான இராஜலட்சுமி, இரா ஜேஸ்வரி, பரமேஸ்வரி, செல்லம்மா, மனோன்மணி, தேவராசா ஆகியோரின் மைத்துனியும் தர்சினி, தயாளன், (லண்டன்), தனுசா, தர்சிகா (சுவிஸ்), தாட்சாஜினி, தர்மிலா(லண்டன்) ஆகியோரின் அன்புத் த்தாயும் மகாரூபன், சுஹாசினி (லண்டன்), தாட் சாஜினி(லண்டன்), சுந்தரகுமார் (சுவிஸ்), கீரிசன், (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம்- வேலணை), அருள்ஈசன் (குமரன் ஸ்ரோர்ஸ்- திருநெல்வேலி), டவல் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் பானுசன் (கொ.இ. கல்லூரி), நிரோஜா (பெரியபுலம் மகாவித்தியாலயம்), வர்சிகா (கொ.இ. கல்லூரி) கிரிகேசன், சதுஸ்ரிகன் (கொ.இ. ஆரம்ப பாட சாலை),திவியன் (கொ.இ. கல்லூரி) , தீபிகன்(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), அபிஸ், அபிசயன், ஆரபி, அக்சயா (லண்டன்) சுகிர், சௌமி, சமீர் (சுவிஸ்), பிறிட்னன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (15.02.2015) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:-
குடும்பத்தினர்.
0776160349.

## மரண அறிவித்தல்கள்



### யோசப் யேசுதாசன் சுகுணராஜா

யாழ். பெரியவிளானைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் யேசுதாசன் சுகுணராஜா 05.02.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசப் மற்றும் ஞானம்மா தம்பதி களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான லோப்பையா, மேரிமாகிறற் தம்பதியரின் அன்பு மருமகனும், திரேசா கிறிஸ்ரீனாவின் பாசமிகு கணவரும், எமில் அன்ரனி (லண்டன்), வேர்ஜின் பியூலா (ஆஸ்திரேலியா), கிறிஸ்ரி சுகுணானந் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், நீற்றா திலகவதி (கனடா),யோஜ் இம்மானுவேல், அலோசியஸ் ஜெயராஜா ஆகியோரின் சகோதரரும், பாமினி, அரவிந்தன், சகித்தா ஆகியோரின் அன்பு மாமனும், சேவியர் (கனடா), நவமணி (இலங்கை), காலஞ்சென்றவர்களான மரியநாயகம், யோசவ் மற்றும் மைக்கல், ஞானம்மா, றோஸ் மேரிநேசம், புஸ்பமேரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஷெல்ரன், எய்டன், சுமன்ரா ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 16.02.2015 திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் ஜேர்மனி புனித சூசையப்பர் கோயிலில் இறுதி ஆராதனையின் பின் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
+ 4915 2174 39702
+ 4941 6891 99473
Mrs. J.Theresa,
Haupstr 73, 21629,
New Wulmstorf, Germany.

தகவல்:
அன்ரன் குடும்பத்தினர்.
(மல்லாகம்)

(58741)(45.3.7)

### திருமதி மாதவாம்பிகை (பாமா) இந்திரசேனன்



கந்தர்மடத்தைச் சேர்ந்த திருமதி மாதவாம்பிகை (பாமா) இந்திர சேனன் 12.02.2015 வியாழக் கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான தில்லையம்பலம்- கன கம்மா தம்பதியரின் பாசமிகு மக ளும், காலஞ்சென்றவர்களான டாக்டர் ஆனந்தர்- செல்லம்மா தம்பதிய ரின் பாசமிகு மருமகளும், இந்திர சேனனின் அன்பு மனைவியும், ஆனந்தசேனன், தேவசேனன், டாக்டர் நதீரா, மாலினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சுந்தராம்பிகை, கமலாம் பிகை, ஸ்ரீகிருஷ்ணராஜா மற்றும் ஸ்ரீநிவாசன், ஸ்ரீஸ்கந்த ராஜா, ஸ்ரீவிசாகராஜா, டாக்டர் ஸ்ரீஜெயராஜா, ஸ்ரீகணேச ராஜா, சாரதாம்பிகை, யசோதராம்பிகை, வடிவாம்பிகை ஆகி யோரின் பாசமிகு சகோதரியும், மீனலோஜனி, இர வீந்திரன், நகுலேந்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

53/10, அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம்,
தொ.பே: 021 222 6795 (36816)(3.4.7)

தகவல்:
ஸ்ரீகணேசராஜா
(சகோதரன்)



### கனகரத்தினம் இராமநாதன்

(ஓய்வுபெற்ற உபஅதிபர், யா/வைத்தீஸ்வரா கல்லூரி)

யாழ். கொட்டடி சீனிவாசகம் வீதியையும் பின் மதவடி சுதுமலையையும் வசிப்பிடமாகக் கொண்ட கனகரத்தினம் இராமநாதன் கனடாவில் 08.02.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தொல்புரம் காலஞ்சென்றவர் களான கனகரத்தினம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான K.S. சுப்பிரமணியம் (யா/இந்துக் கல்லூரி - ஆசிரியர், விடுதி அதிபர்) தம்பதியரின் மருமகனும், மனோரஞ் சிதத்தின் (ஓய்வு நிலை ஆசிரியை - யா/இந்துமகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், கீதாவின் அன்புத் தந்தையும், பாலரஞ்சனின் அன்பு மாமனும், மகிஷா, ஷமிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பாலேந்திரா (முன்னாள் G.M. பரந்தன் இரசாயன தொழிற்சாலை) மற்றும் சுப்பிரமணியம் (முன்னாள் DGM மக்கள் வங்கி), ஜெயரட்ணம் (முன்னாள் அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், குணபாக்கியம், காலஞ்சென்றவர் களான பரராஜசேகரம், நரேந்திரன், சிறீதரன் மற்றும் மகேஸ்வரி, சந்திரோதயம், காலஞ்சென்ற நாகராஜேஸ்வரி மற்றும் கலாநிதி, சகுந்தலாதேவி ஆகியோரின் மைத்துனரும், சண்முகலிங்கம், திசைவீரசிங்கம், காலஞ்சென்ற நடனசபாபதி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(15.02.2015) ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மதவடி சுதுமலை.
021 225 5304 (56422)

தகவல்:
குணபாக்கியம் சண்முகலிங்கம்.


# ACER LIQUID ரீ410 கைபேசி



Acer W®kªD Liquid ரீ410 என்ற புதிய ஸ்மார்ட் கைபேசியை அறிமுகம் செய்யவுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்த வருடம் இடம்பெறவுள்ள CES (Consumer Electronics Show) நிகழ்வில் இது அறிமுகம் செய்யப்படவுள்ளது. 4G இணைப்பு வசதியைக் கொண்ட இந்தக் கைபேசி 4.5 அங்குல அளவுடையதும் IPS தொழில் நுட்பத்தைக் கொண்டதுமான HD தொடுதிரையைக் கொண்டுள்ளது.

இவை தவிர 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா மற்றும் 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பனவற்றையும் உள்ளடக்கியுள்ளது. இதன் விலை 129 பவுண்ட்ஸ்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.





## இணையத் தளங்களின் ஊடான மல்வேர் தாக்கங்களை தடுக்க உதவும் நீட்சி

கணினியில் எதிர்நோக்கப்படும் பிரதான பிரச்சினையாக வைரஸ் மற்றும் மல்வேர் தாக்கம் காணப்படுகின்றது. இந்தத் தாக்கம், அதிகளவில் இணையத்தளப் பாவனையினாலேயே ஏற்படுகின்றது. இதனைத் தடுப்பதற்கு Avira Browser Safety என்ற நீட்சி காணப்படுகின்றது.

இந்த நீட்சி Google Chrome மற்றும் Firefox உலாவிகளில் செயற்படக்கூடியதாகக் காணப்படுவதுடன், மல்வேர் தாக்கத்தை ஏற்படுத்தவல்ல இணையத்தளங்களை, சுட்டிக் காட்டக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.



## 2014 விண்வெளியின் அழகிய ஒளிப்படங்கள் தொகுதி

விண்வெளி என்றாலே அழகு தான், ஜொலிக்கும் நட்சத்திரங்கள், சீறிப் பாயும் வால்மீன்கள் என பிரம்மாண்ட மாய்க் காட்சியளிக்கிறது.

கடந்த 2014ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட அழகிய ஒளிப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியால் எடுக்கப்பட்ட, பூமியிலிருந்து 6400 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள NGC 2174 என்ற கோளின் ஒளிப்படம் தான் இது.

கடந்த ஜுன் 10, 11ஆம் திகதிகளில் சூரியனிலிருந்து வெளி யான சக்தி வாய்ந்த xd கதிர்கள்.·பால்வெளி அண்டத் திலிருந்து 15 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள Southern Pinwheel என்ற M83 சுழல் விண்மீன்கள் கூட்டம்,

நாசாவின் சந்திரா Xdray விண்வெளி ஆய்வு மையத்தால் எடுக்கப்பட்ட, பூமியிலிருந்து 23 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள NGC 4258dன் ஒளிப்படம்,

ISS விண்வெளி வீரர் அலெக்ஸாண்டர் என்பவரால் எடுக்கப்பட்ட அழகிய ஒளிப்படம், சனி கிரகத்திற்கு அழகு சேர்ப்பதே அதன் வளையங்கள் தான், கடந்த ஓகஸ்ட் 23ம் திகதி காசினி விண்கலத்தால் எடுக்கப்பட்ட சனி கிரகம்,

ஒக்டோபர் 29ம் திகதியன்று சூரிய உதயத்தின் போது ISS விண்வெளி வீரர் Reid Wiseman எடுத்த ஒளிப்படம், விண்வெளி ஒளிப்பட கலைஞர் Rick Stevensondஆல் எடுக்கப்பட்ட பூமியிலிருந்து 6500 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள SH2d199 என்ற கிரகம். பால்வெளி அண்டத்தின் அழகிய ஒளிப்படம். இதேபோன்ற மற்றும் பல அழகிய ஒளிப்படங்கள் இதில் அடங்கியுள்ளன.





## உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10,11,12,13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6, 7, 8, 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3, 4, 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.
1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.
1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்
1. எதிர்காலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம் (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)
பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..............................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..............................
கற்கும் பாடசாலை: ..............................
தரம்: ..............
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..............................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..............................
ஆசிரியரின் பாடத்துறை: ..............................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ ..இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .............................. அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

### ஓவியப்போட்டி

| | |
|---|---|
| பிரிவு A<br>தரம் 10,11,12,13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| பிரிவு B<br>தரம் 6, 7, 8, 9 | பனை வளமும் நாமும் |
| பிரிவு C<br>தரம் 3, 4, 5 | பண்டிகை நிகழ்வு |

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10.11.12.13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில் , பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

30 ஆவது அகவையில் உதயன்,
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.





இன்று காதலர் தினமாகும் . ஈராக்கில் காதலர் தினத்துக்காக கோலாகல நிகழ்வுகளுக்காக அலங் கரிக்கப்பட்ட பக்தாத் நகரமும் கடைகளில் பரிசுப்பொருள்கள் விற்பனையும் களைகட்டியுள்ளன.

# உக்ரைனில் தற்காலிக போர் நிறுத்தம்

## பேச்சுக்களில் முன்னேற்றம்



கீவ், பெப். 14

கிழக்கு உக்ரைனில்இடம்பெற்ற போர்நிறுத்த உடன்படிக்கையொன்று அமைதிக்கான பேச்சுக்களில் எட் டப்பட்டுள்ளதாகரஷ்யஅதிபர்விளா டிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

அது பெப்ரவரி 15ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்றும், கனரக பீரங்கிகளை பயன்படுத்து வதில்லை என்றும் ஒப்பந்தம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

பேச்சுக்களின் இடைவேளையின் போது பேசிய உக்ரைனிய அதிபர் பெட்ரோ பொரொஷென்கோ, ரஷ் யாவால் விதிக்கப்படும் சில கட்டுப் பாடுகள் ஏற்கத் தக்கவை அல்ல என்று முன்னதாகத் தெரிவித்திருந் தார். பெலாரஸ்ஸின் மின்ஸ்க் நகரில் நடைபெற்றுவரும் இந்தப் பேச்சுக்கள் பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய இரு நாடுகளால் நடத்தப்பட்டுவருகின்றன.

இந்தநிலையிலேயே தற்காலிக போர்நிறுத்தமுடிவுஎட்டப்பட்டுள்ளது. கிளர்ச்சிக்காரர்கள் புதிய தாக்கு தல் ஒன்றை ஆரம்பித்ததிலிருந்து கடந்த சில வாரங்களாக கிழக்கு உக்ரைனில் வன்முறைச் சம்ப வங்கள் அதிகரித்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஓ–ரி)

# தென்கொரிய விமான நிறுவன துணைத் தலைவர் குற்றவாளி

## அந்த நாட்டு நீதிமன்றம் தீர்ப்பு

தென்கொரியாவின் விமான நிறு வனமான கொரியன் எயார் நிறு வனத்தின் முன்னாள் துணைத் தலைவர் விமான போக்குவரத்துச் சட்டங்களை மீறியிருப்பதாக அந்த நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள் ளது.



விமானத்தில் தமக்கு பரிமாறப் பட்ட மகடமியா பருப்பை, முறை யாக வழங்கவில்லையென்பதால், அதனைப் பரிமாறிய விமானப் பணிப்பெண்ணை சேவையிலி ருந்து விலக்கிக் கொள்வதற்காக விமானத்தை திருப்பும்படி வலி யுறுத்தினார் என விமான நிறு வனத்தின் முன்னாள் துணைத்தலை வரான ஹீதர் சோ மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அந்தக் குற்றத்துக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்கப் படலாம். ஆனால் அரசுத் தரப்பு மூன்றாண்டு சிறைத் தண்டனை கோரியுள்ளது.

கடந்த டிசெம்பர் 5ஆம் திகதியன்று, நியூயோர்க்கின் ஜே.எவ்.கே. விமான நிலையத்திலிருந்து சியோல் செல் வதற்காக ஓடுபாதைக்குச் சென்று கொண்டிருந்த விமானத்தை, மீண் டும் வாசலுக்கே திருப்பும்படி சோ உத்தரவிட்டார். அந்த விமானத்தின் தலைமைப் பணிப்பெண்ணை அந் தச்சேவையிலிருந்துவிலக்கிக்கொள் ளவே அவர்இவ்வாறுகூறியிருந்தார். தனக்கு வழங்கப்பட்ட மகடமியா பருப்புகள் ஒரு கிண்ணத்தில் வழங் கப்படாமல், பாக்கெட்டில் வழங்கப் பட்டதையடுத்து சோ கடும் கோப மடைந்து அவ்வாறு செயற்பட்ட தாகக்குற்றம்சாட்டப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (ஓ –ரி)



# தேவதை போல் இறக்கைகளுடன் அதிசய குழந்தை

லண்டன், பெப்.14

பிரிட்டனில் பறவைகளின் இறக் கைகள் போல் முதுகில் இராட்சத மச்சத்துடன் குழந்தையொன்று வாழ்ந்து வருவது அனைவரை யும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள் ளது. .

அந்தக் குழந்தையின் முதுகில் உள்ள மச்சம் இறக்கைகள் போல் உள்ளதால் ஒரு குட்டித் தேவதை யாகக் காட்சியளிக்கிறது.

பிரிட்டனின் பென்ஸ்டாண்டன் என்ற நகரில் மாட்–ஸ்டீபனி பரவுன் என்ற தம்பதியினருக்கு கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒலிவர் என்ற ஆண் குழந்தை பிறந்தது.

அந்தக்குழந்தையை ஆசையோடு தூக்கிய பெற்றோர்கள், அந்தக் குழந்தையின் முதுகில் இரத்த வடி வத்தில் ஒரு பெரிய மச்சம் இருந் ததை கண்டு அதிர்ச்சியடைந்துள் ளனர்.

அது பிறவிக் குறியீடு என்றும் உலக அளவில் ஒரு சதவீத குழந்தைகள் தான் இதுபோன்ற மச்சத்துடன் பிறக்கும் எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் அதுபோன்ற அரிதான மச்சங்கள் எளிதில் புற்றுநோய் அல்லது மூளையில் கட்டியை உரு வாகக் காரணமாவதால் மருத் துவர்களின் அறிவுரைப்படி, குழந் தையை 3 மாதங்களுக்கு ஒரு முறை மருத்துவமனைக்கு எடுத் துச் சென்று பரிசோதனை செய்து வருவதாக ஒலிவரின் தந்தை தெரி வித்துள்ளார். (ஓ ரி)

# ஜப்பானில் காணாமற்போன ஹெலியைத் தேடும் பணி தீவிரம்

டோக்கியோ, பெப்.14

ஜப்பான் நாட்டில் 3 பேருடன் கடற்படை பயிற்சி ஹெலிகொப் டர் ஒன்று நேற்றுமுன்தினம் காணாமற்போயுள்ளது. இதை யடுத்து ஹெலிகொப்டரைத் தேடும் பணிகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.



தென் மேற்கு ஜப்பானில் உள்ள ககோஷிமாமாவட்டத்தில்வானில் பறந்து கொண்டிருந்தபோது, திடீரென ஹெலிகொப்டருடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதாக கடற் படைதற்காப்புபடைசெய்தித் தொடர் பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். காணாமல் போன ஹெலியில் பயிற்சி பெற்று வந்த ஒருவர் உட்பட மூவர் இருந்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து ஹெலியைத் தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட் டுள்ளதுடன், அது காணாமற்போன மைக்கான காரணம் குறித்தும் ஆராயப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஓ ரி)

# தூதரகங்களுக்கு யேமனில் மூடுவிழா

யேமனில் அரசியல் குழப்பநிலை நீடித்து வருவதாலும், வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்று வருவதா லும் யேமனிலுள்ள தூதரகத்தை அமெரிக்கா திடீரென மூடி உள்ளது. தூதரக ஊழியர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை அமெரிக்க வெளியுறவுத் துறை உறுதி செய்துள்ளது. இங்கி லாந்து தூதரகமும் இதேபோன்று மூடப்பட்டுள்ளது. இதனை லண்ட னில் உள்ள வெளியுறவுத்துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

அரேபிய தீபகற்பப் பகுதியில் அல் குவைதா தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருவதுடன், அங்கு தொடர்ந்து பல்வேறு குண்டுவெடிப்பு மற்றும்மனிதவெடிகுண்டுத்தாக்குதல் சம்பவங்களை நடத்தி வருகின்ற னர். மேலும் அதிபரின்மாளிகையை யும் அவர்கள் தமது வசம் கொண்டு வந்தனர். இதனையடுத்தே தூதரகங் களை மூடுவதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# இஸ்லாமிய மாணவர்கள் கொலை நாத்திகனின் திகில் வாக்குமூலம்

வொஷிங்டன், பெப். 14


அமெரிக்காவில் இஸ்லாமிய மாண வர்கள் 3பேர் சுட்டுக் கொல்லப் பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத் தியுள்ளது. மதங்களை வெறுப்ப தாலேயே அந்தக் கொலைகளைத் தான் செய்ததாக நாத்திகரான ஸ்டீபன் ஹிக்ஸ் விசாரணையில் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சேப்பல் பகுதி யில் வசித்து வந்த டியா ஷேடி பராக் கத் அவரது மனைவி யூசுர் அபு சல்ஹா மற்றும் சகோதரி யூசுரின் ரஸான் அபுசல்ஹா என்ற 3 இஸ் லாமிய மாணவர்கள் வடக்கு கரோ லினா பல்கலைக்கழகத்தில் பயின்று வந்துள்ளனர். அவர்களது குடியிருப் பிலேயே ஸ்டீபன் என்ற நப ரும் வசித்து வந்துள்ளார்.

இவருக்கும் இஸ்லாமிய மாணவர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டு அது, மோத லில் முடிந்துள்ளது.

அந்தவேளையில் கோபத் தில் ஸ்டீபன் 3 மாணவர்க ளின் மீதும் சரமாரியாக துப் பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டுகொடூரமாககொலை செய்துள்ளார்.

அதன்பின்வடக்குகரோலினா பல்கலைக்கழக வளாகத் துக்கு வெளியே, ஸ்டீபன் தன்னைத் தானே சுட்டுக்கொண் டுள்ளார்.



அந்தத் தகவலறிந்து சம்பவ இடத் துக்கு விரைந்து சென்ற பொலி ஸார் ஸ்டீபன் ஹிக்ஸை கைது செய்து விசாரணை நடத்தியுள்ளனர். விசாரணையில் அவர் ஒரு நாத்தி கவாதி என்பதும், மதங்களுக்கு எதிராக பேஸ்புக்கில் கருத்துக் களைப் பதிவேற்றம் செய்து வந் தமையும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கொலை க்குற்றம் உட்பட மூன்று பிரிவுகளில் ஸ்டீ பனை கைது செய்த பொலிஸார், துர்ஹம் கவுண்டி சிறையில் அடைத் துள்ளனர்.

மேலும் மதத்தின் மீதான வெறுப் பினால் தான் அந்த கொடூர சம் பவம் நிகழ்ந்துள்ளது எனசாவடைந்த மாணவர்களின் பெற்றோர் குற்றம் சுமத்தியுள்ளனர். (ஓ–ரி)

## தாய்வானில் அதிகாரிகளை சிறைவைத்த குற்றவாளிகள்

தைபே, பெப்.14

தாய்வான் நாட்டில் கயோ சியுங் நகரின் மத்திய சிறையில் தாய்வான் நாட்டின் கொலை, கொள்ளை மற்றும் போதை மருந்து கடத்தல் போன்ற பலவித குற்றங்களில் தண்டனை பெற்ற கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அங்கு அடைக்கப்பட்டிருந்த 6 கைதிகள் திடீரெனசிறைப் பொறுப்புஅதிகாரியையும், வேறு ஓர் அதிகாரியையும் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்துக்கொண்டனர்.

பின்னர்அவர்களிடம்அங்குள்ளஆயுத கிடங்குக்கு தங்களை அழைத் துச் செல்லும்படி வலியுறுத்தினர். அங்கு 4 துப்பாக்கிகள், 6 கைத்துப்பாக்கிகள் மற்றும்200குண்டுகளையும்எடுத்துக் கொண்டனர்.ஆயுதங்களுடன் அவர்கள்அங்கிருந்து தப்பிக்க முயன்றதகவல் அறிந்ததும் பொலிஸார் சிறைச் சாலையைச் சுற்றி முற்றுகையிட்டு துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இதனால் அவர்களால் அங்கிருந்து தப்பிக்க முடியவில்லை.

அதனையடுத்து பொலிஸார் கைதிகளுடன் பேச்சுக்களை நடத்தியதைத் தொடர்ந்து பணயக் கைதிகளாக இருந்த 2 அதிகாரிகளும் மீட்கப்பட்டனர். அதனையடுத்து தப்பித்துச் செல்ல முயன்ற 6 கைதிகளும் துப்பாக்கியால் சுட்டு தம்மைத் தாமே மாய்த்துக்கொண்டனர். (ஒ–ரி)


## ஸ்ரீரங்கம் இடைத்தேர்தல்
### வாக்குப்பதிவு ஆரம்பம்

சென்னை, பெப்.14

ஸ்ரீரங்கம் சட்டசபைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப் பதிவு நேற்று ஆரம்பமாகியுள்ளது. வாக்குச்சாவடி அலுவலர்கள் வாக்குப்பதிவு விவரங்களை உடனுக்குடன் அளிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் கமரா பொருத்தப்பட்டிருப்பதால் வாக்குப்பதிவை உள்ளூர் தொலைக் காட்சிகள் மூலம் நேரடியாக ஒளி பரப்புவதற்குத் தேர்தல் ஆணையம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மத்திய தொழில் பாதுகாப்புப் படை வீரர்கள் 800க்கும் மேற்பட்டோர், பொலிஸார் என 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)



## மனித எலும்புக்கூடுகளால் நிறைந்துள்ள மர்ம ஏரி

டில்லி, பெப். 14

இமயமலைக்கு மிக அருகே மனித எலும்புக்கூடுகள் நிறைந்த மர்ம ஏரியொன்று காணப்படுகிறது

உத்தரகண்ட் மாநிலத்தில் கடல் மட்டத்திலிருந்து 16,500 அடி உயரத்தில் ரூப்குந்த் என்ற மர்ம ஏரி அமைந்துள்ளது.

பனியால் சூழப்பட்ட, 2 மீற்றர் ஆழம் கொண்ட அந்த ஏரியில், 600க்கும் மேற்பட்ட மனிதர்களின் எலும்புக்கூடுகள் உள்ளதாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. மேலும் அந்த எலும்புகளை ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சிக் குழுவினர் ஆராய்ந்து அது மிகப் பழைமை வாய்ந்தவையாக இருக்கலாம் எனத் தெரிவித்துள்ளனர். மேலும் பனிமழையால் அவர்கள் இறந்திருக்க வேண்டும் எனவும் ஆராய்ச்சியாளர்கள் ஊகித்துள்ளனர். (ஒ–ரி)

## கிறிஸ்தவ பாடசாலை மீது மர்ம நபர்கள் தாக்குதல்
### டில்லியில் சம்பவம்



புதுடில்லி, பெப்.14


டில்லியில் கிறிஸ்தவ பாடசாலை மீது மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தெற்கு டில்லியில் வசந்தவிஹார் பகுதியில்லுள்ள ஹோலி ஆக்ஸிலியம் பாடசாலைக்குள் நுழைந்த சிலமர்மநபர்கள்பள்ளிமுதல்வரின் அறையை சூறையாடியுள்ளனர்.

முன்னதாக, பாடசாலை வளாகத்தில் இருந்த கமராக்களை அவர்கள் உடைத்து நொறுச் கினர்.

பாடசாலை தாக்குதலுக்குள்ளான விடயம் தெரியவந்தவுடன் பொலிஸார் அந்த இடத்துக்கு விரைந்து சென்ற போதும் மர்ம நபர்கள் தப்பிச்சென்றுள்ளனர்.

டில்லியில் அண்மைக்காலமாக தேவாலயங்களை குறிவைத்துத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வந்தன. குறுகிய கால இடைவெளியில் 5 தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்த விவகாரம் உலகளவில் கண்டனத்துக்குள்ளாகியுள்ள நிலையில், தற்போதுகிறிஸ்தவபாடசாலைமீதுதாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ஒ–ரி)



பிரான்ஸில் நடைபெற்ற 82 ஆவது எலுமிச்சம் பழத்திருவிழாவில் 20 000 மணித்தியாலங்கள் வேலை செய்து 145 மெற்றிக் தொன் எலுமிச்சம்பழத்ங்களையும் தோடம்பழங்களையும் கொண்டு உருவாக்கப்பட்ட முகமூடி.

## கெஜ்ரிவாலுக்கு குடியரசுத் தலைவர் பரிசாக அளித்த புத்தகங்கள்



புதுடில்லி, பெப்.14

குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்த அர்விந்த் கெஜ்ரிவாலுக்கு இந்திய அரசமைப்பு சட்டம் மற்றும் எண்ணங்களும் பிரதிபலிப்பும் என்ற இரண்டு புத்தகங்களை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி பரிசாக வழங்கினார்.

டில்லி முதல்வராகப் பதவியேற்க உள்ள அர்விந்த் கெஜ்ரிவால் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்தார். இந்த சந்திப்பின்போது, அந்த இரண்டு புத்தகங்களையும் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி கெஜ்ரிவாலுக்கு பரிசாக வழங்கினார். (ஒ–ரி)

## கொத்தடிமைகள் 333 பேர் மீட்பு

சென்னை, பெப். 14

திருவள்ளூர் மாவட்டத்தில் செங்கல் சூளை ஒன்றில் கொத்தடிமைகளாக வேலைபார்த்து வந்த ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த 333 பேர் மீட்கப்பட்டுள்ளனர். இவர்களில் 50க்கும் மேற்பட்டவர்கள் குழந்தைகளாவர், ஒரிசாமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் கொத்தடிமைத் தொழிலாளர்களாக வேலைபார்த்து வருவதாகக் கிடைத்த தகவலை அடுத்து, மாவட்ட நிர்வாகம் மேற்கொண்ட நடவடிக்கையில் அந்த 333 பேரும் மீட்கப்பட்டுள்ளனர்.

அந்தச் செங்கல் சூளையின் உரிமையாளர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ–ரி)



## ஐக்கிய இராச்சியத்தில் ஓட்டுநர் இல்லாத கார்கள்

ஐக்கிய இராச்சியத்தில் நான்கு இடங்களில் தானாகவே இயங்கும் ஓட்டுநர் இல்லாத கார்கள் அல்லது தானியங்கி நாற்சக்கர வாகனங்கள் சோதனை முயற்சியாக வீதிகளில் இயக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

ஓட்டுநர் இல்லாத வாகனத்தொழில் நுட்பம் குறித்து ஐக்கிய இராச்சியம் ஆய்வு செய்வதன் ஒரு பகுதியாக இந்த வாகனங்களை அரசு அனுமதித்துள்ளது. எனினும்ஐக்கிய இராச்சியத்தில் இந்த ஓட்டுநர்இல்லாதகார்களை வீதிகளில் அனுமதிக்க வேண்டுமானால் நாட்டின் வீதிகளிலும், கார் பரிசோதனை வழிமுறைகளிலும் மாற்றங்கள் கொண்டுவரப்படுவது அவசியம் என்று போக்குவரத்துத் துறை தெரிவித்திருக்கிறது. (ஒ–ரி)

## ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலுக்கு நாடாளுமன்ற அனுமதியைக் கோருகிறார் ஒபாமா

வொஷிங்டன், பெப்.14

இஸ்லாமிய அரசு என்ற ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் தீவிரவாதிகளுக்கு எதிராக மூன்று ஆண்டு காலம் இராணுவ நடவடிக்கை எடுக்க அமெரிக்க நாடாளுமன்றத்தின் அனுமதியை அதிபர் ஒபாமா கோரியுள்ளார்.அந்தத்திட்டத்தில் அமெரிக்கப் படைகள் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் தரைவழித் தாக்குதல்களை முன்னெடுக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஈராக் மற்றும் சிரியாவில் பல பகுதிகளைக் கட்டுப்படுத்தி வரும் ஐ.எஸ். அமைப்பு மீது தாக்குதல்களை நடத்த தனக்கு சட்டபூர்வமான அதிகாரம் ஏற்கனவே உள்ளது என்று அமெரிக்க அதிபர் தெரிவித்துள்ளார்.

எனினும் அதற்கு நாடாளுமன்றத்தின் முழுமையான ஆதரவை அவர் கோரியுள்ளார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு ஈராக் மீதான இராணுவத் தாக்குதலை முன்னெடுப்பதற்கு முன்பாக முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ் இதே போன்று நாடாளுமன்றத்தின் அனுமதியைக் கோரியிருந்தார். ஆனாலும் அதிபரால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை தொடர்பில் தங்களுக்குக் கவலைகள் உள்ளன என்று அமெரிக்க மக்களவையின் சபாநாயகரும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவருமான ஜோன் போய்னெர் தெரிவித்துள்ளார். (ஒ–ரி)

# ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ் பன்னிரு திருமுறை பற்றிய ஒரு நோக்கு

*அண்மையில் இலண்டனில் நிகழ்ந்த இரண்டாவது உலகத் திருமுறை மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை.*

**மு.மாசிலாமணி**

என்று தோன்றியதென உறுதியாகக் கூறமுடியாத அளவிற்கு மிகத் தொன்மையும் இலக்கிய, இலக்கணச் செழுமையும் நீண்ட தொடர்ச்சியான வரலாற்றுச் சிறப்புக் கொண்டதும் இன்றும் வழக்கிலுள்ளதுமான ஒரு சில உலக செம்மொழிகளில் தமிழும் ஒன்று. தமிழ்மொழிக்கெனத் தனிச்சிறப்புக்கள் பலவுண்டு. உலகின் ஒப்பரிய சமயங்களான சமணம், பௌத்தம், சைவம், வைணவம், இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற எல்லாச் சமயங்களும் தத்தம் சமயக் கொள்கைகள் கோட்பாடுகளை விளக்கும் அருமையான பல இலக்கியங்களை இயற்றிப் பெருமை கொள்வதற்கு இடமளித்த மொழி தமிழே. தமிழிலக்கியம் என்ற பெருஞ்சுரங்கத்தில் சமயச் சார்பில்லாத செந்தமிழ் ஆக்கங்களே



இல்லை என்னுமளவுக்குப் பெரும்பாலும் சமயம் சார்ந்த நூல்களே நிறைவாகவுள்ளன. ஒவ்வொரு சமயத்தாரும் உருகி உருகிப் பாடித் தமிழைப் பக்திக்கும் உருக்கத்திற்கும் உரிய தெய்வீக மொழியாகச் சிறப்படையச் செய்துள்ளனர்.

தமிழைப் பக்தியின் மொழி எனப் போற்றுவர். ஈழத்துத் தமிழ்ப் பேரறிஞர் தனிநாயகம் அடிகளார் தமிழ்க் கவிதைகளில் சிறந்த பாடல்கள் இறையுணர்வு பற்றியும் இயற்கையருள் பற்றியுமே பேசுவதாக பெஸ்கி பாதிரியார் குறிப்பிடுவதாகப் பேராசிரியர் பாலசுப்பிரமணியம் தமது தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலில் எடுத்துக்காட்டுவர். பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பெரிய புராணம் என்ற பக்திப் பெரு நூலின் ஆசிரியர் சேக்கிழாரோ ஞானமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ் எனத் தமிழ் மொழியைத் தெய்வத் தமிழ் என்றே அறுதியிட்டு உறுதிபடக் கூறியுள்ளார். இவ்வாறு இறையனுபவ உணர்வுகளை மிக இலாவகமாகச் சித்திரிக்கும் சிறப்புப் பெற்ற தமிழ்மொழி ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தெய்வீக உணர்வு பொங்கிப் பிரவகிக்கும் தெய்வத் தமிழ்த் திருநூல்களைப் பக்திப் பனுவல்களைப் பல நூற்றுக்கணக்கில் தோற்றுவித்துள்ளது.

சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த கி.பி.3 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் தமிழ்நாடு சேர, சோழ, பாண்டியர் என்ற முடியுடை வேந்தர்களின் ஆட்சியில் இருந்தது. தமிழ் மக்களும் இயற்கையோடியைந்த வாழ்க்கை நடத்தினர். அக்காலத்தில் இலக்கியங்களும் மக்களால் பெரிதும் போற்றப்பட்ட காதல், வீரம் ஆகிய பண்புகளைப் படம் பிடித்துக் காட்டும் காலத்தாலழியாத சொல்லேவியங்களாக மிளிர்ந்தன.

சங்ககாலத்தைத் தொடர்ந்து தமிழகத்தின் ஆட்சியதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட சமணர்களான களப்பிரர் என்ற அரசவம்சத்தினர் ஆட்சியில் தமிழ்மக்களின் வாழ்வியல் நெறிகள் சிதைந்து சின்னாபின்னமாயின. கோயில்கள் இடிக்கப்பட்டுச் சமணப் பள்ளிகள் நிறுவப்பட்டன. தமிழர்தம் உயிரினும் மேலாகப் போற்றி வளர்த்த இசை, கூத்து, நடனம், ஆடல், பாடல் போன்ற

> சங்ககாலத்தைத் தொடர்ந்து தமிழகத்தின் ஆட்சியதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட சமணர்களான களப்பிரர் என்ற அரச வம்சத்தினர் ஆட்சியில் தமிழ் மக்களின் வாழ்வியல் நெறிகள் சிதைந்து சின்னாபின்னமாயின.

கலைகள் யாவும் அரச ஆதரவின்மையாலும் சமணர்களின் எதிர்ப் பரப்புரைகளாலும் கைவிடப்பட்டன. ஒட்டுமொத்தமாகப் பழம் பெருமைமிக்க ஓர் இனத்தின் நாகரிகம், பண்பாடு, வாழ்க்கை விழுமியங்கள் அனைத்தையுமே இருள் கௌவிக்கொண்டது. அத்தகையதொரு இருள்சூழ்ந்த நிலையற்றான் செந்தமிழரின் செழுமைமிக்கச் செந்நெறிக்கு அவர்தம் வாழ்வியல் நடைமுறைகளுக்குப் பண்பாட்டுக் கருவூலங்களுக்குப் புத்துயிரளித்து மீண்டும் அவற்றை உயர்நிலைக்குக் கொண்டு வருவதற்குமென இறையருள் பெற்ற அவதார புருஷர்களான சைவ நாயன்மார்கள் "திராவிடச் சிசு" என ஆதிசங்கரரால் போற்றப்பட்ட ஞானசம்பந்தர் "தமிழ்மொழித் தலைவர்" எனச் சேக்கிழாரால் விதந்து கூறப்பட்ட நாவுக்கரசர் ஆகியோர் தலைமையில் இன்தமிழ் மக்களை ஓரணியின் கீழ் ஒன்றிணைத்து இயக்கிய இயக்கத்தினையே வரலாற்றாசிரியர்கள் "பக்தி இயக்கம்" எனக் குறிப்பிடுவர். அந்த அருளாளர்கள், அடியார்கள் புடைசூழக் கைவிடப்பட்ட சிவத்தலங்களுக்குத் தலயாத்திரை மேற்கொண்டு பண்ணமைந்த பக்திப் பாசுரங்கள் பல்லாயிரக்கணக்கில் பாடினர். அவர்கள் வெறும் கவிஞர்கள் மட்டுமல்லர். புறச் சமயங்களின் வன்முறை சார்ந்த தீவிர எதிர்ப்பரப்புரைகளாலும் வேதனை மிக்கப் போதனைகளாலும் வாழ்க்கையில் வெறுப்புற்று விரக்தியடைந்து நொந்து நலிந்து சீரழிந்த மக்களுக்கு மண்ணில் நல்ல வண்ணம் வாழும் மாண்புறு மனித வாழ்க்கைக்கு அர்த்தம் கற்பிக்க உருவான "பக்தி இயக்கம்" என்ற அந்தப் பேரியக்கத்தின் அரிய செய்திகளைத் தெளிவாகவும் அழுத்தந்திருத்தமாகவும் எடுத்துச் சொல்வதற்கு ஒரு கருவியாகவே கவிதையினைப் பயன்படுத்திய தெய்வீகக் கவிஞர்கள் அவர்கள். சிவநெறியைச் செந்தமிழ் நன்னெறியை உயர்த்த தெய்வத்தமிழால் முடியுமென நிலைநிறுத்திய அவ்வருளாளர்களால் வழி நடத்தப்பட்ட பக்தி இயக்கம் தமிழகத்தில் வரலாறு காணாதவொரு மறுமலர்ச்சியினைத் தோற்றுவித்தது. செந்தமிழ் என்றுமில்லாதவாறு தெய்வத்தமிழாக வளம் பெற்றது.

இயற்றமிழ், இசைத்தமிழ் இரண்டும் ஒன்றிணைந்து பெருவளர்ச்சி எய்தின. தெய்வீகத் தமிழிசை கடல்மடை திறந்த வெள்ளம்போல் பெருக்கெடுத்தது. மன்னனைப் புகழ்ந்து பாடும் பாடல் மரபிற்குப் பதிலாக இறைவனின் பெரும் புகழை, அவனின் பெருங்கருணையை, பேரருளாற்றல்களை எல்லாம் மனம் ஒன்றிய நிலையில் உள்ளம் உருகிப்பாடும் கவிதை மரபு உருவாகித் தெய்வத்தமிழ்ப் பெருநெறியாகச் சிறப்புற்றது. புலன்களை அடக்கு என புறச் சமயங்கள் அழுத்தியுரைக்கப் புலன்களையும் முழுமையாக இறைவழிபாட்டில் செலுத்தி உய்தி பெறலாமென அருளாளர்களின் அன்புநெறி வழிகாட்டியது. இறைவன் மீது ஆராக்காதல் என்னும் உணர்ச்சிப் பெருக்கை மக்கள் உள்ளந்தோறும் ஆழவேரூன்றத்தக்க வகையில் அவர்கள் மொழியில் இன்னிசைப் பாடல்களாகப் பொழிந்தனர். அவர்கள் இறைவனுடன் மானுடன் கொள்ளும் ஆன்ம உறவினைத் தம் பாசுரங்களில் மிகத் தெளிவாக உணர்த்தினர்.




# கூகுள் வணிகக் குழு வெற்றிகரக் கதைகளில் எஸ்.எல்.ஐ.ஐ.ரி மாணவர்கள் பிரகாசிப்பு

எஸ்.எல்.ஐ.ஐ.ரி கல்வியகத்தின் பழைய மாணவர்களான விமுக்தி லியனகே மற்றும் ஷமீர வீரசிங்க ஆகியோர் மொபைல் அப்ளிகேஷன் உலகில் சர்வதேச நிலையை எய்தியுள்ளனர்.

இந்த இருவரும் இணைந்து 'மோகோ ரீடர்' என்னும் புத்தமைவான அப்ளிகேஷனை உருவாக்கியிருந்தனர். இந்த அப்ளிகேஷன் கூகுள் வணிக குழு வெற்றிகரமான கதைகள் போட்டியில் சிறந்த திட்டமாக தெரிவு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வை கூகுள் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த அப்ளிகேஷன் தொடர்பில் லியனகே கருத்து தெரிவிக்கையில்,

இதுவரையில் நாட்டின் மொபைல் பாவனையாளர்களுக்கு தமது சொந்த மொழியில் செய்திகளை தமது கையடக்க தொலைபேசிகளில் பார்வையிடக்கூடிய வாய்ப்பை கொண்டிருக்கவில்லை. செய்தி அப்ளிகேஷனான 'மோகோ ரீடர்' என்பது இந்த மாற்றத்துக்காக அமைந்துள்ளது. தற்போது அண்ட்ரொயிட் கட்டமைப்புக்காக மட்டும் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த அப்ளிகேஷனை கூகுள் பிளேயிலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். 'மோகோ ரீடர்' மூலமாக பட்டியலிடப்பட்ட, உள்நாட்டு மயப்படுத்தப்பட்ட முறையில் செய்திகளை பார்வையிட முடியும். இலங்கையில் இதுபோன்றதொரு அப்ளிகேஷன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும். வெவ்வேறு ஊடகங்களிலிருந்து செய்திகளை திரட்டி, பாவனையாளர்களின் விருப்பத்துக்கமைவான செய்திகளை பார்வையிட முடியும் என்றார்.

இந்த அப்ளிகேஷன் தொடர்பில் அவர் தொடர்ந்தும் விவரிக்கையில்,

'மோகோ ரீடர்' தனது பாவனையாளர்களின் விருப்பங்கள் பற்றி நன்கு அறிந்து கொண்டு, அதற்கேற்ற வகையில் செய்தி ஊடகங்களிலிருந்து செய்திகளைத் தெரிவு செய்து வழங்கும் வகையில் அமைந்துள்ளது.

தற்போது 40 செய்தி ஊடகங்கள் இதில் இணைக்கப்பட்டுள்ளன. இந்த அப்ளிகேஷன் கட்டுரைகள், படங்கள்,அல்பங்கள் மற்றும் வீடியோக்களை கொண்டுள்ளன என்றார். வெற்றிகரமான செயற்பட முடிந்தமை தொடர்பில் லியனகே விவரிக்கையில்,

நாம் முதலில் இந்த அப்ளிகேஷனை கூகுள் பிளே ஸ்ரோரில் அறிமுகம் செய்திருந்தோம். நாம் எமது முதலாவது போட்டியை வென்ச்சர் என்ஜினிடமிருந்து எதிர்நோக்கியிருந்தோம்.

56 நாடுகளைச் சேர்ந்த 317 பங்குபற்றுநர்களின் ஆக்கப் படைப்புகளில் ஒன்றாக எமது 'மோகோ ரீடர்' அப்ளிகேஷனும் பதிவாகியிருந்தது. இதனை தொடர்ந்து கூகுளைச் சேர்ந்த முகவர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் தந்திருந்தார். இவர் எமது அப்ளிகேஷன் தொடர்பில் வீடியோ ஒன்றை எடுத்துச் சென்றார். இவை பின்னர் யூரியூப் இல் வாக்களிப்புக்காக பதிவு செய்யப்பட்டிருந்தன. நாம் வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தோம் என்றார். (த)

# உலகளாவிய வர்த்தக சிறப்பு விருதுகள் வழங்கும் நிகழ்வில் ஜனசக்திக்கு விருது

ஜனசக்தி நிறுவனம், அண்மையில் கலதாரி ஹோட்டலில் இடம்பெற்ற உலகளாவிய வர்த்தக சிறப்பு விருதுகள் நிகழ்வில் சேவைகள் பிரிவில் விருதொன்றை வென்றெடுத்துள்ளது. மேலும் கடல்சார்ந்த காப்புறுதித் துறையில் மிகச்சிறந்த சர்வதேச வர்த்தக செயற்பாட்டாளராகவும் கௌரவிக்கப்பட்டிருந்தது.


இந்த விருதுகள் திட்டத்தின் கோட்பாடு, இதில் எவ்வித விண்ணப்பங்களும் உள்வாங்கப்படவில்லை என்பதாகும். தனியார் ம்ற்றும் பொது நிறுவனங்கள் ஆகியன ஏற்றுமதி அபிவிருத்தி சபை, இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் விமானநிலைய மற்றும் விமான சேவைகள் போன்ற அரச நிறுவனங்களினால் மெரிட் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டிருந்தது. பின்னர் இறுதிப்பட்டியல் மத்திய வங்கி ஆளுநரிடம் கையளிக்கப்பட்டிருந்தது என கொழும்பு ஷிப்பர் அக்கடமியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரொஹான் மசகோரல தெரிவித்தார்.

இந்த வழிமுறையில் இந் நிறுவனங்களின் உண்மையான செயற்பாடுகள் மற்றும் சிறந்த தொழிலை மேற்கொள்வது எந்நிறுவனம் என்பது தொடர்பில் அடையாளம் காணக்கூடியதாக அமைந்துள்ளது. காப்புறுதித் துறையிலுள்ள மிகச்சிறந்த நிறுவனங்களுள் நான்காவது இடத்தில் ஜனசக்தி திகழ்கிறது என சிறப்பாக செயற்திறனை வெளிப்படுத்தியிருந்த ஜனசக்தியை பாராட்டிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகளாவிய வர்த்தக சிறப்பு விருதுகள் நிகழ்வு என்பது உலகளாவிய வர்த்தகத் துறையில் ஜி.டி.பி வளர்ச்சிக்கு மிகப் பெரியளவில் பங்களிப்பு வழங்கும் நிறுவனங்களை அடையாளப்படுத்தி வரும் ஈராண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வரும் பெருமைக்குரிய நிகழ்வாகும்.

எந்தவொரு நேரத்திலும் பேரழிவு தாக்கக்கூடும் என்பதால் வர்த்தகத்திற்குத் தேவையான தற்காலிக திட்டத்தை கொண்டிருக்க வேண்டியமை மிக முக்கியமாகும். இதன் காரணமாகவே கடல்சார்ந்த உள்ளிட்ட கூட்டாண்மைத் துறையின் பல பிரிவுகளுக்கு நாம் விரிவான அபாய முகாமைத்துவத்தை வழங்கி வருகிறோம். (த)

# வாசகர் திருமுகம்



## சீரான பஸ்சேவை இல்லாததால் அவதிப்படும் நயினை அடியார்கள்

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவிலுக்கு செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும், விசேட நாள்களிலும் அதிகளவில் அடியார்கள் செல்வது யாவரும் அறிந்ததே.
இந்த நாள்களில் கோவிலி லிருந்து திரும்பும் அடியார்கள் பி.ப.3 மணிக்குப்பின்னர் சீரான போக்குவரத்து வசதி இல்லாத நிலையில் அவதிப்படுவது போக்குவரத்துச் சபையினர் உட்பட யாவரும் அறிந்ததே.
கடந்த 6ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று பி.ப. 4.30 மணிக்குரிய படகில் பிரயாணம் செய்து குறிகாட்டுவானுக்கு பி.ப. 4.50 இற்கு வந்த போது பி.ப. 5.20இற்கு புறப்படும் தனியார் போக்குவரத்துச் சேவை பஸ்– "நிற்க முடியாதஅளவுக்கு ஆள்கள்நிரம்பிய நிலையில் வேளைக்கே சென்று விட்டதாக" அங்கு நின்றவர்கள் கூறினார்கள். கொழும்புக்குச் செல்லும் பஸ் வருமெனவும் 6.30இற்கு புறப்பட்டு ஊர்காவற்றுறை ஊடாக இரவு 8 மணிக்கே யாழ்ப்பாணம் செல்லும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.
இது தொடர்பாக தனியார் போக்குவரத்துப் பகுதியினருடன் தொடர்பு கொண்டபோது தமக்கு சேவையில் ஈடுபட முடியாதெனக் கூறினர். நல்ல வேளையாக– பிரத்தியேகசேவையில் அங்கு வந்த ஒரு பஸ்ஸில் அங்கு நின்ற 40 பயணிகள் ஏறிக் கொண்டனர். இந்தப் பஸ்ஸில் வேலணைவரை வழியிலும் அதிகளவு பயணிகள் ஏறிக்கொண்டனர்.
இவ்வாறான இடையூறுகள் அடிக்கடி ஏற்படுவதுண்டு. இவ்வாறான சில நாள்களில் அடியார்கள் நயினாதீவுக்குத் திரும்பிச் சென்று தங்கி, மறுநாள் பயணிப்பதும் உண்டு.
இவ்விடயம் தொடர்பில் இடையிடையே வாசகர் திருமுகத்தின் மூலம் தெரியப்படுத்தப்படுகின்றது. முன்னர் பி.ப.6மணிக்கு இ.போ. சபை பஸ் சேவை இருந்தமை பெரிய ஆறுதலாக இருந்தது.
எனவே வெள்ளி, செவ்வாய் நாள்களில் இ.போ.ச பஸ்கள் பி.ப. 5மணிக்கு குறிகாட்டுவானிலிருந்து புறப்படத்தக்கதாக ஒரு சேவையை ஈடுபடுத்தவேண்டும் என்பதைப் பலநூறு பயணிகளின் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

*கே.தவராஜ்.*

## முதியவர்களுக்கு உரிய கௌரவம் இல்லை

இலங்கையில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் முதியோர்களைக் (ஓய்வு ஊதியர்கள் உட்பட) கௌரவமாக நடத்துவதாகக் கூறுகிறார்களே தவிர செயலளவில் பாதகமாகவே செயற்படுகிறார்கள்.
இங்கு எத்தனையோ முதியோர் மற்றும் ஓய்வு ஊதியர் அமைப்புகள் இருக்கின்றன. தினமும் பத்திரிகைகளில் முதியோர் மற்றும் ஓய்வூதியர்கள் கௌரவிக்கப்பட்டார்கள் என்று வரும்.
இந்த அமைப்புக்கள் தங்கள் கவனத்தை வயோதிபர்களின் பிரச்சினைகளைக் குறைக்கும் நடவடிக்கையில் முழுமனத்தோடு செயற்படுவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.
அரச உத்தியோகத்தருக்கு மாதாந்தம் ரூபா 10,000 சம்பள அதிகரிப்பாம். அவர்கள் இதைவிட கூடிய தொகைக்கு தகுதியானவர்கள்தான். ஆனால் ஓய்வு ஊதியர்களுக்கு ரூபா 3500 மட்டுமே... ஏன்?
முதியோரின் பண வைப்புக்கு 15 சதவீத வட்டிதருவதாக அரசு சொல்கிறது. ஆனால் வங்கிகளில் ஒரு வருடத்துக்கு மேல் வைப்பிலிட்டால் தான் 15 வீதமாம் குறைவான காலம் என்றால் 8வீதம் மட்டும்தானாம்.
ஓய்வு ஊதியம் கணிப்பதில் பாகுபாடு காட்டப் படுகிறது. 2006இற்கு முன்னர் இளைப்பாறியவர்களுக்கு அதன் பின்னர் இளைப்பாறியவர்களது தொகையில் மூன்றில் இரண்டு பங்கே வழங்கப்படுகிறது.
இந்த முரண்பாடு முந்திய அரசால் ஏற்படுத்தப்பட்டது.அதை அவர்கள் நீக்குவதாகத் தேர்தலுக்கு முன் கூறியிருந்தார்கள். இந்த அரசு இதைப் பற்றிய நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லை.
இலங்கையில் கிட்டத்தட்ட இரண்டு மில்லியன் (20லட்சம்) முதியோர்கள் (ஓய்வு ஊதியர்கள் உட்பட) இருக்கிறார்கள். எல்லோரும் வெறும் வீண் புகழ்ச் சொற்களால் மயங்கிய நிலையில் இருப்பதை விடுத்து, ஒரே குரலில் தங்களுக்கு நியாயமாகத் தரவேண்டிய அனைத்தையும் தரும்படி கோரவேண்டும். இது அனைத்து ஓய்வு ஊதியர் அமைப்புக்களின் பொறுப்பாகும். இந்தப் பொறுப்பை அவர்கள் உதாசீனம் செய்ய மாட்டார்கள் என நாங்கள் எதிர்பார்க்கலாம்.

*பொ.கந்தசாமி, ஓய்வூதியர்.*

### கேலிச் சித்திரம்




## எப்போது விடுவிப்பு?

வலி.வடக்குப் பகுதியில் பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றை சூழ இலங்கைப் படைகளால் அபகரிக்கப்பட்டுள்ள சுமார் 6ஆயிரத்து 300 ஏக்கர் காணிகளில் 1000 ஏக்கரே முதலில் விடுவிக்கப் போவதாக மைத்திரி அரசு அறிவித்திருக்கிறது.
வலி.வடக்குப் பகுதி முன்னர் ஒரு காலத்தில் வடக்கின் பொருளாதாரத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்திய பிரதேசம் ஆகும்.
விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் ஆகிய பிரதான தொழில்களை மேற்கொள்ளும் இந்தப்பகுதி மக்கள் 1980களில் வடக்கின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பை வழங்கியதுடன், வசதி படைத்தவர்களாகவும் தொழில் வழங்குநர்களாகவும் இருந்தனர் என்பது வரலாறு.
வலி.வடக்குப் பகுதியில் பெரும்பாலான நிலங்கள் விவசாயப் பிரதேசங்களாகும். அந்தப் பகுதிகளில் உள்ள வளமான மண்ணில் பயிர்கள் நன்கு விளைதிறன் கொடுக்கக்கூடியவை. இங்கு விளைவிக்கப்பட்ட மரக்கறிகள், திராட்சை, வாழை என்பன 80களில் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதன்மூலம் இப்பகுதி விவசாயிகள் பெரும் நன்மையடைந்தனர். அத்துடன் வலி.வடக்கின் கரையோரப்பகுதி மீன்பிடிக்கு உகந்த கடலைக் கொண்டதாகும். மீன்பிடிக்கென்றே அமைக்கப்பட்ட மயிலிட்டி துறைமுகம் ஊடாக தொழிலில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அக்காலத்தில் கடலுணவுகளை நாட்டின் பல பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்து, பெரும் வருமானம் ஈட்டின.
இந்தப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட பலர் சம்மாட்டிகளாகவும், பெரும் தனவந்தர்களாகவும் இருந்தனர். அதேபோன்று, வலி.வடக்கின் மிகப் பெரிய தொழிற்சாலையான காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் உற்பத்தியான சிமெந்து நாட்டின் பல பாகங்களுக்கும் எடுத்துச்செல்லப்பட்டு பெரும் வருமானம் ஈட்டப்பட்டது. இந்தத் தொழிற்சாலை மூலம் வடக்கில் பெருமளவானோர் தொழில் வாய்ப்பையும் பெற்றிருந்தனர்.
இவ்வாறு வடக்கின் பொருளாதாரத்தில் மிகப் பெரிய பங்களிப்பை வழங்கிய இந்த மூன்று துறைகளும் இப்போது அடியோடு இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. இதனால் வடக்கின் பொருளாதாரமும் மிகப் பலவீனமான நிலையிலேயே உள்ளது.
தமது சொந்த முயற்சியின் மூலம் வாழ்வை வளமாக்கிய வலி.வடக்கு மக்களுக்கு உள்நாட்டுப்போர் மோசமான நிலையைத் தோற்றுவித்தது.
உள்நாட்டு மோதல் தீவிரம்பெற்று, 1990களில் தமது சொந்த இடங்களில் இருந்து உடைமைகளைக் கைவிட்டு வெளியேறிய இந்த மக்கள், 25 ஆண்டுகள் கடந்தும் இன்னும் தமது இருப்பிடங்களுக்குச் செல்லமுடியாமல் தவிக்கிறார்கள். கால்நூற்றாண்டாக அவர்களின் வாழ்வு அகதிமுகாம்களில் அவமாகக் கழிகிறது.
பொருளாதார வளமும் இன்றி போதிய தொழில் வாய்ப்பும் இன்றி அன்றாட ஜீவனோபாயத்துக்கே அல்லாடும் நிலையில் உள்ள அவர்கள் தமது சொந்த இடங்களை விடுவிக்குமாறுகோரி போராட்டங்களை நடத்தி சலித்துப் போய்விட்டார்கள். அந்தப் போராட்டங்களின் பயன், பூச்சியமே. இதனால் வாழ்வே வெறுத்த நிலையில் இருந்த அவர்களுக்கு இப்பொழுது ஓர் இனிப்பான செய்தி கிடைத்திருக்கிறது.
அபகரிக்கப்பட்டுள்ள 6ஆயிரத்து 300 ஏக்கர் நிலத்தில் வெறும் 1000ஏக்கர் மட்டுமே விடுவிக்க மைத்திரி அரசு முன்வந்துள்ளமைதான் அந்தச் செய்தி.
ஆயினும் அதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது என்பது அதற்கு செயல் வடிவம் கிடைத்த பின்னே தெரிய வரும். 1000 ஏக்கரை விரைவில் விடுவிப்பதாகக் கூறியுள்ள அரசு, அந்த விரைவில் என்ற சொல்லுக்கான காலப் பகுதி எது என்பதை குறிப்பிடவில்லை. முன்னர் ஆட்சியில் இருந்த மஹிந்த அரசும் விரைவில் விடுவிப்போம் என்றே கூறி வந்தது. ஆயினும் கடைசிவரை அதைச் செய்யவில்லை. அவ்வாறே மைத்திரி அரசின் அறிவிப்பும் புஸ்வாணமாகிப் போகுமோ என்று ஏக்கத்துடன் இருக்கிறார்கள் வலி. வடக்கு மக்கள். அந்த ஏக்கத்தை புரிந்து கொண்டு தனது அறிவிப்புக்கு செயல் வடிவம் கொடுக்க முன்வருமா புதிய அரசு.

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## புதிய அரசின் புகுந்து விளையாடும் போக்கு எதனை நாடியது...............?

அடே அப்பா! வடக்கில் முந்திய அரசு அபகரித்த பொது மக்களின் ஆயிரம் ஏக்கர் நிலத்தை விடுவிக்கப் போவதாக மைத்திரிபால சிறிசேனவின் புதிய அரசு அறிவித்துள்ளது. யானைப் பசிக்குச் சோளப்பொரி போட்ட கதை போன்றே அது அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தின் வடபுறத்தில், அப்பகுதிவாழ் மக்களின் ஆறாயிரத்து முந்நூறு ஏக்கர் காணிகளை, முந்திய நட்டாமுட்டி அரசு பலவந்தமாகப் பறித்து எடுத்தது.

இது விவகாரத்தில், தம்பிபோட்ட அட்டூழியத் திட்டங்களுக்கு அண்ணன் ஜனாதிபதி ஒத்து ஊதினார் என்பது இரகசியமன்று.

தமிழர்கள் ஆண்டாண்டு காலமாக, சந்ததி சந்ததியாக உழைத்து, உண்டு, உறங்கிய தாய் மண்ணில், தங்களின் மேலாதிக்கத்தைத் திணித்து, ஆண்டான் அடிமை ஆட்சியை நிலை நிறுத்தி இருந்தது மறைந்த சகோதரர் அரசு.

அதற்கான வெகுமதியாக ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில், வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் உரிய உகந்த பதிலை வழங்கினார்கள்.

புதிய அரசு - கூட்டிணைப்பு - தாற்பரியம் தெரியாமல், புரியாமல் ஆரம்ப ஏற்பாடாக, மக்களின் ஆயிரம் ஏக்கர் நிலத்தை மட்டுமே மக்களிடம் மீளளிக்க முடிவு செய்து - அதிலும் (வளலாயில்) 240 ஏக்கரை மட்டுமே - (திருப்பிக்) கொடுக்க முடிவு செய்திருக்கிறது. அப்பாடா, என்ன தாராளம்; தார்மீகம்!!

புதிய அரசின் ஏய்க்காட்டும் மீள்குடியேற்றத்திட்டம், மக்களின் எதிர்ப்பினால் முந்திய அரசினால் (2013 இல்) கைவிடப்பட்டிருந்தது. விரிவாகச் சொல்வதானால், யானைப் பசிக்கு சோளப் பொரி கொடுக்கும் திட்டத்தையே, தானம் செய்வதற்கு மைத்திரி அரசு இனம் கண்டிருக்கிறது!

யாழ்.குடாநாட்டின் விவசாயம், கடற்றொழில்சார் வளம் மிக்க பிரதேசம் வலி.வடக்கு. அந்த வளம் நிறைந்த பூமியை - தமிழ் மண்ணை - அபகரிக்கும் உள்நோக்குடனேயே, விமான மற்றும் துறைமுக அபிவிருத்தி என்ற புனைக்கப் பூசி, ஏப்பம் விடுவதற்குத் திட்டமிட்டனர் முந்திய அரச பிரதானிகள். காலத்தின் வினையால் அது தடைப்பட்டுவிட்டது.

அதனை மீள்விப்பது என்ற போர்வையில், அதை ஒத்த திட்டத்தைக் கையில் ஏந்தி உள்ளது புதிய (மைத்திரிபால) அரசு.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில், தம்வசமுள்ள நிலப் பகுதிகளில் பெரும் பாகம் தமது தரப்புக்கு அவசியமற்றவை என்று இராணுவத் தரப்பு வெளிப்படுத்தி இருந்தது. அதற்கமைய இராணுவத் தரப்பு கையகப்படுத்தியுள்ள நிலத்தின் பெரும் பகுதி விடுவிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடம் நிலவியது.

குறிப்பிடப்பட்ட அந்தத் திட்டம் முன்னைய அரசால் கைவிடப்பட்டிருந்தது. அதனையே இன்றைய அரசு தூசி தட்டி முன் வைக்கிறது.

மேலும் வலி.வடக்கு மக்களின் ஒரு பிரதேசத்தினரால் நிராகரிக்கப்பட்ட திட்டத்துக்கு அரிதாரம் பூசி, நற்பெயர் வாங்குவதற்கு புதிய அரசு திட்டமிடுகிறது....

இது தொடர்பில், கூர்ந்து நோக்கப்பட வேண்டிய மற்றொரு சூட்சுமமும் இதில் உண்டு; அதுவே இப்போது மேல் எழுந்துள்ளது.

இலங்கை இராணுவத்தினரால் சுவீகரம் செய்யப்பட்ட காணிகளைத் தமக்கு மீள வழங்குவதோடு, வேலை வாய்ப்புக்கும் வகை செய்யப்படும் என்று இலங்கை அரசு உறுதி வழங்கினால் - -

அதனை இந்திய ஆட்சிபீடம் உத்தியோக பூர்வமாக அங்கீகரித்தால் - -

நாம் இலங்கை திரும்புவதற்குத் தயார் என்று தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழ் அகதிகள் தெரிவித்திருந்தனர்.

அதனைச் சாதகமாக்கிக் கொள்ளும் "ராஜதந்திரம்" ஒன்றையும் இலங்கை அரசு செலவிக் கொண்டுள்ளது. அதனைச் செயலாக்குவதன் ஊடாக, இந்தியாவின் நரேந்திர மோடி அரசின் நற்பெயரைச் சம்பாதிக்கலாம், அதனுடன் சேர்ந்து தாயம் உருட்டுவதற்கும் உள்நோக்கம் கொண்டுள்ளது எனலாம்.

இன்னொரு புறத்தில், புதிய அரசு ஊதி, முழங்கி, வலி.வடக்கு வாழ் மக்களிடம் இருந்து சுவீகரம் செய்த, நீண்டு பரந்து கிடக்கும் மண்ணில், ஆகக் கூடியது பதினைந்து சதவீதமே, உத்தேசிக்கப்பட்டுள்ள ஆயிரம் ஏக்கர் நிலம்!

ஒட்டுமொத்தத்தில், இந்திய அரசைத் திருப்திப்படுத்துவதோடு வடக்கு மக்களையும் மீள்குடியேற்றுவது என்ற இரட்டைக் குறி பார்க்கும் தந்திரமான உத்தியே, திட்டமே, ஆயிரம் ஏக்கரில் மீள் குடியேற்றம்; விரைவில் விடுவிப்பு என்ற அறிவிப்பின் உள்ளார்த்தம்!

எங்கள் பாட்டிமார் அடிக்கடி உச்சரிக்கும், "புதுவிளக்குமாறு நன்றாகக் கூட்டும்" என்ற உவமையே, (இலங்கை) அரசின் புகுந்து விளையாடும் தற்போதைய போக்குக்குப் பொருத்தமானது எனலாம்......!!






# அடி சறுக்கிய நிலையில்

# நரேந்திர மோடி

■ சேரலாதன்

## டில்லி தோல்வியால் இந்த நிலை

யானைக்கும் அடிசறுக்கும் என்று கூறுவார்கள். இவ்வாறானதொரு நிலை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் ஏற்பட்டுவிட்டது.

இந்தியத் தலைநகரம் அமைந்துள்ள டில்லி சட்ட சபைக்கு இடம் பெற்ற தேர்தலில் அரசியலுக்குப் புதியவரான அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மி கட்சி அமோக வெற்றிபெற்று சட்ட சபையின்சுமார்96சதவீதமானஇடங்களில் வெற்றி பெற்று வரலாற்றுச்சாதனையொன்றைப் பதிவு செய்துள்ளது.

மொத்தமுள்ள சட்டசபை ஆசனங்களில் ஆம் ஆத்மிகட்சி 67 ஐக் கைப்பற்ற மோடி தலைமையிலான மத்தியில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியால் வெறும் 3ஆசனங்களை மாத்திரமே வெல்ல முடிந்துள்ளது. சோனியா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சிக்கு ஓர் ஆசனம் கூடக் கிடைக்கவில்லை.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மோடியை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்திப் போட்டியிட்ட பாரதீய ஜனதாக் கட்சி தனியொரு கட்சியாகப் பெரும்பான்மை பெற்று மத்தியில் ஆட்சியைப் பிடித்தது. இதனால் பல ஆண்டுகளாக நீடித்த கூட்டணி அரசு அமைக்கும் நடவடிக்கை முடிவுக்கு வந்தது.

நாடாளுமன்றத் தேர்தலையடுத்து இடம்பெற்ற சில மாநிலங்களின் சட்ட சபைத் தேர்தல்களிலும் மோடியின் அலை வீசியதால் அங்கும் தொடர் வெற்றிகள் கிடைத்தன. இதனால் இந்தியாவில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் நரேந்திரமோடியின் மதிப்பு உயர்ந்து காணப்பட்படுகிறது. கடந்த மாதம் இடம்பெற்ற இந்தியாவின் குடியரசு தின நிகழ்வுகளில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டமை இந்தியப் பிரதமரின் மதிப்பை மேலும் உயர்த்தியது. அதுவும் டில்லி சட்டசபைத் தேர்தல்கள் இடம்பெறவிருந்த நிலையில் ஒபாமா இந்தியாவுக்கு வருகை தந்தமை ஆளும் கட்சிக்குச் சாதகமாக அமையுமென எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் டில்லி மக்கள் எதற்கும் மயங்காது தீர்க்கமானதொரு முடிவை அளித்துவிட்டனர்.

நரேந்திரமோடி பதவிக்கு வந்தவுடன் பல புதிய திட்டங்களை அறிவித்தார். இந்தியாவைத் தூய்மைப் படுத்தும் திட்டம், வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்தைக் கண்டுபிடித்து இந்தியாவுக்கு கொண்டு வருகின்றமை, ஊழல் அரசியல்வாதிகளை அரசியலிலிருந்து ஒதுக்கி வைத்தல், கங்கை நதியை தூய்மையாக்கும் திட்டம், வறுமையை ஒழித்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், குடும்ப அரசியலுக்கு முற்றுப் புள்ளி இடல் என்பன இவற்றுள் முக்கியமான சிலவாகும். ஆரம்பத்தில் இந்தத் திட்டங்களுக்கு மக்களிடையே வரவேற்புக் கிடைத்ததென்னவோ உண்மைதான். ஆனால் நாள்கள் செல்லச் செல்ல மோடி தலைமையிலான அரசினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் வெறும் வாக்குறுதிகளாகவே இருந்து வருவதையும், செயலுருப் பெறாமல் இருப்பதையும் கண்ட மக்கள் சலிப்படைந்ததை டில்லி சட்ட மன்றத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

டில்லி மாநில முதல்வராகப் பதவியேற்கவுள்ள அரவிந்த் கெஜ்ரிவால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாரணாசி தொகுதியில் மோடியை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவிக்கொண்டவர். ஊழலுக்கு எதிரான அமைப்பின் முக்கிய செயற்பாட்டாளரான அவர் இந்தியாவிலிருந்து ஊழலை முற்றாக விரட்டுவதே தனது முதல் வேலை எனக் கூறிவருகின்றார். அரசியல் என்பது சாக்கடையாக இருக்காது புனித நதிபோன்று இருக்க வேண்டுமெனவும் அவர் மக்களிடையே பரப்புரை செய்தார். இந்திய அரசியல்வாதிகளின் ஊழல் நடவடிக்கைகள் பிரசித்தமானவை. அமைச்சர்களிலிருந்து சாதாரண அரசியல்வாதி வரை ஊழலில் ஈடுபடுவதை அங்கு சாதாரணமாகவே காணமுடியும்.

இந்த நிலையில் கெஜ்ரிவாலின் ஊழலுக்கு எதிரான பரப்புரைகள் மக்களை வெகுவாகக் கவர்ந்து விட்டன.

இன்றைய நிலையில் மோடியின் ஆவேசப் பேச்சுக்களும், அதிரடியான வாக்குறுதிகளும் டில்லி மக்களிடம் எடுபடவில்லை என்பதையே டில்லி தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. அதிலும் இந்த அளவுக்கு படுதோல்வி ஏற்படுமென மோடியே எதிர்பார்த்திருக்க மாட்டார். அவரது கட்சிக்குள்ளேயே மோடி பிரதமரானதற்கு எதிர்ப்பு இல்லாமலில்லை. ஆனால் அவர் தலைமையில் பெற்ற வெற்றிகள் அவருக்கெதிரான சலசலப்புகளை அடக்கிவிட்டன. இந்த நிலையில் டில்லியில் கிடைத்த தோல்வி அவருக்கு எதிரானவர்களைஉற்சாகப் படுத்தி விடுமென்பதை மறுக்க முடியாது.

எவர் எதைக் கூறினாலும் நரேந்திர மோடிக்குக்கிடைத்த தற்போதைய தேர்தல் தோல்வியை ஒரு சறுக்கல் என்றுதான் கூற வேண்டும்.

# ஒரு நீதியான தேசம்

## அனைத்து அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து அதனை உருவாக்க பாடுபட வேண்டும்

வந்தியத்தேவர்



மக்களுக்கான அத்தியாவசிய பொருள்களின் விலைகளைக் குறைத்ததன் காரணமாக மக்கள் மத்தியில் புதிய அரசு வரவேற்பைப் பெற்றிருந்தாலும், முழுமையான வரவேற்பைப் பெறுவதற்கு அரசு சில கடினமான பாதைகளைத் தாண்ட வேண்டியுள்ளது.

ஒரு புதிய பயணத்தை ஆரம்பித்திருக்கும் அரசு நிதானத்துடனும், பொதுமையுடனும் செல்ல வேண்டிய பயணம் இது. இதில் நாட்டின் நலன் குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெளிவுபடுத்தியுள்ளார்.

வெறுமனே விலைவாசிகளைக் குறைப்பதாலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதாலும் அரசு கருதும் தேசத்தின் நலன் எட்டிவிடும் என்பதற்கில்லை. உண்மையான தேசநலன் என்பது நாட்டின் முக்கிய பிரச்சினைகளுக்கு உகந்த தீர்வுகளைக் காண்பதில் காட்டப்படும் அக்கறையும், அதற்கான செயற்பாடுகளும்தான் என்பதைக் குறிப்பிட்டுத்தானாக வேண்டும். கடந்த காலங்களில் இயங்கிய அரசுகள் சிங்கள தேசியத்தை முன்னிலைப்படுத்தி ஏனைய சிறுபான்மை இனங்களை இரண்டாம் பட்ச நிலைக்குத் தள்ளிவிட்டன. அவர்களது மொழிக்குக்கூட உரிய அந்தஸ்து அளிக்காததுடன் கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றிலும் சமவாய்ப்பு வழங்கப்படவில்லை. தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் தேசத்தின் நலன் பாதிக்கப்பட்டதற்கு தென்பகுதி அரசியல்வாதிகளின் முழுமையான பங்களிப்பே காரணமாகின்றது.

> வெறுமனே விலைவாசிகளைக் குறைப்பதாலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதாலும் அரசு கருதும் தேசத்தின் நலன் எட்டிவிடும் என்பதற்கில்லை. உண்மையான தேசநலன் என்பது நாட்டின் முக்கிய பிரச்சினைகளுக்கு உகந்த தீர்வுகளைக் காண்பதில் காட்டப்படும் அக்கறையும் அதற்கான செயற்பாடுகளும்தான் என்பதைக் குறிப்பிட்டுத்தானாக வேண்டும்.

தமக்கு எதிராக இடம்பெற்ற சம்பவங்களால் சலிப்படைந்த தமிழ் மக்கள் தமக்கு விடுதல்ல கேட்டு அகிம்சைப் போராட்டம் முதல் ஆயுதப்போராட்டம் வரை நடத்தினர். மஹிந்த அரசு ஆயுதப் போராட்டத்தை அடக்கி அதற்குக் காரணமான விடுதலைப்புலிகளை அழித்துவிட்டதாகப் பிதற்றிக் கொண்டு பெரும்பான்மையின மக்களிடம் இனவாதத்தைத் தோற்றுவித்து தொடர்ந்து இடம்பெற்ற தேர்தல்களில் தொடர்ந்தும் வெற்றியைப் பெற்று வந்தது. இந்த நிலையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை மக்களின் உதவியுடன் ஆட்சியைப் பிடித்த மைத்திரி பால சிறிசேன நல்லாட்சி ஒன்றை அமைக்கும் உறுதியுடன் ஜனாதிபதியானார்.

அவர் பதவியேற்றதும் முதற்படியாக வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கும் சம்பள அதிகரிப்புக்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தார். தமிழ்ப்பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பாதுகாப்பு பாஸ் நடைமுறைகளை ரத்துச் செய்வதாகவும் அவர் அறிவித்தார். மேலும் தமிழர்களின் காணிகளை அவர்களிடம் கையளிப்பது, சிறைக்கைதிகளைவிடுவிப்பது தொடர்பாகவும் கூறப்பட்டது. இது, தமிழ் மக்களின் பிரச்சினைகளில் அரசு ஆர்வம் காட்டுவதை உணர்த்தியது. ஜனாதிபதி மீது நம்பிக்கையும் ஏற்பட்டது. கடந்த காலங்களில் தமிழர்களைப் பாதுகாப்பதற்குச் சர்வதேசம் தவறியுள்ளது. இந்தியா மீது தமிழர்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் பொய்த்துவிட்டது. இந்தியா மஹிந்த அரசுக்கு உதவும் வகையில் நடந்து கொண்டு தமிழர்களின் பாதிப்புக்களுக்குக் காரணமாகிவிட்டது. தமிழர்கள் கொல்லப்படும்போது ஐ.நாவும் மௌனம் காத்தது. அன்று இடம்பெற்ற கொடூரமான போர்க்குற்றங்களைப் பார்த்துக்கொண்டு மௌனமாக இருந்தது சர்வதேசம் என்பதாக பிரிட்டனில் இடம்பெற்ற கூட்டத்தில் தமிழர் தொடர்பிலான விவாதம் இடம்பெற்றபோது அதில் உரையாற்றிய உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர். தற்போது இலங்கையில் புதிய அரசு பதவி ஏற்றுள்ளது. அந்த அரசின் அரசியல் நிலைப்பாடுகளில் எந்த மாற்றமும் தென்படவில்லை. தமிழர்கள் வாழும் பகுதிகளில் இராணுவத்தைக் குறைப்பது தொடர்பில் எந்த மாற்றத்தையும் அரசு வெளிப்படுத்தவில்லை. புதிய அரசின் உறுப்பினர்கள் தொடர்பில் நாம் கவலை கொண்டுள்ளோம் எனப் பலரும் கூறியுள்ளனர். தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் அங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழர்களின் முக்கிய அரசியல்கட்சியான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளக்கூடிய அரசையே எதிர்பார்க்கிறார்கள். பிரிவினை தமது கோரிக்கை அல்ல என்பதையும் வலியுறுத்தியுள்ளனர். கடந்த கால அரசியல் நடவடிக்கைகளே தமிழ் மக்கள் பிரிவினை கேட்டுப்போராடக் காரணமாக இருந்தது. தென்னிலங்கை அரசியல்தலைவர்கள்தான் ஒற்றையாட்சி என்று கூறிக்கொண்டு பிரிவினை வாதத்திற்கு அடியெடுத்துக் கொடுத்தவர்கள் என்ற உண்மையைப் புரிந்து கொள்வதுடன் இலங்கையை இனவாதத்துக்குள் நுழைத்துவிட்டவர்களும் அவர்களே என்பதையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கான சுயாட்சிக்கோரிக்கையையே தொடர்ந்தும் வலியுறுத்தியிருக்கிறார்கள். எனவே அவர்களது அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் என்ற பாகுபாடின்றி அனைத்து மக்களினதும் பணத்தைச் சுருட்டித் தாங்களும் தங்கள் குடும்பமும் என்றிருந்த முன்னாள் ஆட்சியாளர்கள் இனவாதத் தைத் தொடர்ந்து சிங்கள மக்கள் மத்தியில் வளர்த்தெடுத்து மீண்டும் அரசைக் கைப்பற்றுவதன் மூலம் நாட்டை அதலபாதாளத்துக்குள் தள்ளிவிட முயற்சித்து வருகின்றனர்.

இதிலிருந்து நாட்டைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களின் உரிமைகளுக்கும் மதிப் பளித்து ஒரு நீதியான தேசத்தை உருவாக்க ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவும் அவருடன் இணைந்த தலைவர்களும் ஒன்று பட்டு வெற்றி காண வேண்டும்.

## நாளை

**மாசி-03**
**ஞாயிற்றுக்கிழமை**
**15.02.2015**

திதி: ஏகாதசி: பி.ப.02.31 வரை
நட்சத்திரம்: மூலம் பி.ப.12.55
சுபநேரம்: 09.33-11.03 வரை
இராகுகாலம்:05.03-06.33 வரை
ஏகாதசி விரதம்

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | | 8 | | | |
| 9 | 4 | | | 7 | | | | 5 |
| 7 | | 5 | | 4 | | | | |
| 3 | 1 | 7 | | | 5 | 6 | | |
| | 9 | 4 | 7 | | 6 | 3 | 5 | |
| | | 6 | 2 | | | 7 | 1 | 9 |
| | | | | 2 | | 5 | | 3 |
| 1 | | | | 8 | | | 7 | 4 |
| | | | 4 | | 3 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 9 | 7 | 5 | 2 | 4 | 3 | 6 |
| 3 | 6 | 2 | 2 | 9 | 8 | 1 | 5 | 7 |
| 4 | 5 | 7 | 6 | 1 | 3 | 8 | 9 | 2 |
| 9 | 1 | 4 | 8 | 7 | 5 | 6 | 2 | 3 |
| 2 | 3 | 6 | 9 | 4 | 1 | 5 | 7 | 8 |
| 8 | 7 | 5 | 2 | 3 | 6 | 9 | 4 | 1 |
| 7 | 9 | 8 | 3 | 6 | 4 | 2 | 1 | 5 |
| 5 | 2 | 3 | 1 | 8 | 9 | 7 | 6 | 4 |
| 6 | 4 | 1 | 5 | 2 | 7 | 3 | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே யும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### இலட்சியம் தனித்துவமானது

ஒவ்வொருமனிதனும் தனக்கென்று ஓர் இலட்சியத்தை வைத்துக்கொள்ளவேண்டும்.அதனை நிறைவேற்றப் பெருமுயற்சி செய்ய வேண்டும். அப்படியில்லாமல் பிறருடைய இலட்சியங்களை எடுத்துக்கொண்டு அதனை நிறைவேற்ற பாடுபட்டு வேதனை அடையக்கூடாது. மற்றவர்களின் இலட்சியத்தை வைத்துக்கொண்டு தனது இலட்சியத்தை மதிப்பிடுவதும், தனது இலட்சியத்தை வைத்துக்கொண்டு மற்றவர்களின் இலட்சியத்தை மதிப்பிடுவதும் ஒருபோதும் சிறந்ததல்ல.

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20 | 80 | 40 | 80 | 20 | 40 | 40 | 35 |
| கத்தரி | 50 | 60 | 60 | 60 | 30 | 40 | 40 | 30 |
| கரட் | 120 | 100 | 140 | 120 | 100 | 180 | 120 | 160 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 40 | 50 | 45 | 30 |
| பயிற்றை | 120 | 100 | 90 | 120 | 120 | 120 | 90 | 140 |
| பாகல் | 80 | 80 | 100 | 120 | 120 | 150 | 120 | 150 |
| கருணைக்கிழங்கு | 60 | 60 | 50 | 60 | 40 | 80 | 120 | 40 |
| பெ.வெங்காயம் | 100 | 80 | 100 | 90 | 80 | 120 | 90 | 70 |
| சி.வெங்காயம் | 50 | 100 | 80 | 100 | 120 | 160 | 90 | 100 |
| பூசணி | 80 | 80 | 100 | 90 | 100 | 120 | 90 | 80 |
| தக்காளி | 200 | 170 | 180 | 200 | 200 | 200 | 240 | 200 |
| வாழைக்காய் | 80 | 70 | 70 | 90 | 70 | 120 | 80 | 80 |
| கீரை | 15 | 20 | 30 | 10 | 20 | 20 | 30 | 25 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 40 | 30 | 20 | 20 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 150 | 130 | 140 | 120 | 160 | 200 | 220 | 170 |
| புடோல் | 120 | 70 | 60 | 50 | 70 | 120 | 90 | 90 |
| கோவா | 100 | 80 | 70 | 100 | 80 | 120 | 80 | 90 |
| வெண்டி | 100 | 80 | 60 | 60 | 70 | 80 | 90 | 100 |
| போஞ்சி | 200 | 140 | 120 | 180 | 120 | 140 | 65 | 170 |
| லீக்ஸ் | 150 | 180 | 160 | 180 | 160 | 120 | 140 | 160 |
| தேங்காய் | 50 | 50 | 60 | 60 | 40 | 50 | 35 | 40 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 60 | 60 | 60 | 70 | 65 | 50 |
| தேசிக்காய் | 30 | 40 | 60 | 40 | 40 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 10 | 30 | 10 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 150 | 140 | 140 | 180 | 140 | 220 | 200 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 100 | 80 | 100 | 120 | 70 |
| பனங்கிழங்கு | 05 | 03 | 05 | 02 | 03 | 05 | 03 | 03 |


# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | பருத்தித் துறை | மாதகல் |
|---|---|---|---|---|
| இறால் | 650 | 600 | 600 | 450 |
| நண்டு | 250 | 450 | 250 | 300 |
| கணவாய் | 450 | 550 | 450 | -- |
| பாரை | 500 | 450 | 450 | 360 |
| சுறா | 450 | 500 | 500 | - |
| சீலா | 300 | 400 | 400 | 350 |
| விளை | 450 | 450 | 350 | 350 |
| ஒட்டி (முரல்) | 250 | 350 | 300 | - |
| கும்பிளா | 400 | 350 | 400 | 300 |
| கிழாக்கன் | 250 | 500 | 350 | - |
| ஒரா | 300 | 350 | 300 | - |
| திரளி | 150 | 250 | 200 | - |
| நகரை | 150 | 250 | 250 | 300 |
| ஆடை | 100 | 150 | 80 | 50 |
| ஒட்டி | 150 | 150 | 150 | 200 |
| திருக்கை | 100 | 350 | 200 | 130 |
| பாலை | 300 | 400 | 400 | - |
| வாழை | 100 | 150 | 250 | - |
| கொய் | 100 | 150 | 80 | - |
| மதனம் | 100 | 200 | 250 | 250 |




## புகைத்தலின் விளைவு

மூளையை ஆரோக்கியப்படுத்தும் செல்லை கொல்கிறது புகை ! மதுபானம் மூளை நரம்பு மண்டலத்தை நேரடியாக பாதிக்காது ஆனால் புகைத்தல் பாதிக்கும் என ஆய்வு தெரிவிக்கிறது. மூளையில் உள்ள தீமை பயக்கும் செல்களை



அழிக்கவல்ல மிக்ரோக்ளியா என்ற செல்களை புகைத்தல் அழிப்பதால் மூளையின் செல்களுக்குரிய எதிர்ப்புச்சக்தி அழிக்கப்படுகிறது. அத்தோடு புகைத்து ஊதும் புகை வழிமண்டலத்தில் கலந்து புகைக்காதவரின் மூளைச் செல்களையும் அழிக்கும் என்றும் தெரிவித்துள்ளனர். சுவாசத்திற்கு மட்டுமல்ல மூளைக்கே ஆபத்தானது.



## கண்களை நன்றாகப் பாதுகாக்க...

இன்றைய காலக்கட்டத்தில் கணினியின் அவசியம் மிகவும் இன்றியமையாதது. இன்று சகல துறைகளிலும் கணினி புகுந்து விட்டது. அதனால் இன்று வேலை செய்பவர்கள் காலை முதல் மாலை வரை கணினி முன் உட் கார் வது தவிர்க்க முடியாதது. அதனால் உடம்பில் மற்ற உறுப்புகளை விட நமது கண்கள் தான் அதிகமாக வேலை செய்கின்றன. ஆனால் நாம் எமது கண்களைப் பாதுகாக்க முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இதனால் நாம் தெரிந்தே கண்களைக் கெடுத்துக் கொள்கிறோம். ஆனால் எமது வேலை செய்யும் நேரத்தில் சிறிது நேரத்தை பயன்படுத்தி சின்ன சின்ன கண்பயிற்சிகள் செய்வதன் மூலம் நாம் கண்களை சிறப்பாகப் பாதுகாக்க முடியும். முதலில் 20 நிமிடங்களுக்கு ஒரு முறை உங்கள் கவனத்தை கணினியிருந்து திசை திருப்பி 20 அடி தொலைவிலுள்ள பொருளை உற்றுப் பார்க்கவேண்டும். இதனால் அசதியான உங்கள் கண்கள் புத்துணர்ச்சி பெறுகின்றன. அதேபோல் 20 முறை கண்களைத் தொடர்ச்சியாக சிமிட்ட வேண்டும். இதனால் உங்கள் கண்களின் ஈரபசப்பு தன்மை குறையாமல் இருக்கும். மேலும் கணினியால் ஏற்படும் கண்ணெரிச்சல் குறையும். 20 நிமிடங்களுக்கு ஒருமுறை ஒரே இடத்தில் உட்காராமல் எழுந்து சிறிது தூரம் நடக்கவேண்டும். இதனால் உங்கள் உடம்புக்குச் சீரான இரத்த ஓட்டம் ஏற்படும். இவ்வகை பயிற்சி எளிதாக இருந்தாலும் பழக்கத்துக்கு கொண்டு வருவது சிரமம்தான் ஆனால் முயற்சி செய்தால் நன்மை எமக்குதான்.

# நட்சத்திரங்களின் பொதுப் பலன்கள்



## சதயம்



நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவராதலால், தர்மசிந்தை உடைய வராகவும், செல்வவளமும், தாராள மனமும், சுயேச்சையான கருத்தும், புத்திசாலித்தனமும், அறிவாற்றலும் நிறைந்தவராகவும் விளங்குவீர்கள். உங்கள் பகைவர்களை ஒடுக்கி வெற்றி காண்பீர்கள். உங்களைப் பலரும், மதித்து மரியாதை காட்டுவார்கள். உங்களுக்கு நல்ல அந்தஸ்தும் அதிகாரமும் இருக்கும். நீங்கள் எதையும் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகச் சொல்லக் கூடியவர். உண்மை பேசுபவர். நீங்கள் கஷ்டங்களை அனுபவிப்பீர்கள்.

## பூரட்டாதி



நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவராதலால், பணம் சம்பாதிப்பதில் வெற்றி காண்பீர்கள். அதிகமாகப் பேசக்கூடிய நீங்கள், நன்கு படித்தவர் தேர்ச்சிபெற்றவர். நண்பர்களுடன் உங்களுக்கு நல்ல உறவுகள் இருந்து வரும். நீங்கள் தெளிவாகப் பேசுவீர்கள். உங்கள் வாழ்க்கைத் துணை, பெரும்பாலும் ஒரு பணக்காரக் குடும்பத்திலிருந்து வந்தவராக இருப்பார். நீங்கள், மிக எளிதில், எதிர்பாலாரால் ஈர்க்கப்படுவீர்கள். குழந்தைகள் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தருவார்கள். உங்களுக்கு நல்ல உடல்கட்டு இருக்கும்.

## உத்தரட்டாதி



நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவராதலால், ஒரு சிறந்த மேடைப் பேச்சாளராகவும், மகிழ்ச்சி நிறைந்தவராகவும், நற்குணமும், எதிரிகளை ஒடுக்கி வெற்றி கொள்ளும் திறன் மிக்கவராகவும் விளங்குவீர்கள். தாராள சிந்தையுடைய வராகவும் செல்வவளமும், அறிவாற்றலும் நிறைந்தவராகவும் இருப்பீர்கள். உங்களுக்கு கவர்ச்சிகரமான, வசீகர உடற்கட்டு இருக்கும்.

## ரேவதி



நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவராதலால் நல்ல சுபாவம் உடையவராகவும் பணக்காரராகவும், தன்னம்பிக்கையும், அறிவாற்றலும் படைத்தவராகவும், நியாயமான வழிகளில் பணம் சம்பாதிப்பவராகவும் விளங்குவீர்கள். வயதில் பெரியவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பணிந்து நடப்பதுடன், மரியாதையும் அளிப்பீர்கள்.

# ராசிகளும் நோய்களும்

நோய்கள் பொதுவாக சூழல், மரபணு, பழக்கவழக்கங்கள் ஆகியவை காரணமாக ஏற்படுகின்றன. எனினும் ஒவ்வொரு ராசிக்கும் பிரத்தியேகமான நோய்க்குறிகள் உண்டு என்கிறார் வாஸ்து நிபுணர் ரவி ஓஜஸ். அவர் மேஷம் முதல் மீனம் வரை உள்ள ராசிகளின் பிரத்தியேகமான நோய்களாக சிலவற்றை அடையாளப்படுத்துகிறார்.



### மேடம்:

தலைவலி, நரம்பு மண்டலம் சம்பந்தமான நோய், ஆழ்நிலை மயக்கம், நினைவிழந்த நிலை, மூளை நோய், மூளையில் இரத்தப்போக்கு, தூக்கமின்மை, வீக்கமுண்டாகும் நோய்கள், தலை முகம் பாதிக்கும் வலி, முகப்பரு, மூக்கில் வளரும் நீர்ச்சதை, ஒருபக்கத் தலைவலி, தலைச்சுற்றல், கிறுகிறுப்பு, மூளைக் காய்ச்சல், வட்டமான இள வழுக்கை போன்றவை.



### இடபம்:

வறண்ட தொண்டை, கழுத்துச் சுரப்பிகளின் வீக்கம், ரொன்சில் வீக்கத்தால் சீழ் கட்டிப் போதல், மூச்சுக்குழாய் அடைப்பு, தைரொய்ட் சுரப்பிகளில் குறைபாடு, தொண்டை அடைப்பான் நோய், புலன்களின் தசைகளைத் தாக்கும் நோய், தலையில் உண்டாகும் தசை முண்டு, காற்றுக்குழாயில் சீழ் பிடித்தல், கண்டமாலை (கழுத்தில் ஏற்படும் வீக்கம்), நெஞ்சு வலி போன்றவை.



### மிதுனம்:

ஆஸ்துமா, சளியினால் காய்ச்சல், சுவாசக்குழாய் நோய், இருதய உறை, நுரையீரல் மேலுறையில் உப்புச்சத்துகள் மிகுந்து நீர் தங்கிப் போதல், நுரையீரல் நோய்கள், சளித் தொந்தரவு, வறண்ட இருமல், இருதயத்தை சூழ்ந்துள்ள தோலுறை வீக்கம், காசநோய், கைகளில் பாதிப்பு, சுவாச முறையில் பலவித கோளாறுகள், இரத்தம் கெட்டுப் போதல் போன்றவை.



### கடகம்:

வயிற்றுப்புற்றுநோய் மற்றும் வயிற்று வலி, வாய்வுக் கோளாறு, நீர்கோத்துக் கொள்ளல், அஜீரணம், தீவிர இருமல், நோய் இருப்பதாகவே கலக்கமுற்று இருக்கும் மனோ வியாதி, மஞ்சள் காமாலை, இரத்தச் சோகைக்கு முன் ஏற்படும் மஞ்சள் கலந்த பச்சை நிறத் தோற்றம், பித்தப்பை கல், நீரிழிவு நோய் போன்றவை.



### சிம்மம்:

இருதய நோய், இருதய படபடப்பு, மூட்டு நோயால் காய்ச்சல், தண்டுவடம் பாதிக்கும் கொடிய நோய், வெய்யில் தாக்கம், தளர்ச்சி, இரத்த ஓட்டத்தில் இரத்த வால்வுகளின் குறையால் சீரற்ற கன்னம், தள்ளாட்டம், உயர் இரத்த அழுத்தம், ஆனால் தற்காலிக நெஞ்சு வலி, தமனி வீக்கம், நெஞ் சடைப்பால் ஏற்படும் திடீர் மயக்கம், அடிக்கடி மயக்கம் ஏற்படல், கூன் முதுகு, பிளேக் போன்ற கொள்ளை நோய், இரத்தச் சோகை, இரத்தக் குழாய் சுவர் தடித்துப் போதல் போன்றவை.



### கன்னி:

இடுப்பு சம்பந்தமான இடையூறுகள், சில்லிட்ட உடல் நிலை, வயிற்றில் நாடாப்பூச்சி, பண்டப்பூச்சி, கொக்கிப் பூச்சி, வயிற்றுப் போக்கு, கொலரா நோய், அடிவயிற்று வீக்கம், மலச்சிக்கல், கெடுதியான உணவுப்பழக்கம், விற்றமின் பி குறைவு, உணவு செரிமான அமிலத்தை ஏற்காமை, குடல் சம்பந்தமான கோளாறுகள்.

# பாதுகாப்பான இளமைப்பருவம்



இன்றைய பாடசாலைகளில் மிகப்பெரும் சவாலாக இருப்பது, கல்வியைவிட, இத்தகைய பாலினக் கவர்ச்சியும், அதைத் தொடர்ந்த காதலும் காமமும்தான்.

பல சமூக கட்டுப்பாடுகளுடன் தனித்துவமான பண்பாடு, கலாசாரத்துடன் வாழ்ந்து வந்த தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இளம்பருவப் பெண்களையும் விட்டு வைக்கவில்லை. பெண் பிள்ளைகளின் பெற்றோருக்கு பாலியல் தொடர்பான அறிவு போதியளவு இல்லாமையும் மற்றும் பெண் பிள்ளையின் தாயார் மனம் விட்டு பெண் பிள்ளைகளுடன் பேசாமை போன்ற காரணங்களால் தனக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை, மாற்றங்களைப் பகிர்ந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிட்டுவதில்லை. இதனாலேயே உலகத்தைப் புரிந்து கொள்ளாத 20 வயதுக்கு உட்பட்ட பெண்கள் பாலியல் ரீதியாக அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இன்றைய இளம் தலைமுறை சிறிய வயதிலேயே கணினி மற்றும் சமூக வலைத்தளங்களில் மிகவும் ஈடுபாடு உடையவர்களாக இருப்பதாலும், இளம் வயதிலேயே பாலியல் தூண்டுதலுக்கு உள்ளாகிறார்கள். இன்றைய பாடசாலைகளில் மிகப்பெரும் சவாலாக இருப்பது, கல்வியைவிட, இத்தகைய பாலினக் கவர்ச்சியும், அதைத் தொடர்ந்த காதலும் காமமும்தான். அதனால் இளைஞர்களும், யுவதிகளும் தூண்டப்பெற்று பலாபலன்களையும், பாதுகாப்பான முறையையும் அறியாது இரகசிய உடலுறவு கொள்வதன் மூலம் இளவயது கர்ப்பம் அதிகரிக்க காரணமாகின்றது. அத்துடன், பாடசாலைப் பருவத்தில் தோன்றும் நன்மை தீமை அறியாத பருவக் காதலை உண்மைக் காதல் எனத் தவறாகப் புரிந்து கொண்டு செயற்படுவதாலும் போதைப் பொருள் முதலியவற்றுக்கு அடிமையாகி அவற்றின் போதையால் தவறாக நடப்பதனாலும் இளவயது கர்ப்பம் அதிகரிக்கக் காரணமாகின்றன. தாய் வேலைக்காக வெளியே செல்ல வயதுக்கு வந்த பிள்ளைகள் தனியாக இருக்கும் சூழ்நிலையும் இளவயது கர்ப்பம் அதிகரிப்பதற்கு காரணமாகி பலரையும் சிந்திக்க வைத்துள்ளது. அவை மட்டுமன்றி இளம் பெண்கள் தனியாக இருக்கும்போது பாலியல் அத்துமீறல்கள் மூலமும் இளம்பெண்கள் கர்ப்பமாகும் சந்தர்ப்பங்களும் அதிகமாக காணப்படுவதும் ஒரு காரணமாக அமைகின்றது. இவை தவிர ஒரு சிலர் வறுமை காரணமாகவும்; உற்றார், உறவுகளற்ற நிலையில் தனிமையாக வாழ்வதும்; சந்தர்ப்ப சூழ்நிலையால் காதல் என ஏமாறுதலும், உதவி செய்வோருக்கு உபகாரமாக தமது உடலை வழங்கி தாமும் கர்ப்பமாகி வாழ்வை இழப்பதோடு தமது குடும்பத்துக்கும் கெட்ட பெயரை வாங்கி விடுகின்றார்கள்.




# கணவரை எரிச்சல் அடைய வைக்கும் மனைவியின் சில செயல்கள்...



மனைவி செய்யும் சில செயல்கள் கணவருக்குப் பிடிப்பதில்லை. இந்த செயல்களால் தான் இருவருக்கும் பிரச்சினை ஏற்படுவதும், அதன் காரணமாக கருத்து வேறுபாடுகள் ஏற்படவும் தொடங்குகிறது. பெண்களின் பல செயல்கள் ஆண்களுக்கு பிடிக்காமல் இருந்தாலும் அதிக எரிச்சலைத் த...க்கூடியவை. சின்ன விடயத்திற்கெல்லாம் கணவனைத் துணைக்கு அழைப்பது, ...தோ சொல்ல வந்து பின் 'அதை விடுங்க' என பொடி வைத்துப் பேசுவது. மூடி ...றைத்து கணவனை உஷ்ணப்படுத்துவது. 'அன்பு' என்ற பெயரில் ஆயிரம் 'போன்கோல்' பண்ணி நச்சரிப்பது, எதற்கெடுத்தாலும் அழுது வடிப்பது போன்றவை கணவர்மாரை எரிச்சல் அடைய வைக்கின்றன. அழும் பெண்களை ஆண்களுக்கு பிடிக்காது. ஆனால் பெண்கள் தமது காரியத்தைச் சாதித்துக் கொள்ள அழுது நடிப்பார்கள், 'இவங்க தப்பா நினைப்பாங்க அவங்க தப்பா நினைப்பாங்க' என்று தனக்காக வாழாமல் சமூகத்துக்கு பயந்து பயந்து வாழ்வது, சாப்பிடும் நேரம் பார்த்து குடும்பப் பிரச்சினைகளை கிளறுவது. தமக்காக இரவில் சாப்பிடாமல் காத்துக் கொண்டிருப்பது, வீட்டை அலங்கோல மாக போட்டு வைப்பது, நண்பர்களைப் பற்றித் தவறாக பேசுவது, வேலைக்குப் போகும் பெண்ணாக இருந்தால் நியாயம் பேசுவது எதற்கெடுத்தாலும் கணக்குக் கேட்பது போன்ற விடயங்கள் கணவர்மாரை எரிச்சலடையச் செய்யும்.

# மூன்று மீன்கள் மூன்று குணங்கள்



அந்தக் கிராமத்தின் பெயர் குளத்துப்பட்டி. ஊரின் பெயருக் கேற்ப அழகான குளம் ஒன்று அந்த ஊரில் இருந்தது. அந்தக் குளத்தில் மூன்று மீன்கள் வசித்து வந்தன. மூன்றும் நண்பர்களாக இருந்தன. நண்பர்களாக இருந்தாலும், மூன்று மீன்களும் வெவ்வேறு குணங்களைக் கொண்டிருந்தன. ஒருநாள்– குளக்கரையோரமாய் இரண்டு மீனவர்கள் வந்தார்கள். 'இந்தக் குளத்தில் ரொம்ப நாளா மூன்று பெரிய மீன்கள் இருக்கின்றன. அந்த மீன்களைப் பிடிக்கணும்...' என்றான் ஒரு மீனவன். இதைக் கரையோரமாய் நின்ற முதல் மீன் கேட்டுவிட்டது. உடனே, இரு நண்பர்களையும் அழைத்து 'காலையில் நம்மைப் பிடித்து விடுவார்கள். வாருங்கள்...அருகே உள்ள வாய்க்கால் வழியாக இப்போதே வேறு இடத்திற்குச் சென்றுவிடலாம்...' என்றது. 'நாளைக்குக் காலையில யாராவது வந்தால் பார்க்கலாம்.பேசாமல் வேலையைப் பாரு...' என்றது இரண்டாவது மீன். 'யாரோ சும்மா சொல்லிட்டு போயிருக்கிறார்கள் அதற்குப் பயந்து குளத்தை விட்டுப் போறதா...நான் வரலே..!' என்றது மூன்றாவது மீன். வேறு வழியின்றி, முதல் மீன் மட்டும் வாய்க்கால் வழியாக வேறு இடத்திற்குச் சென்றுவிட்டது. மறுநாள் விடியற் காலையிலேயே மீனவர்கள் சொன்னதுபோல் வந்தார்கள். குளத்தில் வலையை வீசினார்கள். திடீரென்று வலையை வீசியதில், தூங்கிக் கொண்டிருந்த இரு மீன்களும் வலையில் சிக்கிக் கொண்டன. இரண்டாவது மீன் வயிறு முட்ட தண்ணீரைக் குடித்தது. வயிறு பெரிதாகி விட்டது. அப்படியே செத்த மீனைப்போல கிடந்தது. மூன்றாவது மீனோ எந்தக் கவலையுமின்றி வலையில் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது. வலையைக் கரைக்கு இழுத்துவந்த மீனவர்கள் வலையிலிருந்த மற்ற இரு மீன்களையும் வெளியே எடுத்தனர். 'இந்த மீனைப் பார். வயிறு பெருசாயிருக்கு. இதைச் சாப்பிட்டால் நமக்கும் நோய் வரும்!'என்றபடி இரண்டாவது மீனைத் தூக்கிக் குளத்தில் வீசினான் ஒருவன். குளத்திற்குள் பாய்ந்து சென்று ஒளிந்து கொண்டது இரண்டாவது மீன்.

'அய்யய்யோ...நான் மட்டும்தான் மாட்டிக்கிட்டேனா' என்று மூன்றாவது மீன் புலம்பியது. மற்றவர்கள் சொல் கேட்காமல் தனக்கு நடந்ததை எண்ணிக் கவலைப்பட்டது

# ஆழிப் பேரலை



ஆழியின் பேரலை வந்தது
எங்கள் அன்பு உயிர்களைக் கொன்றது
வேலியே பயிரை மேய்ந்தது
இந்த விதியை யாரிடம் சொல்வது
உறவினைப் பிரிந்து நாம் வாடுகிறோம்
வெறும் தரையினில் வாழ்கிறோம்
உருகும் மெழுகுச் சுடரில் தெரியும்
என் உறவை தினம் தினம் தேடுகின்றோம்
அலையின் திசையில் போகும் உயிர்கள்
கதறி அழுகின்ற கண்ணீர் நதிகள்
இயற்கையே இரங்கிடு இனியும் வேண்டாம்
தணிந்திடு கருணையுடன் எம்மைக் காத்திடும்
கடலே வழியதை நன்றாய் மாற்றிடும் இறைவா!
கதியற்று நாமும் கதறும் வேளை
நிலைபெற்ற வாழ்வை நீ தர வேண்டும்

*செல்வி உதயகுமார் டிலானி,*
*தரம் -10 கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலை.*

## அறிந்து கொள்வோம்

**சத்தில்லாத உணவு** - நீர்
**கலப்படம் செய்யமுடியாத உணவுப்பொருள்** - கோழிமுட்டை
**பசுமைப்புரட்சி ஏற்பட்ட வருடம் - 1960 தாயகம்** - மெச்சிக்கோ
**அமெரிக்க பசுமைப் புரட்சியின் பிறப்பிடம்** - பொஸ்டன்
**உலகில் மிகப் பிரபலமான பொழுதுபோக்கு** - தபால் தலை சேகரிப்பு
**சுத்தமான தங்கத்தின் கரட்** - 24கரட்
**கடல் நீர் நீலமாக இருக்கும் அளவு** - 10 அடி
**கால்ஷீட் என்பது** - எட்டு மணி நேரத்திற்கு நடிப்பதற்கான ஒப்பந்தம்
**விமானத்தில் செல்பவர்களுக்கு வானவில் தெரியும் வடிவம்** - வட்டம்

# வர்ணம் தீட்டலாம் வாங்க...



# வெற்றிக்கு தேவையானவை





1.மற்றவர்களிடம் இருப்பதெல்லாம், உங்களிடமும் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை! மற்றவர்களிடம் இருப்பதையே பார்த்துக் கொண்டிருந்தால், உங்களிடமிருப்பதைப் பார்க்கத் தவறிவிடு வீர்கள்! திருப்தி என்பது வெளியில் இல்லை! உங்களுக்குள் தான்! வாழ்வின் இறுதியில் தான், பொறாமையினால், எவ்வளவு தினங்களை வீணடித்திருக்கிறோம் என உணர வேண்டும் என்பதில்லை. இப்போதே கண்டு கொள்வோம். இறுதியில் கொண்டு போவது எதுவுமில்லை! எனவே 'பொறாமை' என்பதை அறவே நீக்குவோம்! முயற்சி என்பது வேறு– பொறாமை வேறு!

2. கடந்த காலத்தில் செய்திருக்க வேண்டிய செயல்கள் குறித்து, இன்று புகார் ஏதும் கூற வேண்டாம். இப்போது விசனப்பட்டு ஆகப்போவது ஒன்றுமில்லை! அது மாத்திரமல்ல, எந்த நிகழ்வும், நடக்கும்போதே அதன் பின் விளைவுகள் குறித்து, பூரணமாக அறிந்து கொள்ளும் அளவுக்கு உலகில் எவரும் இல்லை! நேற்று இருப்பதைக் காட்டிலும் இன்று நன்றாக இருக்கிறீர்கள் தானே! அதுகுறித்து புன்னகை செய்யுங்கள்! நேற்றைக்காக இன்று வருந்துவதை விட இன்றைக்காக வாழ்வது புத்திசாலித்தனம்.

3. எவரையும் வெறுக்காதீர்கள்! இதனால் காயமடைவது நீங்கள்தான்! அவர்கள் அல்ல! 'மன்னிப்பு' என்பதன் பொருள் 'நீ எனக்கு தீங்கிழைத்து விட்டாய், அதைப் பொறுத்துக் கொண்டுவிட்டேன் என்பது அல்ல' மாறாக, 'நீ எனக்கு தீங்கிழைத்தது, நான் கஷ்டப்பட வேண்டும் என்பது தான்; ஆனால் உனது செய்கை என்னைத் துன்பப்பட அனுமதிக்கமாட்டேன்' என்பது தான். பிறர் உங்களுக்கிழைத்த தீங்கினின்றும் வெளியே வாருங்கள்! அமைதி கொள்ளுங்கள். மேலும் மன்னிப்பு என்பது பிறருக்கு அளிப்பது மாத்திரமல்ல! உங்களுக்கும் வழங்கிக் கொள்ளுங்கள்! 'அடுத்தமுறை இந்த மாதிரி அசட்டுத்தனமான, தவறான காரியங்களைச் செய்யாதே' என உங்களையும் மன்னித்துக் கொள்ளுங்கள்.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கையில் இருக்கின்ற வெளிநாட்டுத் தூதர்கள் மற்றும் உயர் ஸ்தானிகர்கள் ஆகியோரை நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பீ.பெரேரா, ஜனாதிபதியின் செயலாளர், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ற)

# ஐ.நா அறிக்கையை ஒத்திவைக்க முடியும்

## மங்கள சமரவீர நம்பிக்கை



கொழும்பு, பெப். 14

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக அறிக்கை மார்ச் மாதம் வெளியாவதை ஒத்திவைக்க முடியும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

'குறிப்பிட்ட அறிக்கையை எப்போது வெளியிடுவது என்ற முடிவை எடுப்பது ஐக்கிய நாடுகள் மனிதஉரிமை ஆணையாளர் மற்றும் மனித உரிமை சபையின் தலைவரே என்றாலும், மார்ச் மாத அமர்வில் அறிக்கை வெளியாகாது' என்பது குறித்து நம்பிக்கை கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோன் கெர்ரியைச் சந்தித்த பின்னர்வொஸிங்டனில் செய்தியாளர்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்,

அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் உதவியை இந்த விவகாரத்தில் எதிர்பார்கின்றீர்களா என்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு, அனைத்து நண்பர்களினதும் ஆதரவை எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளருடனான பேச்சுக்கு முன்னர் அவருடன் இணைந்து கருத்து தெரிவித்த மங்கள சமரவீர, கடந்த சில வருடங்களாக முன்னைய ஆட்சியின் கீழ் பாதிக்கப்பட்ட அமெரிக்காவுடனான உறவுகளை சீர் செய்ய இலங்கை விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைகையைப் பொறுத்தவரை அமெ ரிக்கா ஒரு அச்சுறுத்தல் அல்ல. மாறாக மிகச் சிறந்த ஒரு சந்தர்ப்பம் எனக் குறிப்பிட்ட அவர், இரு நாடுகளுக்கும் இடையிலான இணைப்பு இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடத்தைக் கருத்தில் கொள்வதாக அமைய வேண்டும் என வும் குறிப்பிட்டுள்ளார். (த-5)


## தூய நீரிற்கான பாதிக்கப்பட்ட மக்கள் ஒன்றியம்

## Affected People Union for Pure Water

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் பிரதேசத்தில் நிலத்தடிநீர் மாசுபாட்டினால் பாதிக்கப்பட்டுவரும் மக்களால், பாதிக்கப்பட்டுவரும் மக்களை ஒன்றிணைத்துப், பாதிக்கப்பட்டுவரும் மக்களுக்கான தீர்வினை நோக்கி செயற்படும் நோக்கில் உதயமாக்கப்படவுள்ள ஓர் அரசியல் மற்றும் தன்னல அபிலாசைகள் கடந்த மக்கள் ஒன்றியம்.

இந்த மக்களுக்கான இணைவை உதயமாக்கப் பாதிக்கப்பட்ட மக்கள் ஒவ்வொருவரையும் எதிர்வரும் **15.02. 2015** ஆம் திகதி காலை 9.00 மணிக்கு சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலயமுன்றலில் ஒன்று கூடுமாறு பணிவுடன் அழைக்கின்றோம்.

- இதுவரைகாலமும் மக்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக தெளிவுபடுத்தல்.
- புதிய மக்கள் ஒன்றியத்தினை அங்குரார்ப்பணம் செய்தல்.
- எதிர்காலத்தில் ஒன்றியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடல்.
- பாதிக்கப்பட்ட மக்களுள் துறைசார் வல்லுனர்களை ஒன்றிணைத்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறையினை உருவாக்குதல்.

**பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக,**
**சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையம்,**
**சுன்னாகம்**

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### காணி விற்பனைக்கு

நல்லூர் முருகன் கோயிலுக்கு அருகில், யாழ். கல்வி வலயத்துக்கு அருகாக செல்லர் வீதி, செம்மணி றோட்டில் அமைதியான சூழலில், அமைந்துள்ள நிலப்பரப்பு 1¾ ஒன்றே முக்கால் பரப்பு வருமானத்துடன் கூடிய வெறும் காணி உடன் விற்பனைக்கு.

தொடர்பு:- 0777 432645

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி, கல்வியங்காடு ஆகிய பிரதேசத்தில் சகலவசதியுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

(56663) (12.3.7) தொடர்பு: 077 756 3781

### விற்பனைக்கு

நெற்கபே மேசை கதிரைகள், அலுவலக மேசைகள் கொம்பியூட்டர்கள், TV கள், அலுமினியப் பிற்றிங், டீசல் ஜெனரேற்றர், வக்கியும் கிளீனர், Samsung புதிய போன்கள், மலிவு விற்பனை

தொடர்புகளுக்கு .075 529 5746 (56818)(3.7.8)

### விற்பனைக்கு

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ''நீலியைச் சுட்டபுலம்'' என்னும் பெயர் கொண்ட ஆடிய பாதம் வீதியில் திருநெல்வேலிச் சந்திக்கும் இராமசாமி பரியாரியார் மருத்துவ மனைக்கும் மத்தியில் 3¼ பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு .

தொடர்பு:- 0770683810

### கடை வாடகைக்கு

இராமலிங்கம் வீதி, திருநெல்வேலியில் கடை வாடகைக்கு உண்டு

தொடர்புகளுக்கு .072 759 6949 (56819)(3.7.8)

### விற்பனைக்கு

டீ பிறிசர், A/C, அலுமியம் பிற் றிங், எலற்றிக் ஆட்டுக்கல் 4ℓ, சைக்கில் வோல்ஸ் குறோஸ் 20/= கணினி, றைஸ்குக்கர் போடக்கூடிய A/C வயர் 25/= என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 077 3787291, 021 221 3200

### விற்பனைக்குண்டு

ஒரு மாத ஊர்க்கோழிக்குஞ்சுகள், இறைச்சிக் கோழி, முட்டைகள், புறொயிலர் குஞ்சுகள் என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

KayFarm(pvt)Ltd
078 880 3483, 021 320 4233, 077 160 4059 (சி/19730) (4.3.7)


### மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், வடமாகாணம்

### பெறுகைகளுக்கான அழைப்பு

### யாழ்ப்பாண மாவட்ட வைத்தியசாலைகளுக்கான உலர் உணவு விநியோகம்- 2015/16

1. வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமைவாய்ந்த உலர் உணவு விநியோகஸ்தர்களிடமிருந்து பின்வரும் வைத்தியசாலைகளிற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொடர் இல | பெறுகை இல. | வைத்தியசாலைகள் | உத்திரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|
| 1. | D/JF/2015/01 | ஆதார வைத்தியசாலை. தெல்லிப்பளை | 60,000 |
| 2. | D/JF/2015/02 | ஆதார வைத்தியசாலை. பருத்தித்துறை | 50,000 |
| 3. | D/JF/2015/03 | பிரதேச வைத்தியசாலை. வல்வெட்டித்துறை | 40,000 |
| 4. | D/JF/2015/04 | ஆதார வைத்தியசாலை. சாவகச்சேரி | 30,000 |
| 5. | D/JF/2015/05 | பிரதேச வைத்தியசாலை. சங்கானை | 10,000 |
| 6. | D/JF/2015/06 | ஆதார வைத்தியசாலை. ஊர்காவற்றுறை | 10,000 |
| 7. | D/JF/2015/07 | பிரதேச வைத்தியசாலை. நெடுந்தீவு | 10,000 |
| 8. | D/JF/2015/08 | பிரதேச வைத்தியசாலை. அச்சுவேலி | 10,000 |
| 9. | D/JF/2015/09 | பிரதேச வைத்தியசாலை. கோப்பாய் | 10,000 |

2. விலைக்கேள்விதாரர் உலர் உணவு விநியோகத்திற்கேற்ற வகையிலான வியாபார பதிவினையுடையவராக இருத்தல் வேண்டும்
3. ஆதார வைத்தியசாலைக்கு விண்ணப்பிப்பவருக்கு ஆகக்குறைந்தது ஒரு வருடம் அரசாங்க நிறுவனத்திற்கு இடையூறின்றி உலர் உணவு வழங்கிய பூரண அனுபவமிருத்தல் வேண்டும்.
4. பொருத்தமான உத்தரவாதமுறி ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் தனித்தனியாக பெறுகைகளுடனும் வெவ்வேறாக இணைக்கப்படல் வேண்டும். தனித்தனியாக உத்தரவாதமுறி சமர்ப்பிக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
5. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 1000/= காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் **16.02.2015 தொடக்கம் 05.03.2015** வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை (12.30 தொடக்கம் 13.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
6. விலைக்கேள்விகள் **06.03.2015ஆம்** திகதி 10.00 மணிக்கு முன்பதாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார. சேவைகள் பணிப்பாளர் பணிமனை கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதி நிதிகள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும்.
7. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல. 021-222-6253/ 2278 Ext 20) என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்திய கலாநிதி (திருமதி). S. R. யூட்,**
**தலைவர், மாகாண திணைக்களத்தின் பெறுகைகள் குழு,**
**வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**சுகாதார கிராமம்,**
**பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

# உருவாகவுள்ளது முதலாவது மலையக கிராமம்

கொழும்பு, பெப்.14

மண்சரிவுக்குஉள்ளான மீரியாபெத்த தோட்ட மக்களுக்காக மலையகத்தில் முதல் கிராமம் உருவாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீரியாபெத்த பகுதியில் இதற்கான காணி அடையாளம் காணப்பட்டு, திட்டத்தை அறிவிக்கும் நிகழ்வு அங்கு நடைபெற்றிருந்தது.

இதன்போது பெருந்தோட்ட கைத்தொழில்துறை ராஜாங்க அமைச்சர் க.வேலாயுதம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பி.திகாம்பரம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தனர். (ற)

## மரண அறிவித்தல்



### கதிரவேலு முருகேசு

(ஓய்வுபெற்ற திறைசேரி உத்தியோகத்தர்)

காரைநகரைச் சேர்ந்தவரும், மலேசியாவைப் பிறப்பிடமாகவும் 2ஆம் ஒழுங்கை பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர வேலு - முருகேசு நேற்று முன்தினம் (12.02.2015) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு -தெய்வநாயகி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா வேலுப்பிள்ளை- நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், யோகலட்சுமியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை நாவலர் மகா வித்தியால யம்) பாச மிகு கணவரும், பாலமுரளி (லண்டன்), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிக தந்தையும், லதா (லண்டன்), சத்தியரூபி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், நாகராஜேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற மகேஸ்வரி (யாழ்ப்பாணம்) மற்றும் தியாகராஜா (ஆஸ்தி ரேலியா), புவனேஸ்வரி (ஆஸ்திரேலியா) நடராஜா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமைச் சகோதரனும், கிருஸ்ணா (லண்டன்) விதுசன் (லண்டன்), சரிகா (கனடா), சாரா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2015) ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7737

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### S.P. அந்தோனிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர்)



கடந்த 08.02.2015 ஞாயிற்றுக்கிழமை சுவாம்பிள்ளை பிலிப்பையா அந்தோனிப் பிள்ளை அவர்களின் பூதவுடல் அன்னாரின் மிருசுவில் இல்லத் திலிருந்து இன்று (14.02.2015) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு மிருசுவில் புனித நீக்கொலார் ஆலயத்தில் இடம்பெறும் அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிருசுவில். (36660)(46.8.7)

தகவல்:
குடும்பத்தினர்.

### அம்பலவாணர் பாலசிங்கம்

(இளைப்பாறிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்)



புங்குடுதீவு, எட்டாம் வட்டாரத்தைப் பிறப் பிடமாகவும், இல. 134/6A, ஆஸ்டி வீதி, தோணிக் கல், வவுனியாவை வசிப்பிடமாகவும், இல.923, திருநகர் வடக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய உதவிப் பொலிஸ் அத்தி யட்சகர் அம்பலவாணர் பாலசிங்கம் 12.02.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பல வாணர்-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், ஆறுமுகம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன் புக் கணவரும், தேவசுரேந்திரனின் (பிரான்ஸ்) அன்புத் தந்தையும், கணேசம்மா, பரமேஸ்வரி, சூரியகுமார் (ஆயுள்வேத வைத்திய உத்தி யோகத்தர்-நயினாமடு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருநாவுக் கரசு, சிவராசா (இளைப்பாறிய கிராம சேவையாளர், கணேசபுரம்) சித்திரா (மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், வவுனியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் வடக்கு, பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சூரியகுமார்,
0776062833

தகவல்:
சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர்கள்.

## நாடாளுமன்றை அரசாக்குவதே எம்முடைய முக்கிய இலக்காகும்

**பிரதமர் ரணில் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், பெப். 14

நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான் மைப் பலத்தைப் பெற்று அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து முழு நாடாளுமன்றத்தையும் அரசாக்குவதே எமது நோக்கமாகுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அமையப்போவது ஐ. தே. க. அரசோ, சுதந்திரக் கட்சி அரசோ அல்லது மஹிந்த ராஜபஷவுக்கு எதிரான அரசோ என்று மக்கள் என்னிடம் கேட்கின்றனர். அனைத் துக் கட்சிகளும் இணைந்து மக்களுக்கும் நாட்டுக்கும் சேவை செய்யக்கூடிய வகையில் முன்மாதிரியான அரசியல் முறையொன்றை கட்டியெழுப்புவதே எமது எதிர்பார்ப்பு – என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர்களான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மேலும் பதினைந்து அமைச்சர்களுக்குமான பாராட்டு நிகழ்வு றோயல் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இங்கு தொடர்ந்தும் உரை யாற்றியபோதே பிரதமர் இவ்வாறு தெரி வித்தார்.

"நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. அதனைத் தெளிவுபடுத்திக் கொண்டு அனைவரும் செயற்பட்டால் எமது நாட்டை ஆசியாவின் முன்னோடி நாடா கக் கட்டியெழுப்ப முடியும். வளர்ச்சி மிக்க நாடும் சிறந்த எதிர்காலமும் அமைய சகல அரசியல்வாதிகளதும் அர்ப் பணிப்பு அவசியம் என்றும் அதனைக் கட்டியெழுப்ப றோயல் கல்லூரி மாண வர்களின் பங்களிப்பு வேண்டும்"– என்று அவர் தெரிவித்தார்.

"இன்னும் ஐந்து வருட காலத்தில் நாட்டை முன்னேற்றி மக்கள் இழந்த அனைத் தையும் மீளப் பெற்றுக் கொடுப்பதற்கு காலம் கனிந்துள்ளது. நூறு நாள் வேலைத் திட்டம் அதற்கு சவாலாகவுள்ளது. அதற்கு முகம்கொடுக்கும் விதத்தை மக்கள் அவதானித்துக் கொண்டிருக்கின்றனர்."– என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள் லக்ஷ்மன் கிரியெல்ல, கயந்த கருணாதிலக்க, சஜித் பிரேமதாச, ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்த்தன, எம். ஏ. சுமந்திரன் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ற-4)

## மரண அறிவித்தல்



### செல்லையா சிவனொளிபாதம்

கள்ளப்பாடு வடக்கைச் சொந்த இடமாகக் கொண்ட செல்லையா- சிவனொளிபாதம் 12.02.2015 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லையா - பாக்கியம் தம் பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சாமி நாதன் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மரு மகனும், காலஞ்சென்ற மகாதேவா மற்றும் சபாரத்தி னம், மகாலிங்கம், காலஞ்சென்ற தவமணிதேவி ஆகி யோரின் அன்புச் சகோதரரும், சுபாஜினி (நோர்வே), சிவா கரன், ஜெயசாந்தி ஆகியோரின் அன்புத் தந்தை யும், வெற்றிவேல் (நோர்வே), சதாகரன் ஆகி யோரின் அன்பு மாமனாரும், சதுசனா, அபிநாத் (நோர்வே) ஆகி யோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னா ரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கள்ளப்பாடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கள்ளப்பாடு, முல்லைத்தீவு.
077 287 4518,
077 284 0650

தகவல்:
குடும்பத்தினர்.

(C/19729)(4.7.3)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

## பஸிலை விசாரிக்க இன்ரபோல் உதவி

முன்னைய ஆட்சியின் போது பெரும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை விசாரணை செய்ய சர்வதேச பொலிஸின் உதவி கோரப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அரசபேச்சாளர் ஒருவரை மேற்கோள் காட்டி இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசு கடந்த ஜனாதிபதி தேர்தலில்தோல்வியடைந்த பின்னர் பஸில் ராஜபக்ஷ மனைவியுடன் அமெரிக்கா பறந்து விட்டார்.

இந்தநிலையில் அவர் மீதும் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் மீதும் ஜே.வி.பி குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது. இது தொடர்பில் லஞ்ச ஊழல்கள் ஆணைக்குழுவிடமும் முறையிடப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே பஸில் ராஜபக்ஷவை விசாரணை செய்ய சர்வதேச பொலிஸாரின் உதவி நாடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தையல்நாயகி ஞானசம்பந்தர்



அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும் சுதுமலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தையல்நாயகி ஞானசம்பந்தர் நேற்று (13.02.2015) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான் செல்லத்துரை- சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், ஞானசம்பந்தரின் (விவாகப் பதிவாளர், சமாதான நீதவான்) பாசமிகு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- கணவர்-ஞானசம்பந்தர், சகோதரன் - நடேசபிள்ளை

**021 225 5764**

(56824)(3:4)

## வைத்திலிங்கம் பாலசிங்கம்



காரைநகர் சந்தம்புளியடியைப் பிறப்பிடமாகவும் தற்போது சங்கரத்தையில் வசித்தவருமாகிய வைத்திலிங்கம் பாலசிங்கம் நேற்று (13.02.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், கிருஸ்ணர்-நல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானாம்பிகையின் அன்புக் கணவரும், மகேந்திரம், தெய்வேந்திரம், புகனேந்திரன் (டோகா), மனோறஞ்சினி, தயாறஞ்சினி (ஜேர்மனி), தவறஞ்சினி, ஜெயறஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2015) ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவாலி வீதி, குளத்தடி, சங்கரத்தை.
077 9814633, 021 4911771

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்



## சீராளன் சித்திரவேலு J.P (C.I)

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர்
(Chief Inspector)


யாழ்ப்பாணம் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கல்கி சையை வசிப்பிடமாகவும் கொண்ட சீராளன் சித்திரவேலு அவர்கள் நேற்றுமுன்தினம் (12.02. 2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சீராளன் -நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாணிக்கம் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், அருந்தவகுல விண்மதி யின் பாசமிகு கணவரும், ஜலசன், ஜனுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவலிங்கம் (ஓய்வு பெற்ற சாஜன் மேஜர்), காலஞ்சென்ற குலசிங்கம் (காசாளர்), இராமசாமி (J.P, கோப்பாய் மத்தி யஸ்த சபை உறுப்பினர்) ஆகி யோ ரின் அன்புச் சகோதரனும், புஸ்பரட் ணம், காலஞ் சென்ற சிவலிங்கம் (பட்டா), சிவசுப்பிரமணியம் (மணி), சிவ ஞானம் (ரவி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2015) ஞாயிற்றுக் கிழமை கல்கிசையில் அமைந்துள்ள மகிந்த மலர்ச் சாலையில் பி.ப. 1.00 மணிக்கு நடைபெறும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மகன் - சி. ஜலசன்
**0777 307551**

# மரண அறிவித்தல்



## செல்லன் சின்னத்தம்பி

கைதடி மத்தி, அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லன் சின்னத்தம்பி கடந்த (11.02.2015) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லன்-வள்ளி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணை- வள்ளி தம்பதி யரின் அன்பு மருமகனும், சின்னப்பெட்டையின் அருமைக் கண வரும், கலைவாணி (ஹொலண்ட்), சிவயோகநாதன் (லண்டன்), சிவ குமார் (ஹொலண்ட்), காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் மோகன் (லண்டன்), தர்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயகுமார் (ஹொலண்ட்), மஞ்சுளாதேவி (லண்டன்), நர்மதா (ஹொலண்ட்), அஜித்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் துவாரகா, துசாந்தன், ஜனனி ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2015) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத் துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்மன் கோயிலடி, கைதடி மத்தி.
021 373 5855

தகவல்:
குடும்பத்தினர்.

## வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

(மணியம்)



நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (13.02.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான வடிவேலு - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் (சுபத்திரை) அன்புக் கணவரும், சசிரேகா (பிரான்ஸ்), விக்கினராஜ், நிறஞ்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், விஜயலட்சுமி மற்றும் சொர்ணலிங்கம் (கொழும்பு) ஆகியோரின் மைத் துனரும், ஸ்ரீஜெகனின் (பிரான்ஸ்) அன்பு மாமனும், தனுஷ், அனுஷ், ஆதிஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பத்தனை,
அளவெட்டி மத்தி, அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(56823)(45.3.7)

## வேலுப்பிள்ளை தர்மலிங்கம்



சரவணை கிழக்கை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு முதலியார் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தர்மலிங்கம் கடந்த (12.02.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரி, ஜெகதீஸ்வரன், விக்கினேஸ்வரன், குகனேஸ்வரன் காலஞ்சென்ற விக்னேஸ்வரி மற்றும் பரமேஸ்வரன், மோகனேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரி, செல்வராசா, பாலேஸ், ராதா, விமலா, பாமினி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2015) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முதலியார் கோயில் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
021 3735994

தகவல்: மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# வெளிநாடுகளில் இருந்து வைப்பிடப்படும் பணம் ஆய்வு

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வங்கிகளின் ஊடாக அனுப்பிவைக்கப்படுகின்ற நிதி, மத்திய வங்கியின் நேரடி ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கியின் தகவல்கள் இதனைத் தெரிவிக் கின்றன.

கடந்த அரசின் ஆட்சியின் போதும் இதேநிலைமை மேற்கொள்ளப்பட்டு வந்தது. எனினும் புதிய அரசின் கீழ் இந்த முறைமை விலக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

அவ்வாறின்றி தற்போதைய ஆட்சியிலும் வெளிநாட்டவர்களால் இலங்கையில் உள்ளவர்களின் வங்கி கணக்குகளுக்கு வைப்பிலிடுகின்ற பணம் இரண்டு நாள்கள் வரையில் மத்திய வங்கியால் தேக்கி வைக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அது தொடர்பான முழுமையான ஆய்வின் பின்னரே இந்த பணத்தை உரிய தரப்பினருக்கு வழங்குவதற்கு அனுமதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

---

## ஐ.நா. அறிக்கையின்

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் விசாரணை மேற்கொண்டது. அதன் அறிக்கை அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் அதனைப் பிற்போடுமாறு இலங்கையின் தற்போதைய அரசு வலியுறுத்துகிறது. இலங்கை அரசின் பிரதிநிதிகள் நேரடியாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் இதுகுறித்து வலியுறுத்தினர்.

குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு காரணமான பிரேரணையைக் கொண்டு வந்த அமெரிக்காவுடன், இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேச்சு நடத்தியுள்ளார். அதில் பிரேரணையை பிற்போடுவதற்கு அமெரிக்கா இணங்கியுள்ளது என்றபோதும், இறுதி முடிவை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரே மேற்கொள்வார் என்று கூறப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தலைவர் தலைமையில், நாளை மறுதினம் திங்கள் கிழமை ஜெனிவாவில் முக்கிய கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. அதில் இலங்கைக்கு எதிரான ஐ.நா அறிக்கையைப் பிற்போடுவதா இல்லையா என்பது தொடர்பில் முடிவு செய்யப்படும் என்று கூறப்படுகின்றது.(ற-5)

## தினமும்

"2009ஆம் ஆண்டுக்கு முன்னர் குறிப்பாக செம்மணிப் படுகொலைகளை அண்மித்த காலத்தில் பலர் காணாமல் போகச் செய்யபட்டனர். இன்றுவரை அவர்களைப் பற்றித் தகவல் இல்லை."– என்றும் அந்தச் சங்கம் கூறுகின்றது.

"முதலில் நீதி, நியாயம் வேண்டும். அடுத்து தொழில் நிறுவனங்கள் வேண்டும். சமூகத்தில் மனிதாபிமானம் வேண்டும். பக்கச்சார்பின்மை, சமத்துவம் சுடர்விட்டு பிரகாசிக்க வேண்டும். நாடு நல்லாட்சியை நோக்கிப் பயணிக்கட்டும்"– என்று அந்தச் சங்கத்தின் உப செயலாளர் த.விஜயகுமார் தெரிவித்தார்.

"1996 ஆம் ஆண்டு முதல் போராடி வருகின்றோம். தந்தையை – சகோதரனை– சகோதரியை– பிள்ளையைக் காணாது தினம் தினம் துடித்து மரணத்தின் வாயிலில் நிற்கின்றோம். நாம் என்ன தவறு செய்தோம். இந்த நாட்டின் குடிமக்களாகப் பிறந்தது தவறா?"– என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

"நாடாளுமன்றத்துக்கு முன்னால், உயர்நீதிமன்றத்துக்கு முன்னால், அரசியல் கட்சிகளின் அலுவலகங்களுக்கு முன்னால் நின்று நியாயம் கேட்கின்றோம். இன்று வரை பயனில்லை. இன்று நாம் பைத்தியங்கள் என்ற பட்டத்துடன் கணத்துக்குக் கணம் அழிந்து கொண்டிருக்கின்றோம்"– என்றும் அவர் கழிவிரக்கத்துடன் தெரிவித்தார்.

"தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளே, போரால் காணாமல் போன உறவுகளை நினைத்துத் தினம் தினம் அழிந்து கொண்டிருக்கின்ற உறவுகளின் உடலைத் தகனம் செய்துவிட்டு,பொருளாதாரச்சுமைகளைக்களைந்தெறிய நல்லாட்சியைப் பயன்படுத்துவீர்களா?. தினமும் எதிர்பார்த்து நோயால் அழிந்து கொண்டிருக்கும் எமக்கு, எம் உறவுகளைத் தந்துவிடுங்கள்."– என்றும் அவர் உருக்கமாகக் கோரிக்கை விடுத்தார்.

"போர் தந்த வடுக்களை எம்மால் இனியும் தாங்க முடியாது. சந்திரிகாவின் ஆட்சியில் எமது உறவுகள் காணாமற்போயினர். நல்லாட்சி என்று கூறும் இந்த அரசு எம் உறவுகளை மீட்டுத் தர வேண்டும்."– என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (ற-4)

## ஐ.நா.

வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்துப் பொது அமைப்புக்களையும் ஒன்று சேர்த்து பெருமெடுப்பில் இந்தப் பேரணி நடத்தப்படவுள்ளது என்று யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்தது. (ற-4)

## பாதுகாப்பின்

காங்கேசன்துறை வீதியூடாக இராணுவத்தினரின் உல்லாச விடுதியான தல்செவனவுக்கு செல்ல மட்டுமே மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர். அதற்கு அப்பால் உள்ள பகுதிகளுக்கு அனுமதிக்கப்படுவதில்லை.

காங்கேசன்துறை செல்லும் பாதையில் இராணுவத்தினரால் குளிரகம் அமைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி அவர்கள் வெதுப்பகமும் அமைத்துள்ளனர். தமிழ் மக்களின் வீடுகள் இராணுவத்தினரின் வர்த்தக நிலையங்களாக மாறியுள்ளன. அதனைவிடவும் பெரும் நிலப்பரப்பை அடைத்து – அது துறைமுகங்கள் அதிகார சபைக்குச் சொந்தமானது என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்குச் சொந்தமான வீடுகள், காணிகளே இவ்வாறு அடையாளமிடப்பட்டுள்ளன.

அத்துடன் காங்கேசன்துறையில் தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான ரோலர் படகுகளும் காணப்படுகின்றது. அவை கவனிப்பார் அற்று – மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. (ற-5)

## விசாரணை

"ஐக்கிய நாடுகள் ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணைக் குழு தனது முழுமையான விசாரணைகளைப் பூர்த்தி செய்துவிட்டது. அதனால் வடக்கு மாகாண சபையின் தீர்மானம் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது."– என்று அவர் குறிப்பிட்டார்.

"வடக்கு மாகாண சபை பிரேரணைகளை நிறைவேற்றலாம். ஆனால் இந்த விவகாரம் ஏற்கனவே சர்வதேச ரீதியில் ஆராயப்படுகின்றது. அதனால் இது குறித்து நாம் கரிசனைக் கொள்ளத் தேவையில்லை"– என்றும் அவர் தெரிவித்தார். (ற-5)

## சர்வதேச

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும், ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ–மூனுக்கும் இடையே நேற்று சந்திப்பு நடந்தது. அதற்கு முன்னதாக மூனின் பேச்சாளர் ஸ்டீவன் டுஜாரிக் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"இலங்கையில் நடத்த போரில் இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட வேண்டும். ஐ.நாவின் அந்த நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. இலங்கையின் புதிய அரசு உள்ளக விசாரணைப் பொறிமுறை மூலம் மீள் விசாரணை நடத்தத் திட்டமிட்டுள்ளது. அது உன்னிப்பாகக் கவனிக்கப்படும்."– என்று அவர் அந்தச் சந்திப்பில் கூறினார்.

"சர்வதேச தர நிர்ணயங்களுக்கு ஏற்ற வகையில் – சிறந்த முறையில் – நம்பகமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். அது இலங்கையின் முக்கிய கடமையாகும். குற்றச் செயல்களுக்குத் தண்டனை விதித்தல், பொறுப்புக்கூறல் என்பற்றின் ஊடாக நிலையான சமாதானம் மற்றும் ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியும். இலங்கையின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயராக இருக்கின்றோம்."– என்றும் ஸ்டீவன் தெரிவித்தார். (ற-5)

## வடக்கு

யாழ்.மாவட்டத்துக்கு அமைச்சர் நேற்று வருகை தந்திருந்தார். காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயத்தினுள் துறைமுகப் பகுதியில் அவர் கலந்துரையாடலில் ஈடுபட்டார். கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பிலேயே கலந்துரையாடல் நடத்தினோம். இந்தத் துறைமுகத்தை கடற்படையினரிடமிருந்து பெற்று, வர்த்தக நோக்கத்துக்காக அபிவிருத்தி செய்வது தொடர்பில் விரிவான கலந்துரையாடல் நடத்தினோம். இதனூடாக, வடபகுதி இளைஞர் – யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியும்.

மேலும் எமது அரசு, பாதுகாப்புக்குத் தேவையான – அவசியமான – காணிகளை மாத்திரம் எடுத்துக் கொண்டு ஏனைய காணிகளை விடுவிக்கும் என்று அவர் குறிப்பிட்டார். (த-5)

## போர் வெற்றி

போர் வெற்றி விழாவை – அதே கட்டமைப்புடன், ஆனால் பெயர் மாற்றத்துடன் கொண்டாடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.அதற்குஅமைச்சரவை அனுமதியும் வழங்கியுள்ளது.

"புலிகளை அழித்து – போரை வெற்றி கொண்ட முப்படையினருக்கு பாராட்டு விழா நடத்தப்படும். அது மே 18 ஆம் திகதி நடைபெறும்."– என்று பாதுகாப்பு அமைச்சரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி தமிழரின் ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. முன்னைய அரசு அதனைப் பெருமெடுப்பில் – போர் வெற்றி விழாவாக தென்பகுதியில் கொண்டாடியது. இலங்கையின் சுதந்திர தினத்துக்கு நிகராக படைகளின் பகட்டான அணிவகுப்புகளுடன் அது கொண்டாடப்பட்டது.

தற்போது பதவியேற்றுள்ள மைத்திரி தலைமையிலான புதிய அரசு அதனைக் கொண்டாட முடிவு செய்துள்ளது. ஆனால் போர் வெற்றி விழா என்ற பெயரை மட்டும் மாற்றி இராணுவப் பாராட்டு விழா என்று அதனைக் கூறுகின்றது.

"புலிகளுக்கு எதிரான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பங்களிப்பு வழங்கிய முப்படைகள், பொலிஸ், சிவில் பாதுகாப்புப் படையணி ஆகியவற்றைக் கௌரவிப்பதற்கும், தமது உயிரை அர்ப்பணித்த படையினரை நினைவுகூருவதற்கும் 2009ஆம் ஆண்டில் இருந்து ஆண்டுதோரும் மே 18 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்ததோர் தினத்தில் நடைபெறும் போர் வெற்றி விழா பேரணியை இந்த ஆண்டில் இருந்து இராணுவப் பாராட்டு விழாவாக நடத்துவது பொருத்தமானதாக இருக்கும்."– என்ற பிரேரணையை பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தார். அதற்கு அமைச்சரை அனுமதி வழங்கியது.

அதேவேளை, தென்னிலங்கையில் கொண்டாடப்படும் போர் வெற்றி விழா இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குத் தடையாக உள்ள பிரதான காரணிகளில் ஒன்று என சர்வதேச அமைப்புகள் பலவும் கடந்த காலங்களில் சுட்டிக்காட்டி வந்திருந்தன. (ற-5)

## மைத்திரி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழு நாளை இந்தியா பயணமாகின்றது. அவர்கள் அங்கு பல தரப்பினரையும் சந்திக்கவுள்ளனர். நேற்றுக்காலை அந்நாட்டுப் பிரதமர் நரேந்திரமோடி ஜனாதிபதி மைத்திரிக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டுள்ளார்.

"முதலில் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் இலங்கை அணிக்கு எனது வாழ்த்தைத் தெரிவிக்கின்றேன். 1996ஆம் ஆண்டு கிண்ணத்தைக் கைப்பற்றியது போன்று இம்முறையும் இலங்கை அணி கிண்ணம் வெல்ல வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்"– என்று அவர் அதில் கூறியுள்ளார்.

"இந்தியாவுக்கு வரவுள்ள உங்கள் தலைமையிலான தூதுக்குழுவை வரவேற்பதற்குப் பாரதமே தயராகிக் கொண்டிருக்கின்றது. அதற்காகத் தவம் இருக்கின்றது."– என்றும் மோடி தனது உரையாடலில் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

## கோத்தாவின்

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டுக் கொண்டிருந்த சமயம் இராணுவப் புரட்சி ஒன்றை நடத்த அலரி மாளிகையில் திட்டம் வகுக்கப்பட்டது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அந்தத் திட்டத்தை அப்போது பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்திருந்த கோத்தபாயவே முன்னெடுத்திருந்தார் என்றும் கூறப்படுகின்றது. அதற்காக ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டிருந்தன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்பட்ட 'அவன்ட் காட்' மற்றும் 'ரக்ன லங்கா' தனியார் பாதுகாப்பு நிறுவனங்களின் ஆயுதக் களஞ்சிய சாலைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

அதையடுத்தே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கோத்தபாயவின் வீட்டுக்குச் சென்று அவரிடம் வாக்குமூலம் பெற்றுக் கொண்டுள்ளனர். (ற-5)

## திட்டம்

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்துள் – இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் மக்களின் காணிகளில் ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. அதில் முதற்கட்டமாக வளலாயில் 240 ஏக்கர் காணி விடுவிக்கப்படும். அது ஆயிரத்து 22 குடும்பங்களுக்கு தலா 22 பேர்ச் வீதம் வழங்கப்பட்டு மாதிரிக் கிராமமாக அமைக்கப்படும். அங்கு மக்கள் மீள்குடிமர்த்தப்படுவர்.– என்று மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அமைச்சரவைத் தீர்மானத்தை அறிவிக்கும்போது நேற்றுமுன்தினம் கூறியிருந்தார்.

இந்தத் திட்டம் முன்னைய – மஹிந்த அரசால் 2013 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்டது. அப்போது மக்கள் அதனை முற்றாக நிராகரித்தனர். அதனால் திட்டம் கைவிடப்பட்டது. விடுவிக்கப்படுவதாகக் கூறப்படும் 240 ஏக்கர் காணிக[illegible] 224 பொதுமக்களுக்குச் சொந்தமானவை. அதனை சுவீகரித்து, வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து நலன்புரி முகாம்களில் உள்ள மக்களைக் குடியமர்த்தும் நோக்கில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

தற்போது பதவியேற்றுள்ள புதிய அரசு, அந்தத் திட்டத்தையே மீண்டும் கையிலெடுத்துள்ளது. அதற்கு உடனடியாகவே எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. காணிகள் அவற்றின் உரிமையாளர்களுக்கே வழங்கப்படும் என்று தேர்தல் காலத்தில் உறுதியளித்திருந்த தற்போதைய அரசு, அதற்கு எதிர்மாறாக மக்களைக் குடியமர்த்த முற்படுகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமை[illegible] கூறியுள்ளது. தமிழ் மக்களை அ[illegible] ஏமாற்ற முயல்கின்றது என்றும் தமிழ்க் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியிருந்தது.

அதையடுத்து நேற்றுக்காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுடன், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் கலந்துரையாடியுள்ளார். இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசுவதாகவும் அதன்போது அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனைத் தொடர்பு கொண்ட போது,

"இந்த விடயம் தொடர்பில் காலையில் (நேற்று) பிரதமருடன் பேசினேன். ஆயிரம் ஏக்கர் காணிகளும் யார் யாருக்குச் சொந்தமானவையே அவர்களுக்கே வழங்கப்படும். அவ்வாறு திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று பிரதமரிடம் கோரினேன். அதனை அவர் ஏற்றுக் கொண்டார்."– என்று தெரிவித்தார்.

"இந்த விடயம் குறித்து பாதுகாப்பு அமைச்சரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுடன் பேசுவதாகப் பிரதமர் கூறினார். அதன் பின்னர் அமைச்சரவைப் பத்திரத்தை மீளவும் சமர்ப்பித்து விடுவிப்புக்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்"– என்றும் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார். (ற-5)

# கழிவுகள் கொட்டப்படும் இடமாக உத்திரிக்கை குளம்

அளவெட்டி, பெப்.14

கந்தரோடை–சுன்னாகம் வீதியில் அமைந்துள்ள உத்திரிக்கை குளத்தில் கடந்த 5 மாதங்களாக கழிவுகள் ஏதுவும் போடப்படுவதில்லை.

தற்போது குளத்தில் நீர் குறைந்துவரும் நிலையில் இறைச்சிக்காக வெட்டப்படும் விலங்குகளின் கழிவுகளையும் வீட்டுக் கழிவுகளையும் மீண்டும் அங்கு கொட்டுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இதனால் அவற்றை நாய்கள் இழுத்து வந்து வீதியில் போடுவதும் வழமையாகியுள்ளது. சில வேளைகளில் ஆடு, மாடு, கோழி என்பவற்றின் தலை, தோல் என்பவற்றை வீதியில் காகங்களும், நாய்களும் வைத்து உண்பதைக் காண முடிகிறது.

இதன் காரணமாக அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது. குறித்த வீதியால் செல்லும் பாதசாரிகள் மிகுந்த அசௌகரியத்தின் மத்தியில் பயணிக்க வேண்டியுள்ளது.

இது தொடர்பாக அந்தப் பகுதி கமக்கார அமைப்புக்களிடம் முறையிடப்பட்டது. தம்மால் இதனைத் தடுக்க முடியாதுள்ளதுடன் பொறுப்பற்ற முறையில் சூழல் மாசடையும் விதத்தில் செயற்படும் நபர்களே தாமாகத் திருந்த வேண்டும் என்றும் கமக்கார அமைப்பின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போது காலபோக அறுவடை முடிந்ததும் அந்தப் பகுதியில் உப உணவுப் பயிர்கள் பயிரிடப்படும். அதற்கு அந்தக்குளத்து நீரே பயன்படுத்தப்படுவதால் விவசாயிகளுக்கு இதனால் நோய்கள் ஏற்படலாம் என்றும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட பிரதேசசபை இக் குளத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தும், வீதியால் செல்வோர் நலனின் அக்கறை கொண்டும், விவசாயிகள், கால் நடைகளைக் கவனத்தில் கொண்டும், உரிய கவனம் செலுத்தி குளத்து நீர் மாசடையாது பாதுகாப்பதுடன், விளம்பரப்பலகை ஒன்றையும் அவ்விடத்தில் நட்டால் கழிவுகள் கொட்டப் படுவது தவிர்க்கப்படும் என்றும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். (வ–36)





# விமோசனம் கிடைக்குமா?

## குடத்தனை - பொற்பதி வீதிக்கு

யாழ்ப்பாணம், பெப்.14

வடமராட்சி கிழக்கில் குடத்தனை–பொற்பதி வீதி சுமார் 15 வருடங்களுக்கும் மேலாக புனரமைப்பு ஏதுமின்றி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. 400 குடும்பங்களுக்கு மேல் வசிக்கும் குறித்த கிராமங்களின் பிரதான பாதையாகக் காணப்படும் இந்த வீதியில் நாளாந்தம் ஆறு தடவை அரச பஸ் பயணிக்கின்றது. அதைவிட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், வியாபாரிகள் எனப் பலதரப்பட்டோர் தமது பலவிதமான தேவைகளை சீரான முறையில் நிறைவேற்ற முடியாமல் சிரமப்படுகின்றனர்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வீதிகளில் ஒன்றாகக் காணப்படும் இந்த வீதி மணல் ஏற்றிய காலப் பகுதியில் இருந்து படுமோசமாக சிதை வடைந்து காணப்படுகின்றது. இதுவரை குறித்த வீதி புனரமைப்புச் செய்யாமல் இருப்பது கவலைக்குரிய விடயமே. உரியவர்களுக்கு உரிய முறையில் சுட்டிக் காட்டியும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே உரியவர்கள் இனியாவது இந்தப் பகுதி மக்களது சிரமத்தை உணர்ந்து இங்குள்ள மக்களையும், மாணவர்களையும் கர்ப்பிணித்தாய்மாரையும், அரச உத்தியோகத்தர்களையும், வியாபாரிகளையும் விபத்துக்களில் இருந்து காப்பாற்றி, மன நிறைவான பயணத்துக்கு குறித்த வீதியைப் புனரமைத்து தருமாறு அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (வ)



# மருத்துவமனை முன்பாக நடைபாதையில் குழி

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு முன்புறம் உள்ள நடைபாதையில் கொங்கிறீற் உடைந்து பெரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளது.

கர்ப்பிணித் தாய்மார்கள், நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் போக்குவரத்து அதிகம் உள்ள இந்த நடைபாதையில் நடமாடுபவர்கள் தவறி விழக்கூடிய சாத்தியம் உள்ளது.

கழிவுநீர் வெளியேறும் வாய்க்காலுக்கு மேலாகப் போடப்பட்ட கொங்கிறீற் தட்டு நீண்ட காலமாக உடைந்துள்ள போதும் யாழ். மாநகரசபை அது குறித்து கவனம் எடுக்கவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு பின்புறம் உள்ள நடைபாதையிலேயே இந்தக் குழி காணப்படுகிறது. (வ–7)

# கடை விறாந்தையில் ஆணின் சடலம் மீட்பு

தென்மராட்சி, பெப்.14

கடையொன்றின் விறாந்தையில் காணப்பட்ட ஆணின் சடலம் சாவகச்சேரி பொலிஸாரால் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனை சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமை வாழைக் குலைகளைக் கடைகளுக்கு கொடுத்து விட்டு வீடு திரும்பிய வேளை யில் மயக்கம் ஏற்பட்டதால் நுணாவில் சந்தியில் உள்ள கடை விறாந்தையில் படுத்திருந்த போது குறிப்பிட்ட நபர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. கைதடி மத்தியைச் சேர்ந்த செல்லர் சின்னத்தம்பி (வயது–67) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அவரது இறப்பு தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

சடலத்தைப் பார்வையிட்ட நீதிவான் மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மூலம் உடற் கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும், பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (வ–9)

# முகவரி தேடி அலையும் தபால் உத்தியோகத்தர்கள்

சாவகச்சேரி, பெப். 14

சாவகச்சேரி பிரதம அஞ்சலகத்துக்கு மற்றும் உப அஞ்சலகங்களுக்கு வரும் கடிதங்களில் குறுகிய முகவரிகளை இட்டு அனுப்பப்படுவதால் அவற்றை உடனுக்குடன் உரியவர்களிடம் சேர்ப்பிக்க இயலாது. முகவரி தேடி தாம் அலைய வேண்டி உள்ளதாகத் தபால் விநியோக உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின் றனர்.

இவ்வாறு முகவரிதேடி அலைவதால் அந்தக் கடிதங்களை சில வேளைகளில் 3, 4 தினங்களாக உரியவர்களிடம் வழங்க முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் ஒரு கடிதம் வழங்க 3 கிலோமீற்றர் தூரத்துக்கு அதிகமாக சைக்கிளில் செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது. அத்துடன் முகவரி இருந்தாலும் அந்தக் கடிதங்களையும் உரியவர்கள் உடனே வீட்டுவாசலுக்கு வந்து பெற்றுக்கொள்ள தாமதிக்கின்றனர்.

தபால் உத்தியோகத்தர்கள் கடிதங்களைக் கொண்டு செல்கின்ற நேரம் வீட்டில் உள்ளவர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சுவாரசியமான நாடகம் அல்லது படங்களைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். இதனால் வீட்டுவாசலில் கூப்பிடும் பொழுது கடிதங்களை பெற்றுக் கொள்ள வராது பேசாது இருந்து விடுகிறார்கள். கடிதங்களை முக்கியமற்றதாகக் கருதுகிறார்கள். கடிதங்கள் வங்கியில் இருந்து பெறப்பட்ட கடனுக்கான கடிதம் அல்லது பெறப்பட்ட பொருளுக்கான லீசிங் கம்பனியின் கடிதம் தான் வரும் என்பதால் அவர்கள் கடிதத்தை பெற்றுக் கொள்ள ஆர்வம் காட்டுவதில்லை.

மக்கள் வங்கியில் அடைவு வைக்கிறார்கள். இதன்போது தெளிவில்லாது முகவரிகளை சுருக்கமாக வழங்குகிறார்கள். இதனால் முக்கிய கடிதங் களையும் வழங்கமுடிவ தில்லை.

இதன்காரணமாக வங்கியில் வைக்கப்பட்டுள்ள அடைவு நகைகள் ஏலத்தில் விற்பனை செய்தல், வங்கிகளில் வட்டிப் பணத்தை செலுத்துங்கள் என்ற கடிதங்கள் அவர்களிடம் சென்றடையாத நிலையால் அவர்கள் அந்தத் திகதியில் வங்கிக்குச் செல்வதில்லை. இதனால் அவர்களது நகைகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும் துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுகிறது. எனவே பொதுமக்கள் தமது முகவரிக்ளை மிகவும் தெளிவாக உரிய வீட்டு இலக்கம் இட்டு உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அத்துடன் வீட்டின் தெருவாசலில் சிறிய தபால் பெட்டியை பொருத்துவதுடன் அதில் தமது வீட்டு இலக்கம் அல்லது ஆதன இலக்கத்தை இட்டு கடிதத் தொடர்புகளை வைப்பதால் மிக இலகுவாக கடித விநியோகத்தை செய்ய முடியும். இதனால் மக்கள் பயன் பெறவாய்ப்பு அதிகமாகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (வ–131)

# வடமாகாண விசேட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் திங்களன்று

தென்மராட்சி, பெப்.14

வட மாகாணத்துக்கான விசேட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

அரச நிர்வாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி அமைச்சர் கரு ஜெயசூரிய தலைமையில் நடை பெறும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு உள்ளூராட்சி சபைகளின் தலைவர் துணைத் தலைவர் ஆகியோருக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் அறிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசு அமைந்த பின்னர் தற்போது முதன்முதலாக வடமாகாணத்துக்கான விசேட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. (வ–9)

# பிற்போடப்பட்டது கலந்துரையாடல்

சமகால அரசியல் தொடர்பில் நாளை ஞாயிற்றுக்கிழமை, இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெற ஏற்பாடாகியிருந்த கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்றும், புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று ஏற்பாட்டாளரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (வ–5)

# 'பட்ஜெட்'டுக்கு அமைய அரச அலுவலர், ஓய்வூதியர் கொடுப்பனவில் திருத்தம்

தென்மராட்சி, பெப்.14

2015 வரவு செலவுத்திட்ட பிரேரணைக்கு அமைய அரச துறையின் அலுவலர்களுக்கும் ஓய்வூதியர்களுக்குமான கொடுப்பனவில் திருத்தம் மேற்கொள்ளல் தொடர்பான நிர்வாகச் சுற்றறிக்கையை அரச நிர்வாக மாகாண சபைகள் உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி அமைச்சின் செயலாளர் ஜே.தடல்லகே திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய அரச துறையில் சேவையாற்றுகின்ற அலுவலர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற மூவாயிரம் ரூபாவான இடைக்காலக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவாக இந்த மாதத்தில் இருந்து வழங்கப்பட வேண்டும். அரச துறையின் அலுவலர்களுக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட மாதாந்தக் கொடுப்பனவாக 10 ஆயிரம் ரூபாவிலிருந்து செலுத்த வேண்டிய எஞ்சிய தொகையான 2ஆயிரம் ரூபாவை 2015 ஜூன் மாதத்தில் இருந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். (வ–9)



# சில்லறை நாணயம் யாழில் தட்டுப்பாடு

தென்மராட்சி, பெப். 14
குடாநாட்டில் 10 ரூபா தாள் தொடக்கம் சில்லறை நாணயங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
கடைகளில்,சந்தைகளில் பொருள்களை வாங்குவோருக்கு மிகுதிப் பணம் வழங்குவதற்குப் பதிலாக வேறு பொருள்களை வியாபாரிகள் வழங்குகின்றனர். அத்தியாவசிய உணவுப் பொருள்கள், மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், வெற்றிலை, பழவகைகள் போன்ற பொருள்களை வாங்கும் பொது மக்களுக்கு மிகுதிப் பணமாக 20 ரூபாவுக்குக் குறைந்த தொகை வழங்கப்படுவதில்லை. வர்த்தக நிலையங்களில் மிகுதிப் பணத்துக்குப் பதிலாகத் தீப்பெட்டி, ரொபி, ஷம்போ பைக்கற்றுக்கள் போன்றவையும் வழங்கப்படுகின்றன.
புழக்கத்தில் இருந்த சில்லறை நாணயங்கள் எங்கே சென்றன எனத் தெரியாமல் உள்ளதாக வியாபாரிகள் கூறுகின்றனர். (த-9)

## போதை தலைக்கேறியமையால் பொலிஸ் ஜீப்பில் ஏறிய இருவர்



தென்மராட்சி, பெப் 14
அளவுக்கதிகமான மதுபோதையில் வீதியில் வந்த பொலிஸ் வாகனத்தை மறித்து ஏறிய தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள் இருவர் பொலிஸாரினால் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.
கடந்த 11ஆம் திகதி வீதியில் மது போதையில் நின்ற தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள் இருவர், அவ்வழியே வந்த வாகனத்தைக் கைகாட்டி நிறுத்துமாறு கூறியுள்ளனர்.
வந்தது பொலிஸ் வாகனம் என்பது அவர்களுக்குத் தெரியாது. இருவரும் ரை அணிந்து ரிப்ரொப்'பான உடையில் இருந்தனர்.
வாகனத்தை நிறுத்திய பொலிஸார் அவர்களை ஏற்றி நேரடியாகப் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். பொலிஸ் நிலையத்துக்குள் வாகனம் சென்ற பின்னரே தாம் ஏறிய வாகனம் பொலிஸாருடையது என இருவருக்கும் தெரிந்தது.
இந்த இருவரையும் நேற்றுமுன்தினம் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்திய போது, இருவரும் தலா 5 வீதம் வாழைமரக் கன்றுகளை நீதிமன்ற வளாகத்தில் நடுவதற்கு கொள்வனவு செய்து வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-9)

## கடன் வழங்கும் சங்கங்கள் விரைவில் மீளுருவாக்கம்

யாழ்ப்பாணம், பெப். 14
தீவுப் பகுதியில் பல வருடங்களாகச் செயற்படாமல் இருக்கும் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை மீண்டும் இயங்கச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டச் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் எஸ்.இலகுநாதன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
குறிப்பாக நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, மண்டைதீவு உட்பட்ட தீவுப் பிரதேசங்களில் உள்ள சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த பல வருடங்களாக இயங்காமல் செயலிழந்த நிலையில் உள்ளன.
இந்தச் சங்கங்களைக் கட்டம் கட்டமாக மீள இயங்க வைப்பதற்குச் சமாசம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.
தற்போது முதற்கட்டமாக நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள சிக்கனக் கடன் வழங்கும் சங்கங்களை மீளவும் இயங்க வைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.
இதற்காகச் சமாசத்தின் தலைவர் எஸ்.இலகுநாதன் தலைமையிலான பணியாளர் குழு ஒன்று நெடுந்தீவுக்குச் செல்லவுள்ளது.
இந்தக் குழுவினர் அங்கே சென்று சங்கங்களை மீளவும் இயக்க வைப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளனர். (த-17)

# வாகன வசதி வழங்குங்கள்

## வடக்கு கால்நடை வைத்தியர்கள் மாகாண சபையிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்.பெப்.14
ஏனைய மாகாணங்களை விட வடக்கு மாகாணத்திலேயே கால்நடை வைத்தியர்களுக்குப் போதிய வாகன வசதி இல்லை.
எனவே வடக்கு மாகாண் சபை மத்திய அரசுடன் பேசி வாகனங்களைப் பெற்றுக் கொடுத்துக் கால்நடை வைத்தியர்களின் சேவைகளை இலகுபடுத்தவேண்டும். இவ்வாறு வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் சி.வசீகரன் தெரிவித்துள்ளார்.

**வடக்கு மாகாண சபை மத்திய அரசுடன் பேசி வாகனங் களைப் பெற்றுக் கொடுத்துக் கால் நடை வைத்தியர்களின் சேவை களை இலகுபடுத்தவேண்டும்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கால்நடை வைத்தியர்களின் வெளிக்களப் பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ள வாகன வசதிகள் ஏனைய மாகாணங்களில் கால்நடை வைத்தியர்களுக்குப் போதியளவு உள்ள போதும் வடக்கு மாகாணத்தில் கால்நடை வைத்தியர்களுக்கு வாகனப் பற்றாக்குறை உள்ளது.
இதனால் அவசர தேவைகளின் போது குறித்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் கால்நடை வைத்தியர்கள் உள்ளனர். வடக்கு மாகாணத்துக்கு ஏற்கனவே 5 புதிய வாகனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. மத்திய கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மேலும் 60 வாகனங்களை முதற்கட்டமாக வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதில் வடக்கு மாகாணத்துக்கு 8 வாகனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.
எனினும் கால்நடை வைத்தியர்களுக்கான வாகன வசதிகள் போதுமானதாக இல்லை. 34 கால்நடை வைத்தியர்களுக்கும் 34 வாகனங்கள் இருக்க வேண்டிய நிலையில் அரைவாசித் தேவையே நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனால் கால்நடை வைத்தியர்கள் தமது வெளிக்கள வேலைகளை ஒழுங்காக மேற்கொள்ள முடியாதுள்ளனர்.
வடக்கு மாகாணத்தில் அதிகம் பெண் கால்நடை வைத்தியர்கள் கடமையில் இருப்பதால் அவர்களுக்குக் கட்டாயம் வாகன வசதி தேவை. ஆனால் இருக்கும் வாகனங்களை 2 கால்நடை வைத்திய நிலையங்களே பயன்படுத்துகின்றன.
இது தொடர்பில் வடமாகாண சபை மத்திய கால்நடை உற்பத்தி சுகாதார அமைச்சுடன் பேசி வாகன வசதிகளைப் பெற்றுத் தரவேண்டும்-என்றார். (த-14)



யாழ்.நகரில் அன்னாசிப்பழம் விற்பனைக்கு வந்துள்ளது. தென்பகுதியில் இருந்து பெருந்தொகையான அன்னாசிப் பழங்கள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படுகின்றன. அன்னாசிப்பழம் பெரியது ஒன்று 100 ரூபாவாகவும், சிறியது ஒரு சோடி 100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.(த-135)



## தாக்குதல்களில் இருவர் காயம்

தென்மராட்சி,பெப்.14
கொடிகாமத்திலிருந்து பயணிகளுடன் வந்த தனியார் பஸ்ஸை மீசாலை புத்தூர் சந்தியில் வழிமறித்த நபர், நடத்துநரை மோசமாகத் தாக்கிவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பியோடினார். இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.
இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்துப் பொலிஸார் புத்தூர் கிழக்கைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்துள்ளனர். இந்த நபரைப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தியபோது 20ஆயிரம் ரூபா பிணையில் செல்ல நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.
இதேவேளை-
வீதியில் நடந்து வந்தவரை பின்தொடர்ந்து வந்த கும்பல் இரு...ன பகுதியில் வைத்து இரும்புக் கம்பிகளால் தாக்கியதில் தலையில் பலத்த காயமேற்பட்டது.
இந்தச் சம்பவம் கடந்த 11ஆம் திகதி இரவு பளையில் இடம்பெற்றது.
தலையில் பலத்த காயங்களுடன் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பெரிய பளையைச் சேர்ந்த குலசிங்கம் ஜீவகரன் (வயது-42)என்னும் குடும்பஸ்தர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (த-9)

## கிணற்றில் தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் சாவு

தென்மராட்சி,பெப் 14
கிணற்றில் தவறிவீழ்ந்து குடும்பஸ்தர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கடந்த 11ஆம் திகதி எழுதுமட்டுவாழ் தெற்கில் இடம்பெற்றது.
இதே இடத்தைச் சேர்ந்த கந்தர் நடராசா (வயது-48) என்பவரே உயிரிழந்தவராவார். நெல் அறுவடை செய்துவிட்டு வீடு திரும்பிய இவர் வளவுக் கிணற்றில் குளிக்கச் சென்றதாகவும், நீண்ட நேரமாக வராததால் தேடிச் சென்றபோது கிணற்றுக்குள் இருந்து அவரை மீட்டு சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றவேளை வழியில் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.
கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.(த-9)

## பொலிஸுக்கு டிமிக்கி விட்டு தப்பிச் சென்றார் சந்தேக நபர்

யாழ்ப்பாணம்,பெப் 14
பொலிஸ் பாதுகாப்பில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞர்; வைத்தியசாலையில் இருந்து தப்பியோடியுள்ளார்
யாழ்.நகரப் பகுதியில் வைத்து கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.
அச்சுவேலி தெற்கு பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய குறித்த இளைஞர், யாழ். நகரப் பகுதியில் உள்ள தொலைபேசி விற்பனை செய்யும் கடை ஒன்றில் வேலை பார்த்து வந்துள்ளார்.
நேற்று முன்தினம் மாலை வேலை முடிந்து கடைக்கு வெளியே வரும் போது யாழ்.பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.



கைது செய்த இளைஞரை யாழ். பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு வந்து இளைஞரிடம் வாக்குமூலம் பெற்ற நேரம், இளைஞர் அந்த இடத்தில் இருந்த டீசலை எடுத்துக் குடித்துள்ளார்.
உடனடியாகப் பொலிஸார் யாழ். போதனா வைத்தியசாலையில் இளைஞரை அனுமதித்தனர். அவ்வாறு இளைஞர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை, பாதுகாப்புக்கு நின்ற இரு பொலிஸாருக்கும் டிமிக்கி கொடுத்துவிட்டு வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். தப்பிச் சென்ற இளைஞரை யாழ்.பொலிஸார் தீவிரமாகத் தேடிவருகின்றனர்.(த-106)

# அரசியல் கைதிகளை விடுவிக்க கையெழுத்து

## யாழ். பஸ் நிலையத்தில் போராட்டம்



யாழ்ப்பாணம், பெப். 14
அரசியல் கைதிகளை விடுதலை [illegible], காணாமற்போகச் செய்யப் [illegible]வர்களை, கடத்தல்களை வெளியிடு, குமார் குணரத்தினத்தின் அரசியல் உரிமையைப் பறிக்காதே ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து முன்னிலை சோலிசக் கட்சியினர் யாழ். நகர பஸ் நிலையத்தில் நேற்று முற்பகல் கையெழுத்துப் போராட்டம் நடத்தினர்.

ஒவ்வொரு மாவட்டங்களாக இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் அவர்கள், நேற்று மதியத்திலிருந்து யாழ்.பஸ் நிலைய முன்றலில் இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

அவர்கள் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

மஹிந்த ஆட்சியில் இடம்பெற்ற ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் [illegible]மாக பாதிக்கப்பட்ட மக்கள் அந்தச் செயற்பாடுகளைத் துடைத்தெறிவதையும், அந்த ஆட்சியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதனையுமே தற்போதைய ஆட்சியாளரிடம் மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

ஜனநாயக விரோதச் செயற்பாடு காரணமாக அடக்குமுறைக்கும் ஒடுக்கு முறைக்கும் ஆளாக்கப்பட்ட சமூகமாகவே இன்றுவரை உள்ளோம். காணாமற்போதல், கடத்தல், கொலை, பொலிஸ் தடுப்பில் இருக்கும்போது கொலை, வெள்ளை வான் கோஷ்டியால் கடத்தல், வடக்கில் ராணுவ ஆட்சியைத் தொடர்தல், வேலை நிறுத்தங்களை அடக்க உத்தரவிடல், நாட்டின் சிவில் பிரச்சினைகளில் இராணுவம் தலையிடல், பல்கலைக்கழக மாணவர்கள், அரச அதிகாரிகளுக்கு இராணுவப் பயிற்சி வழங்கல், பல்கலைக்கழக மாணவர்களை இலக்கு வைத்து மேற்கொண்ட அடக்குமுறைகள், ஆர்ப்பாட்டங்களின் மீது தாக்குதல், வெடிவைத்தல் போன்ற சம்பவங்கள் மலிந்திருந்தன.

அரசியல் கைதிகள் சம்பந்தமான பிரச்சினை ஜனநாயக விரோதத்தின் உச்சக் கட்டமாக இருந்தது. இது தொடர்பாக எழுச்சி பெற்ற சமூகத்தின் எதிர்ப்பு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளில் பிரதிபலித்தது. முன்னைய ஜனநாயக விரோத ஆட்சியை முறியடித்து அதிகாரத்துக்கு வந்த ஆட்சியாளரிடமிருந்து மக்கள் எதிர்பார்ப்பது இந்தச் செயற்பாடுகளை சமூகத்திலிருந்து துடைத்தெறிவதும் அந்த ஜனநாயக விரோத ஆட்சியினால் அநீதியிழைக்கப்பட்ட, பாரபட்சம் காட்டப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதுமாகும்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. அதேபோன்று கடந்த காலங்களில் நடந்த காணாமற்போதல்கள், கடத்தல்களுடன் தொடர்புடைய வெள்ளை வான் கலாசாரத்தையும் உத்தியோகப்பற்றற்ற இராணுவச் செயற்பாடுகள் சம்பந்தமாகத் தொடர்புடைய நபர்களையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வர வேண்டும். கடத்தப்பட்டவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அவர்கள் அனைவரையும் உடன் விடுதலை செய்ய வேண்டும்.

காணாமற்போன லலித், குகன் தொடர்பில் இதுவரை எந்தவித தகவலும் கிடைக்கவில்லை. பலர் இங்கு வாழ முடியாது வெளிநாட்டுக்கு இடம்பெயர்ந்தனர். ஊடகவியலார்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் உட்படப் பலர் நாட்டுக்குத் திரும்ப எதிர்பார்த்துள்ளனர். அவர்களைத் திரும்ப வருமாறு அரசு அழைப்பு விடுத்தபோதும் அவர்களது உரிமை இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

அதனை தற்போதைய அரசு உறுதி செய்யவேண்டும். குமார் குணரத்தினம் இங்கு தங்கியிருக்கவும் தனது அரசியல் கருத்துக்களை வெளியிடவும் தான் விரும்பிய ஜனநாயக அரசியலில் கருத்துக்களை வெளியிடவும் உள்ள அவரது உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–4–106)

# யாழ். கடைகளில் திடீர்ச் சோதனை

யாழ்ப்பாணம், பெப்.14
குடாநாட்டில் பொதுமக்களால் வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைவாக அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்படாத கடைகளை சோதனையிடும் நடவடிக்கைகளில் யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் ஈடுபட்டுள்ளனர்.

வரவு–செலவுத் திட்டத்தின் பிரகாரம் அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டன. எனினும் யாழ்.மாவட்டத்தில் சில கடைகளில் விலை குறைப்புச் செய்யப்படாமல் பொருள்கள் பழைய விலையிலேயே விற்பனை செய்–யப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் தொலைபேசி மூலமாகப் பொதுமக்களால் பாவனையாளர் அதிகார சபைக்கு முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு கடைகளைச் சோதனையிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

45 இற்கும் மேற்பட்ட கடைகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. குறித்த விற்பனை நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, கடை உரிமையாளர்கள் பொருள்களின் விலைப் பட்டியலை கடைகளில் காட்சிப்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நுகர்வோர் சட்டங்களை மீறும் அனைத்து விற்பனையாளர்களுக்கும் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனப் பாவனையாளர் அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர். (த–14)

# பாடசாலை வளாகத்திலிருந்து பொலிஸார் விலகக் கோரிக்கை

வவுனியா, பெப் 14
வவுனியா பூவரசங்குளம் ஆரம்பப் பிரிவு பாடசாலை வளாகத்தில் உள்ள பொலிஸாரை வெளியேறுமாறு அங்கு பயிலும் மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா பூவரசங்குளம் ஆரம்பப் பாடசாலை வளாகத்தில் நீண்ட காலமாக தங்கியிருக்கும் பொலிஸாரை வெளியேற்றி தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டுக்கு உதவுமாறு இராணுவ உயர் அதிகாரிகளிடமும், கல்வி அமைச்சிடமும் பெற்றோர் கோரியுள்ள்னர்.

கடந்த 6 ஆண்டுக்கு மேலாக இப்பகுதியில் பொலிஸார் முகாம் அமைத்து தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் இடைநிலைப் பிரிவு மாணவர்களின் கட்டட வளாகத்தில், தற்காலிகக் கட்டடங்களிலேயே ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கற்று வருகின்றனர். கடும் மழை, காற்று காலங்களில் இவர்களின் கற்றல் செயற்பாடு பாதிக்கப்பட்டு வருகின்றது.

இது குறித்து பாடசாலை நிர்வாகம் வவுனியா அரச அதிபர், கல்வித் திணைக்களம், கல்வி அமைச்சு, இராணுவ உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகள் உட்பட பலருக்குத் தெரியப்படுத்தியும் பாடசாலை வளாகத்தை விட்டுப் பொலிஸார் அகலவில்லை.

இதனால் மாணவர்கள் தொடர்ந்தும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த–402)

# மீனவரின் ஓய்வு மண்டபம் சேதம்

## விசமிகள் கைவரிசை

கொழும்புத்துறை,பெப்.14
பாயைூரில் அமைந்துள்ள ஜிம்பிறவுண் மீனவர் ஓய்வு மண்டபம் மற்றும் எம்.ஜி.ஆர்.சிலைப் பகுதி என்பன விசமிகளால் கழிவு ஒயில் வீசிச் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு ஜிம்பிறவுன் ஓய்வு மண்டபத்தின் இருக்கைகள் மற்றும் நிலப் பகுதிகளில் கழிவு ஒயில், மனித மலக் கழிவுகள் என்பன வீசப்பட்டு அசிங்கப்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, கடந்த மாதம் எம்.ஜி.ஆர் சிலை திறந்து வைக்கப்பட்ட பின்னர் இரு தடவைகள் அங்கு பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகள் விசமிகளால் அடித்து உடைக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். சிலைப் பகுதி மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் ஓய்வு மண்டபம் என்பவற்றுக்கு மாசு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற முறையற்ற செயல்களால் மக்கள் கடும் விசனம் கொண்டுள்ளனர். (த–135)

# வவுனியா உணவகங்களில் விலைக் குறைப்பு இல்லை

அரசின் இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தின் மூலம் அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைக்க[illegible]ட்டபோதும் வவுனியா பிரதேசத்[illegible] உள்ள உணவகங்களில் உணவு[illegible]கைகள் குறைக்கப்படவில்லை என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து அரச அதிபர், விலைக் கட்டுப்பாட்டு ஆணையாளர் ஆகியோருக்கு முறைப்பாடு செய்துள்ள போதும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என அவர்கள் கூறுகின்றனர்.

எனவே இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர். (த–402)

# 100 நாள் திட்டத்தில் குடியமர்த்துவார்களா?

## இத்தாவில் மக்கள் கேள்வி

மைத்திரி அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தில் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் இதுவரை மீளக்குடியமர அனுமதிக்கப்படாத இத்தாவில், வேம்பொடுகேணி மேற்கு, முகமாலை தெற்கு ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவார்களா என அந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

2000ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த சுமார் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதுவரை மீளக்குடியமர்த்தப்படவில்லை. சுமார் இரண்டு கிலோ மீற்றர் நீளமான இத்தாவில் தொடக்கம் முகமாலை வரையான ஏ–9 வீதியின் இரு புறமும் வெடி பொருள்கள் அகற்றப்படுவதாகக் கூறி இதுவரை மக்கள் மீளக் குடியமர்த்தப்படவில்லை.

போர் முடிவடைந்து ஐந்து வருடங்களாகியும் இந்தப் பகுதியில் வெடி பொருள்கள் அகற்றப்படாததால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சொல்லொணாத கஷ்டங்களின் மத்தியில் உறவினர் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் பளைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மீளக்குடியமராத பகுதிகளைச் சேர்ந்த மக்களுடனான சந்திப்பின் போது நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், பிரதேச செயலர் திருமதி ஜெ.பரமோதயன் முன்னிலையில் வெடிபொருள்கள் அகற்றும் பிரிவினரால் டிசெம்பர் மாத முடிவில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர் என உறுதியளிக்கப்பட்டது.

உறுதிமொழி வழங்கிய காலப் பகுதிக்கு மேலாக இரண்டு மாதங்கள் சென்ற போதிலும் இன்னமும் மீள குடியமர்வு இடம்பெறவில்லை.

வடபகுதிக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்படவிருந்த வேளையில் தண்டவாளம் அமைக்கப்படவிருந்த பகுதியிலிருந்து சுமார் 200 தொடக்கம் 300 மீற்றர் தூரம் வரையான பகுதிகள் வெடிபொருள்கள் அகற்றப்பட்டு விட்டதாகவும், [illegible] பகுதிகள் விரைவில் வெடி[illegible]ருள்கள் அகற்றப்பட்டு மக்கள் [illegible]க்குடியமர்த்தப்படுவார்கள் [illegible] தெரிவிக்கப்பட்டது.

மைத்திரி அரசின் 100 [illegible]வலைத் திட்டத்தில் வடக்கு–கி[illegible] மாகாணங்களில் மீளக்கு[illegible]ர்வுகள் மேற்கொள்ள நட[illegible] எடுக்கப்பட்டு வரும் நி[illegible]ளைப் பிரதேசத்தில் இன்[illegible]டுவிக்கப்படாத பகுதிக[illegible]களை மீளக்குடியமர்த்த ந[illegible] மேற்கொள்ளுமாறும் ச[illegible]ப்பட்டவர்களை கேட்டுள்ள[illegible] (த–9)

# மொபிட்டல் கிண்ண ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், பெப். 14

வடக்கு மாகாண உதைபந்தாட்ட அபிவிருத்திப் பேரவையால் மாகாண ரீதியாக நடத்தப்படும் மெபிட்டல் வெற்றிக் கிண்ணத்துக்கான 11பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம், வடமாரட்சி ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான ஆட்டங்கள் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இதில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளந்தளிர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 3மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில்கிளிநொச்சிசென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான ஆட்டங்கள் அலை ஓசை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இதில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளைஞர் வட்ட விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகஅணிமோதவுள்ளது.காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து முல்லைத்தீவுசென்யூட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அலை ஓசை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அல்வின்ரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுப்பர்றாங் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மன்னார் மாவட்டத்துக்கான ஆட்டங்கள் மன்னார் நகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளன. இதில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பனங்கட்டிக்கொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் சின்னக்கடை கிறின்பீலட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.செபஸ்ரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பள்ளிமுனை சென்.லுட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நசேரத் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

வவுனியா மாவட்டத்துக்கான ஆட்டங்கள் வவுனியா நகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இதில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஈஸ்வரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மன்னார் சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வவனியா வடதாரகைவிளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து முல்லைத்தீவு சந்திரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வவுனியா யுனிடைட் விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.மாலை 4 மணிக்குஇடம்பெறும் ஆட்டத்தில் வவனியா சண்சைன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில்இடம்பெறவுள்ளன.இதில்காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தீவக சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறைவிண்மீன்விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மன்னார் தோட்டவெளி யுனைட்டட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

வலிகாமம் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இதில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வலிகாமம் மகாத்மா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வலிகாமம் கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வலிகாமம் அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வவுனியா 786 விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

வடமராட்சிப் பகுதிக்கான ஆட்டங்கள் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.இதில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் காரைநகர் கலாநிதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மூன்றாம்பிட்டி சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது

தீவகப் பகுதிக்கான ஆட்டங்கள் அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இதில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இருதயராஜா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வலிகாமம் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியூட்டன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தீவகம் அண்ணா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தீவகம் காந்திஜி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில்கிளிநொச்சிபளைவிளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தீவகம் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(த-23-86)



## சென்றலைட்ஸ் சொக்ஸ், புளூஸ் அசத்தலான ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் ஆண், பெண் இரு பாலாருக்குமான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் இடம்பெற்றஆட்டங்களில்சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக்கழக அணி சென்றலைட்ஸ் புளூஸ் விளையாட்டுக்கழக அணி ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

மாலை 4 மணிக்கு இடம் பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.ஆட்ட நேர முடிவில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக்கழக அணி 68:29 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் புளூஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.கே.எஸ். விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. ஆட்ட முடிவில் சென்றலைட்ஸ் புளூஸ் விளையாட்டுக்கழக அணி 48 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)

## ஆதிசக்தி, உடுப்பிட்டி ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 14

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின்முடிவடைந்த ஆட்டங்களில் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம், உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஸ்ரீஅம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. முதற்பாதி ஆட்டத்தின் 8ஆவது நிமிடத்தில் ஆதிசக்தி விளையாட்டுக்கழக அணி வீரன் யோகன் தனக்கு கிடைத்த பந்தைக் கோலாக மாற்றினார். ஆதிசக்தி விளையாட்டுக்கழக அணி வீரன் யோகன் மீண்டும் 19ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலை அடித்தார்.ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது 2:0 என்ற கோல் கணக்கில் ஆதிசக்தி முன்னிலையில் இருந்தது.

ஆட்டத்தின் 39 ஆவது நிமிடத்தில்போது ஸ்ரீ அம்பாள் வீரன் புவிந்திரன் தனக்கு கிடைத்த பந்தை முதல் கோலாக மாற்றினார். ஆதிசக்தி வீரன் யோகன் ஆட்டத்தின் 42ஆவது நிமிடத்தில் தனக்கு மீண்டும் கிடைந்த பந்தை கோலாக மாற்றினர். ஆட்ட முடிவில் ஆதிசக்தி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்த்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இரண்டு அணியினரும் ஆட்டம் தொ யது முதல் ஆட்டம் முடிவடையும் வரை எதுவித கோல்களயும் பெறாதமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வி காண்பதற்காகச் சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் உடுப்பிட்டியுத் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம்,பெப் 14

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் ஆண், பெண் இரு பாலாருக்குமான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக (அலுமின்) அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் (சொக்ஸ்) விளையாட் டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(த-23)




**வேலையாள்கள் தேவை**

வோட்ச், ரேடியோ, விற்பனை நிலையம் ஒன்றுக்கு
- விற்பனையாளர்
- கணக்காளர் - கணினி அறிவு

ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
யாழ் நகரை அண்டிய பகுதியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சுயவிவரக் கோவையுடன் நேரடியாகச் சமுகம் தரவும்.

நேர்முகத் தேர்வு :- நாளை (15.02.2015) ஞாயிற்றுக்கிழமை

நேரம் :- 9.00 a.m

இடம்: இல 26, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P :- 021 222 6807 (56745) (3,5,7)

**ஒத்துமாறல்**

கொழும்பு வலயத்திலுள்ள பிரபல அரச பாடசாலையில் கற்பிக்கும் விஞ்ஞான பாட ஆசிரியர் வடமராட்சி வலயத்திலுள்ள அதே பாட ஆசிரியருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு:
077 899 1173
(64199) (3.5.8)

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.